பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர்கள் இலக்கம்: 343

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் ஏழாவது பாராளுமன்றத்தின் (முதலாவது அமர்வு)

இரண்டாவது இடைக்கால அறிக்கை (2014 .05.07 ஆம் திகதி முதல் 2014.09.26 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கானது)

பொதுத் தொழில்முயற்சிகள் பற்றிய குழு

2014 நவம்பர் 14 ஆம் திகதி
குழுவின் தவிசாளர்
கௌரவ டியூ குணசேக்கர அவர்களினால்
சமர்ப்பிக்கப்பட்டது.

இலங்கைப் பாராளுமன்றத்தினால் அச்சிடுவதற்கு 2014 நவம்பர் 14ஆம் திகதி உத்தரவிடப்பட்டது.

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் கௌரவ உறுப்பினர்கள்
ஏழாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர்

01. **கௌரவ டியூ. குணசேகர (தவிசாளர்)**
02. கௌரவ (திருமதி) பவித்ராதேவி வன்னி ஆராச்சி
03. கௌரவ ஏ.டி. சுசில் பிரேமஜயந்த
04. கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன
05. கௌரவ சந்திரசிறி கஜதீர
06. கௌரவ ஏ.பீ. ஜகத் புஷ்பகுமார
07. கௌரவ ரி.பி. ஏக்கநாயக்க
08. கௌரவ மஹிந்த அமரவீர
09. கௌரவ எஸ்.எம். சந்திரசேன
10. கௌரவ (கலாநிதி) மேர்வின் சில்வா
11. கௌரவ லசந்த அலகியவன்ன
12. கௌரவ வீரகுமார திசாநாயக்க
13. கௌரவ சரண குணவர்தன
14. கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல
15. கௌரவ கரு ஜயசூரிய
16. கௌரவ ரவி கருணாநாயக்க
17. கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்
18. கௌரவ பி.ஹரிசன் (2014.09.24 முதல்)
19. கௌரவ சஜித் பிரேமதாஸ
20. கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி
21. கௌரவ அர்ஜுன ரணதுங்க
22. கௌரவ எம்.ரி. ஹஸன் அலி
23. கௌரவ அ. விநாயகமூர்த்தி
24. கௌரவ ஹரின் பெர்னாந்து (2014.08.05 வரை)
25. கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்
26. கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன்
27. கௌரவ நாமல் ராஜபக்ஷ
28. கௌரவ இரான் விக்கிரமரத்ன
29. கௌரவ (பேராசிரியர்) ரஜீவ விஜேசிங்க
30. கௌரவ ஈ. சரவணபவன்
31. கௌரவ சுஜீவ சேனசிங்க
32. கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவினது உபகுழு I இன் உறுப்பினர்கள்

01. **கௌரவ ஏ.டி. சுசில்பிரேமஜயந்த (தவிசாளர்)**
02. கௌரவ (திருமதி) பவித்ராதேவிவன்னிஆராச்சி
03. கௌரவ (டாக்டர்) ராஜிதசேனாரத்ன
04. கௌரவசந்திரசிறிகஜதீர
05. கௌரவரி.பி. ஏக்கநாயக்க
06. கௌரவமஹிந்தஅமரவீர
07. கௌரவலஷ்மன்கிரிஎல்ல
08. கௌரவரவிகருணாநாயக்க
09. கௌரவ பி.ஹரிசன் (2014.09.24 முதல்)
10.கௌரவ ஹரின் பெர்னாந்து (2014.08.05 வரை)
11. கௌரவசுஜீவசேனசிங்க

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவினது உபகுழு II இன் உறுப்பினர்கள்

01. **கௌரவ கருஜயசூரிய(தவிசாளர்)**
02. கௌரவ ஏ.பீ. ஜகத்புஷ்பகுமார
03. கௌரவ எஸ்.எம். சந்திரசேன
04. கௌரவ (கலாநிதி) மேர்வின்சில்வா
05. கௌரவ சரணகுணவர்தன
06. கௌரவ வீரகுமாரதிசாநாயக்க
07. கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்
08. கௌரவ சஜித் பிரேமதாஸ
09. கௌரவ சுனில்ஹந்துன்னெத்தி
10. கௌரவ நாமல்ராஜபக்ஷ

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவினது உபகுழு III இன் உறுப்பினர்கள்

01. **கௌரவ லசந்த அலகியவன்ன (தவிசாளர்)**
02. கௌரவஅர்ஜுனரணதுங்க
03.கௌரவஎம்.ரி .ஹஸன்அலி
04. கௌரவ அ. விநாயகமூர்த்தி
05. கௌரவ (வண.) அதுரலியேரதனதேரர்
06. கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன்

07. கௌரவ இரான்விக்கிரமரத்ன

08. கௌரவ (பேராசிரியர்) ரஜீவவிஜேசிங்க

09. கௌரவ ஈ. சரவணபவன்

10. கௌரவ (திருமதி) ரோஸிசேனாநாயக்க

பொதுத் தொழில்முயற்சிகள் பற்றிய பின்னூட்டல் குழு உறுப்பினர்கள்

01. **கௌரவ மஹிந்த அமரவீர (தவிசாளர்)**
02. கௌரவ இரான்விக்கிரமரத்ன
03. கௌரவ (பேராசிரியர்) ரஜீவவிஜேசிங்க

உள்ளடக்கம்

* தவிசாளரின் குறிப்பு ix
* முன்னுரை xi
* ஒரே பார்வை வரலாறு xiii
* அறிமுகம் 1
* போதிய வெளிப்படைத்தன்மையற்ற பாரியளவான கொடுக்கல்வாங்கல்கள் 3
* பொது அவதானிப்புகள் 7
* சிபாரிசுகள் 13
* விசாரணை செய்யப்பட்ட நிறுவனங்களின் நிதி நிலைகள் 17
* பாராளுமன்றத்திற்கு வருடாந்த அறிக்கைகளை சமர்பித்தல் பற்றிய நிலை 21
* வருடாந்த கணக்குகள் மீதான கணக்காய்வாளர் அதிபதியின் அபிப்பிராயம் 23
* பிரதான குழுவினால் விசாரிக்கப்பட்ட நிறுவனங்கள் 27
  - இலங்கை மத்திய வங்கி 29
  - இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 30
  - இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகம் 33
  - விவசாய கமநல காப்புறுதி சபை 34
  - இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் 35
  - இலங்கை மின்சார சபை 37
  - இலங்கைத் துறைமுகங்கள் அதிகார சபை 39
  - சபரகமுவ பல்கலைக்கழகம் 42
  - இலங்கை வெளிநாட்டுத் தொழில்வாய்ப்புப் பணியகம் 43
  - வரையறுக்கப்பட்ட லங்கா சதொச 43
  - **அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்** 45
  - சிலோன் பெற்றோலியம் சேவிஸெஸ் டேர்மினெல் லிமிற்றட் 47
  - தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு 49

சபை

- மத்திய பொறியியலு உசாதுணைப் பணியகம் 50
- தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் 51
- மில்கோ நிறுவனம் 53
- UGC (ஓய்வூதிய சேலாப நிதியம்) 55
- ஸ்ரீ லங்கா எயார் லைன்ஸ் லிமிற்றட் 56
- வரையறுக்கப்பட்ட தேசியக் கடதாசிக் கூட்டுத்தாபனம் 57
- வீதி அபிவிருத்தி அதிகர சபை 60
- இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம் 63
- மத்திய சுற்றாடல் அதிகார சபை 66
- இலங்கைக் கிரிகெட் 66
- இலங்கை சுற்றுலா ஹோட்டல் நிறுவகம் 68
- யாழ்ப்பாண பல்கலைக்கழகம் 70

* **உப குழு I ஆல் விசாரணை செய்யப்பட்ட நிறுவனங்கள்** 73

- இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனம் 75
- சுதேசிய மருத்துவ நிறுவகம் (கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த) 75
- தேசிய நூலக தகவல் விஞ்ஞான மன்றம் 76
- தொழில்நுட்ப நிறுவகம்-மொரட்டுவைப் பல்கலைக்கழகம் 77
- தேசிய மனித வளங்கள் அபிவிருத்தி சபை 78
- வாழ்க்கைத்தொழில் பயிற்சி அதிகார சபை 80

* **உப குழு II ஆல் விசாரணை செய்யப்பட்ட நிறுவனங்கள்** 82

- சலசினே ரெலிவிஷன் நிறுவனம் 85
- இலங்கைப் பத்திரிகை சங்கம் 87
- அறுவடைக்குப் பின்-தொழில்நுட்ப நிறுவகம் 88
- இலங்கைத் தேசிய பட்டினி ஒழிப்பு சபை 90
- கூட்டுஆதன முகாமைத்துவ அதிகார சபை 91

- நகர குடியேற்ற அபிவிருத்தி அதிகார சபை 92
- தென்னை ஆராய்ச்சி சபை 93

* **உப குழு III ஆல் விசாரணை செய்யப்பட்ட நிறுவனங்கள்** 95

- தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம் 97
- ஊனமுற்றோருக்கான தேசிய செயலகம் 98
- வரையறுக்கப்பட்ட கொழும்பு உரக் கூட்டுத்தாபனம் 100
- பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு 101
- இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழு 102
- ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகாரச் சபை 103
- கடல் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபை 104
- இரத்தினக்கல் ஆபரண ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவகம் 106

தவிசாளரின் குறிப்பு

எனது நம்பிக்கைக்கு எட்டிய வகையில் பொதுத் தொழில்முயற்சிகள் பற்றிய குழு 2014 ஆம் ஆண்டு மே மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரையான காலப் பகுதிக்கான தனது இரண்டாவது அறிக்கையை பாராளுமன்றத்திற்கு இத்தால் ஆற்றுப்படுத்துகின்றேன்.

இதற்கு முன்னர், பொதுத் தொழில்முயற்சிகள் பற்றிய குழு பாராளுமன்றத்திற்கு நான்கு அறிக்கைகளை (அதாவது 02 இறுதி அறிக்கைகளையும் 02 இடைக்கால அறிக்கைகளையும்) சமர்ப்பித்துள்ளது. இதன் ஐந்தாவது அறிக்கை அல்லது மூன்றாவது இறுதி அறிக்கை 2014 ஆம் ஆண்டு இறுதியளவில் சமர்ப்பிக்கப்படும்.

ஏழாவது பாராளுமன்ற அமர்வுகளின் போது (2010 ஆம் ஆண்டு தொடக்கம்) பொ.தொ.குழுவுக்கு தனது செயல்நோக்கின் கீழ் வருகின்ற சகல நிறுவனங்கள் தொடர்பிலும் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளை 04 வருட காலப் பகுதியினுள் மூன்று தடவைகள் பரிசீலிப்பதற்கு முடிந்துள்ளது. இது எமது பாராளுமன்ற வரலாற்றில் அழியாத ஒரு சாதனையாக விளங்குகின்றது.

இலங்கையின் பொருளாதாரத்தில் பொதுத் துறை விரிவடைந்ததன் பயனாக பொதுத் தொழில்முயற்சிகள் பற்றிய குழு என்ற ரீதியில் ஒரு மேற்பார்வைக் குழுவுக்கான தேவை எழுந்தது. அமைச்சுக்கள் மற்றும் அரசாங்கத் திணைக்களங்கள் தவிர ஏனைய அனைத்து நிறுவனங்களும் (244 நிறுவனங்கள்) பொ.தொ.கு. செயல்நோக்கின் கீழ் வருவனவாகும். குழு விடுத்த ஒரு பணிப்புரையின் பேரில், கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட அரச உடமைக் கம்பனிகளும் பொ.தொ.கு. மேலான பரிசீலனையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. நியாயமான ஒரு அரச மூலதன விகிதத்தைக் கொண்டுள்ள கம்பனிகளும் கூட இந்த பொ.தொ.கு. கண்ணோட்டத்தில் வருகின்றனவாகும்.

இந்தக் குழுவுக்கு குறித்தொதுக்கப்பட்ட பாரிய வேலைப்பளுக்களுக்கும் அதிகரித்து வருகின்ற பணி பரிமாணத்திற்கும் மத்தியில் பொ.தொ.குழுவுக்கு மக்களின் பாராட்டுக்களைப் பெற்று தனது சட்டமுறையான பணிக் கடமைகளை சுமுகமான முறையில் நிறைவேற்ற முடிந்துள்ளது.

பொ.தொ.கு. மதிப்பு தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் பராட்டத்தக்களவில் மேம்பட்டுள்ளது. எமது அயல் பல நாடுகளினது பாராளுமன்றங்கள் அவற்றின் மேற்பார்வைக் குழு தொடர்பில் எமது ஒத்துழைப்பை நாடின.

பொ.தொ.கு. அதிகாரத்தையும் ஆற்றலையும் வலுப்படுத்தும் பொருட்டு நிலையியல் கட்டளைகளைத் திருத்துவது தொடர்பில் எம்மிடமுள்ள நிலையான தேவையை இத்தருனத்தில் வலியுறுத்த விரும்புகின்றேன்.

அரச துறையின் நிதிக் கட்டுப்பாட்டைப் பொறுத்த வரையில், பொ.தொ.கு. இது வரை நல்லாட்சியை மேம்படுத்துவதை நோக்கி பாராட்டத்தக்களவில் பங்களிப்புச் செய்துள்ளது மற்றும் நடவடிக்கையை எடுத்துள்ளது என நான் நம்புகின்றேன்.

பொ.தொ.கு. அதன் ஊழியர்களின் உன்னத தரமான செயலாற்றுகைக்காக தனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றது. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் திணைக்களம், பொதுத் தொழில்முயற்சிகள் திணைக்களம் மற்றும் பொதுத் திறைசேரியின் தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களம் என்பன நல்கிய ஒத்துழைப்பையும் நான் இங்கு பெரிதும் மதிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

எமது குழுவின் பணியை மிகவும் வினைத்திறன் வாய்ந்தாகவும் பயனுள்ளதாகவும் ஆக்கும் வகையில் முன்னாள் கணக்காய்வாளர் அதிபதி திரு எச்.ஏ.எஸ். சமரவீர அவர்கள் நல்கிய குழு மனமார்ந்த பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றது. அவரது பதவி காலத்தில் குழுவின் பணி துரிதமாகவும் விரைவாகவும் நிறைவேற்றப்பட்டது என்பதை இங்கு விஷேடமாகக் குறிப்பிடுவது அவசியமாகும். குழு அவருக்கு, மகிழ்ச்சியான மற்றும் இனிமையான ஓய்வூதிய வாழ்க்கைக்காகப் பிரார்த்தனை செய்கின்றது.

டியூ குணசேக்கர (பா.உ)
தவிசாளர்
பொது முயற்சிகள் பற்றிய குழு

முன்னுரை

அரசியலமைப்பின் 148 ஆம் உறுப்புரை இலங்கைப் பாராளுமன்றத்திற்கு அரசாங்க நிதி மீது முழுமையான கட்டுப்பாட்டைப் பிரயோகிப்பதற்கு அதிகாரத்தத்துவத்தை அளித்துள்ளது. ஆதலால் எந்த ஒரு உள்ளூர் அதிகார சபைக்கும் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்படும் ஒரு சட்ட அதிகாரமின்றி எந்த ஒரு வரியையோ அல்லது கட்டணத்தையோ விதிக்க முடியாது.

பல அரசியலமைப்பு ஏற்பாடுகளின் மூலம் நிறைவேற்றுநர் தரப்புகள் பாராளுமன்றத்திற்குப் பொறுப்புக் கூறுவதற்குக் கடமைப்படுத்தப்பட்டுள்ளன. பாராளுமன்ற ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூலம் ஒதுக்கப்படும் மக்களின் நிதிகளை உத்தேச நோக்கங்களுக்காக அரசாங்கம் செலவு செய்கின்றதா, செலவு செய்யும் அந்த நிதிக்கான உரிய பெறுமானம் அடையப்படுகின்றதா என்பது பற்றி அறிந்துகொள்வதற்கு பாராளுமன்றம் முழு உரிமையையும் கொண்டுள்ளது.

பொதுத் தொழில்முயற்சிகள் பற்றிய குழுவானது பொதுக் கூட்டுத்தாபனங்களின் அல்லது பாராளுமன்ற முன்னிலையில் விதிக்கப்படும் ஒரு சட்டத்தினால் உருவாக்கப்பட்ட ஏனைய ஏதாவது வர்த்தக நிறுவனங்களின் கணக்குகளைப் பரிசீலிப்பதற்கு 126-வது நிலையியல் கட்டளையினால் அதிகார ஆணை வழங்கப்பட்டுள்ளதால் இந்த மேற்பார்வை நடபடிமுறையில் முக்கியமான ஒரு வகிபங்கை வகிக்கின்றது.

பொதுத் தொழில்முயற்சிகள் பற்றிய இந்தக் குழு (பொ.தொ.கு.) 1979 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இந்தக் குழு தொடர் முயற்சியினுடாக அரச நிறுவனங்களின் சிறந்த நிருவாக நடவடிக்கையை மேம்படுத்தும் பொருட்டு அண்மை காலத்தில் மேற்கொண்ட அதன் கணிசமான பங்களிப்பின் காரணமாக மக்கள் மத்தியில் ஒரு குடும்ப நாமமாக மாறியுள்ளது.

ஏழாவது பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வுக்காக நியமிக்கப்பட்ட தங்களது குழு நான்கு வருட காலப் பகுதியினுள் இது வரை இரண்டு வருடாந்த அறிக்கைகளையும் இரண்டு இடைக்கால அறிக்கைகளையும் ஆற்றுப்படுத்தியுள்ளது. 2014 ஆம் ஆண்டிற்கான இறுதி அறிக்கையாகிய இதனது ஐந்தாவது அறிக்கை 2014 ஆம் ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்படும்.

புதிதாக நியமிக்கப்பட்ட பின்னூற்றல் பற்றிய குழுவானது இந்தக் குழுவின் மிக அண்மை கால புத்தாக்கமாக விளங்குகின்றது. பொ.தொ.கு. மூலம் விடுக்கப்படும் பணிப்புரைகளும் முன்வைக்கப்படும் சிபாரிசுகளும் உரிய நேரத்தில் செயற்படுத்தப்படுகின்றனவா என்பதை உறுதிசெய்துகொள்ளும் நிமித்தம் இந்தக் குழு அமைக்கப்பட்டது.

2014 ஆம் ஆண்டிற்கான முதலாவது இடைக்கால அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சிலிருந்து கிடைத்த துரித பதிலை குழு பெருமிதத்துடன் வரவேற்கும் அதே நேரம் குழுவின் மூலம் விடுக்கப்பட்ட பணிப்புரைகளினதும் சிபாரிசுகளினதும் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டமை தொடர்பில் பாராட்டையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றது. பாராளுமன்றத்தினால் அனுமதிக்கப்படும் பொது நிதிகள் சரியான முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளனவா, உத்தேச குறிக்கோள்கள் அடையப்பட்டுள்ளனவா என்பதை நிச்சயப்படுத்திக்கொள்வது பொறுப்புக்கூறும் பிரதான அலுவலர்களாக விளங்குகின்ற அமைச்சுக்களுக்கான செயலாளர்களின் பொறுப்பு என்பதை இங்கு குறிப்பிட வேண்டும். அரசியல் அதிகார செல்வாக்கினால் ஏதாவது முறைகேடு ஏற்படுமானால் அல்லது அமைச்சின் இணக்கப்பாடின்றி நிறுவனங்களினால் அடிக்கடி தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுமானால் அந்தச் செயலாளர்களுக்கு நிதி மீதான கட்டுப்பாட்டு அதிகாரம் உரித்தளிக்கப்பட்டிருப்பதால் அவர்கள் குற்றவாளிகளாகவே கணிக்கப்படுவார்கள்.

ஒரே பார்வை வரலாறு

பொதுத் தொழில்முயற்சிகள் பற்றிய குழு 1977 ஆம் ஆண்டில் பொருளாதாரக் கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டதன் பின்னர் அதிகமான பொதுத் தொழில்முயற்சிகள் பொருண்மைப்படுத்தலின் ஒருங்கிசைவைத் தொடர்ந்து 1979 ஆம் அமைக்கப்பட்டது.

இதன் கடந்த 35 வருட காலமாக அரச துறையில் நல்லாட்சியை மேம்படுத்துவதற்காக உன்னத சேவையை வழங்கிய பின்வரும் மதிப்புக்குரிய பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் குழுவுக்குத் தலைமை தாங்கி வந்துள்ளனர்.

பாராளுமன்றம்	தவிசாளர்	பணியாற்றிய காலம்	அறிக்கைகளின் எண்ணிக்கை	விசாரணைகளின் எண்ணிக்கை
முதலாவது பாராளுமன்றம்	கௌரவ ஜோஜ் அபேகுணசேக்கர	07.09.1978-04.01.1981	-	-
	கௌரவ எம்.எஸ். அமரசிறி	21.01.1981-27.03.1984	04	109
	கௌரவ ஜே.ஏ.ஈ. அமரதுங்க	09.04.1984-22.01.1988	06	124
	கௌரவ (கலாநிதி) விமல் விக்ரமசிங்க	25.02.1988-20.12.1988	01	16
இரண்டாவது பாராளுமன்றம்	கௌரவ ஜே.ஏ.ஈ. அமரதுங்க	20.03.1989-25.10.1993	03	106
	கௌரவ ரொஹான் அபேகுணசேக்கர	25.10.1993-24.06.1994	02	21
மூன்றாவது பாராளுமன்றம்	கௌரவ டீ.பி. விக்ரமசிங்க	25.08.1994-01.07.1997	-	-
	கௌரவ ரெஜீ ரணதுங்க	03.07.1997-18.08.2000	01	23
நான்காவது பாராளுமன்றம்	கௌரவ ஜே.ஏ.ஈ. அமரதுங்க	09.11.2000-10.07.2001	01	07
ஐந்தாவது பாராளுமன்றம்	கௌரவ ஜெயராஜ் பெர்னாந்துப்புள்ளே	07.03.2002-07.02.2004	02	84
ஆறாவது பாராளுமன்றம்	கௌரவ ரோஹித்த போகொல்லாகம	07.10.2004-21.11.2005	03	64
	கௌரவ விஜேதாச ராஜபக்ஷ	04.07.2006- 23.07.2008	02	96
	கௌரவ டப்ளியூ.டீ.ஜே. செனவிரத்ன	23.07.2008-09.02.2010	01	20
ஏழாவது பாராளுமன்றம்	கௌரவ டியூ குணசேக்கர	22.04.2010- முதல் இன்று வரை	05	598

அறிமுகம்

ஏழாவது பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வுக்கான பொதுத் தொழில்முயற்சிகள் பற்றிய குழு 2014 ஆம் ஆண்டிற்கான தனது 2-வது இடைக்கால அறிக்கையை இத்தால் ஆற்றுப்படுத்துகின்றது.

2014 ஆம் ஆண்டு மே மாதம் 07 ஆம் திகதி முதல் 2014 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் விசாரணை செய்யப்பட்ட 46 பொதுத் தொழில்முயற்சிகள் தொடர்பான குழுவின் சிபாரிசுகளும் முடிவுகளும் இந்த அறிக்கையின் உள்ளடக்கத்தில் அடங்குகின்றன. 2011 ஆம் மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கணக்காய்வு அறிக்கைகளின் அடிப்படையில் குழுவின் அவதானிப்புகளும் முடிவுகளும் அமைந்திருந்தன. நிறுவனங்களின் செயலாற்றுகையானது பரிசீலனைத் திகதியிலிருந்த நிறுவனங்களை மாத்திரமே பிரதிபலிக்கின்றது.

இந்த அறிக்கையானது பா.உ. கௌரவ டியூ குணசேக்கர அவர்கள் தலைமை வகிக்கும் பிரதான குழுவினதும், கௌரவ ஏ.டீ. சுசில் பிரேம ஜயந்த, கௌரவ கரு ஜயசூரிய, கௌரவ லசந்த அழகியவன்ன மற்றும் கௌரவ மஹிந்த அமரவீர ஆகியோர் தலைமை வகிக்கும் நான்கு உப குழுக்களினதும் கூட்டுப் பணியின் பயனாக வந்ததாகும்.

இந்த அறிக்கை 46 நிறுவனங்கள் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விதிமுறைகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுடன் ஒவ்வாமை சந்தர்ப்பங்கள், வினைத்திறனின்மைகள், வெளிப்படைத்தன்மையற்ற கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் குழுவினால் வழங்கப்பட்ட சிபாரிசுகள் மற்றும் விடுக்கப்பட்ட பணிப்புரைகள் என்பவற்றை வெளிப்படுத்துகின்றது.

2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகள் தொடர்பான நிதி நிலையானது வாசகர்களுக்கு நிறுவனங்களின் செயலாற்றுகை பற்றிய சிறந்த புரிந்துணர்வை ஏற்படுத்துகின்றது. 2012 ஆம் ஆண்டிற்கான கணக்கு மீது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயமும் அந்த நிறுவனங்களின் கணக்குகளின் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட நிலைமை தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் நிலையை வாசகர்கள் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பொதுத் தொழில்முயற்சிகள் அனைத்தும் தமது வருடாந்தக் கணக்குகளை உரிய நேரத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கக் கடமைப்பட்டுள்ளதால் இந்த ஒழுங்குவிதியைப் பின்பற்றி நடப்பதற்கு ஏதேனும் ஒரு நிறுவனம் தவறுமாயின் பொறுப்புக்கூறும் தன்மை கருத்திற்கொள்ளப்படுகின்ற போதெல்லாம் அது

கடுமையான ஒரு குறைபாடாகவே கருதப்படும். ஆகையால், இந்த அறிக்கை 2011 2012, 2013 ஆம் ஆண்டுகளுக்கான தமது வருடாந்த அறிக்கைகளை இன்னும் பாராளுமன்றத்தில் ஆற்றுப்படுத்தாத நிறுவனங்களை தனித்தனியாக சுட்டிக்காட்டுகின்றது.

பொ.தொ.கு. இன் ஒவ்வொரு குழுவினாலும் விசாரணை செய்யப்பட்ட 46 நிறுவனங்கள் பின்வருமாறு காணப்படும்.

குழு	நிறுவனங்களின் எண்ணிக்கை
பிரதான குழு	25
உப குழு - I	06
உப குழு - II	07
உப குழு - III	08
மொத்தம்	**46**

போதிய வெளிப்படைத்தன்மையற்ற பாரியளவான கொடுக்கல்வாங்கல்கள்

(இந்த அவதானிப்புகள் விசாரணைத் திகதியிலிருந்த நிலையை மாத்திரம் விளக்கப்படுத்துவதாக அமைகின்றன).

01. 2010 ஆம் ஆண்டில் **இலங்கைக் கிரிகெட் சபையினால்** அனுபவிக்கக்கூடிய உள்ளூர் தொலைக்காட்சி ஒலிபரப்பு உரிமைகளை வழங்குவது தொடர்பான முழுமொத்தக் கொள்வனவு நடபடிமுறையும் வெளிப்படைத்தன்மையுடையதாகவில்லை. பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) கேள்வி அறிவித்தல் போதியளவில் விளம்பரப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதனால் செய்திப்பத்திரிகையின் தொழில்வாய்ப்பு நிரலின் கீழ் மாத்திரமே ஒரு சிறு விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. விளம்பரம் திட்டமிடப்பட்டிருந்த விதத்தின் காரணமாக அக்கறையுடைய தரப்புகளின் கவனம் அந்த விளம்பரத்தின் பால் ஈர்க்கப்பட்டிருந்ததா என்பது சந்தேகத்திற்குரியதாகும்.

(ii) கேள்வி அறிவித்தலுக்கு பதிலளிக்கும் வகையில் போதிய காலம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(iii) கேள்வி அறிவித்தலுக்குப் பதிலளித்து ஒரேயொரு கேள்வி விலை மனு மாத்திரமே கிடைத்திருந்தது.

(iv) கேள்வி முறி மற்றும் தாமதித்த கொடுப்பனவுகள் என்பன தொடர்பான ஒப்பந்தத்தில் வாசகங்கள் சேர்க்கப்பட்டிருக்கவில்லை.

(v) இலங்கைக் கிரிகெட் சபையின் செயலாளர் அந்தக் கம்பனியின் நிறைவேற்று அலுவலராக இருக்கின்ற பட்சத்தில் கேள்வி விலை மனுவை கேள்வி விலை மனுவை அந்தக் கம்பனி தனதாக்கிக்கொண்டமை ஒரு தெளிவான அக்கறை முரண்பாட்டு விடயமாகும்.

02. ஆரம்ப மதிப்பீடு 2.5 மில்லியன் ரூபாவாக இருக்கின்ற போதிலும் சமுத்ரா ஹோட்டலிலுள்ள 13 ஹோட்டல் அறைகளின் புதுப்பித்தல் பணி சம்பந்தமான கேள்வி ஒப்பந்தம் அறையொன்றுக்கு 3.9 மில்லியன் ரூபா வீதத்தில் **இலங்கை ஹோட்டல் சுற்றுலா முகாமைத்துவ நிறுவகத்தினால்** வழங்கப்பட்டிருந்தது. எனினும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்தத் தரப்பு உரிய நியமத்தின் பிரகாரம் அந்த புதுப்பித்தல் பணிகளை நிறைவேற்றத் தவறியிருந்தது. இவ்வாறிருந்தபோதிலும் கணக்காய்வு அவதானிப்புகள் பாராதீனப்படுத்தப்பட்டு இறுதிக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

03. பசளை மானியத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிப்பதற்காக கொழும்பு உரக் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்ட 388 மில்லியன் ரூபா பெறுமதியான (மானியம் நீங்கலாக) 5000 மெ.டொ. பசளையை

அனுராதபுரத்திலுள்ள ஒரு தொகை விநியோகத் தரப்பு 2008 ஆம் ஆண்டில் காணாமல் செய்தமை தொடர்பான மோசடி பற்றிய விசாரணை 06 ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டு வந்தாலும் கூட, அது 2014 ஆம் ஆண்டு வரையிலும் நிறைவு செய்யப்படாமலிருந்தமை அவதானிக்கப்பட்டது.

அரச சார்பற்ற ஒரு நிறுவமாகப் பதிவுசெய்யப்பட்டிருந்த உரிய நிலையத்திற்கு பசளை ஒப்படைக்கப்பட்ட போது எந்தவொரு உடன்படிக்கையும் செய்துகொள்ளப்படவில்லை என்ற விடயம் மேலும் அவதானிக்கப்பட்டது.

04. கோgல் பேfஸ் க்gறீன் மென் குளிர்பான ஏகபோக விற்பனை நிலையம் ஒரு தனியார் கம்பனியாகப் பதிவு செய்யப்பட்டதன் மூலம் இலங்கைத் துறைமுகங்கள் அதிகார சபையின் ஒரு தொழில் சங்கத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. பின்னர் அந்த நிலையம் அதிகார சபையின் அங்கீகாரத்தைப் பெறாமல் 5 மில்லியன் ரூபாவுக்கு ஒரு வெளிக்களக் கம்பனிக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது (குறிப்பு - 2012 செயலாற்றுகை).

05. 2012 ஆம் ஆண்டில் விற்பனை செய்யப்பட்ட ஏறக்குறைய 40 மில்லியன் ரூபா பெறுமதியான பழை உடைந்த இரும்புகள் வ/ப தேசிய பத்திரிகைக் கூட்டுத்தாபனம் 16 மில்லியன் ரூபாவை மாத்திரமே பெற்றிருந்தது. இந்தக் கொடுக்கல்வாங்கல் தொடர்பில் கணிசமான ஏற்கப்படாத காசோலைகள் பெறப்பட்டிருந்தன.

06. இலங்கைத் துறைமுகங்கள் அதிகார சபையிலிருந்து கிடைத்த 444 மில்லியன் ரூபா நிதியையும் டென்மார்க்கின் DANIDA முகவராண்மையிலிருந்து கிடைத்த 6,780 மில்லியன் ரூபா நிதியையும் செலவு செய்ததன் மூலம் ஒலுவில் துறைமுகத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருந்த போதிலும் அதன் இயக்கச்செயற்பாட்டு நடவடிக்கைகள் 2014.06.04 ஆம் திகதி விசாரணை முடிந்த போதும் கூட இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. மேலும், அந்தத் துறைமுகம் ஏறக்குறைய 9 மீற்றர் அளவில் ஆழம் குறைவாக இருப்பதால் அதில் சிறிய கப்பல்களுக்கு மாத்திரமே வசதியளிக்கக்கூடியதாகவுள்ளது என்பது தெரிய வந்துள்ளது(குறிப்பு - 2014 செயலாற்றுகை)

07. கொழும்புத் துறைமுகத்தின் வினைத்திறன் மேம்பாடு தொடர்பில் 391 மில்லியன் ரூபா செலவிடப்பட்டிருந்தது. எனினும் பின்னர் அரசாங்கத்தின் கொள்கைகள் மாற்றமடைந்ததாலும் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட கருத்திட்டம் கைவிடப்பட்டிருந்ததாலும் பயனளிக்காததாக மாறியிருந்தது.

08. குறிப்பீடுசெய்யப்பட்ட திகதிகளில் அச்சிடப்பட்ட புத்தகங்களை ஒப்படைக்கத் தவறியமை மற்றும் உரிய நியமங்களுக்கு ஏற்ப அந்தப் புத்தகங்கள் அச்சிடப்பட்டிருக்காமை ஆகியன தொடர்பில் 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தினால் தண்டப்பணமாக 54,889,800 ரூபா செலுத்தப்பட்டிருந்தது.

09. சபரகமுவப் பல்கலைக்கழகத்திற்கான ஒரு நிருவாகக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு ஆரம்பக் கொடுப்பனவாக 1,494,543 ரூபா செலுத்தப்பட்டிருந்தது. 2007 ஆம் ஆண்டில் இதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும், விசாரணை நடத்திய 2014.06.05 ஆம் திகதியிலும் கூட, ஒரு சட்டமுறைப் பிரச்சினையினால் குறித்த நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

10. புஸ்ஸல்லாவ உலப்பன வில்-வடிவ பாலத்தின் நிர்மாணத்திற்கு மதிப்பிடப்பட்ட 42 மில்லியன் ரூபா செலவில் 1999 ஆம் ஆண்டு அதற்கான கேள்வி ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. 34 மில்லியன் ரூபா செலவு செய்த பின்னர் 2003 ஆம் ஆண்டில் அதன் நிர்மாணப் பணிகள் நிறுத்தப்பட்டதனால், அதன் எஞ்சியிருக்கின்ற பணிகள் 75 மில்லியன் ரூபா செலவில் 2009.06.18 ஆம் திகதிக்கு முன்னர் நிறைவு செய்யப்படுதல் வேண்டும் என்ற நிபந்தனையில் அந்த ஒப்பந்தம் அரச அபிவிருத்தி நிர்மாணக் கூட்டுத்தாபனத்திற்கு மறுபடியும் வழங்கப்பட்டிருந்தது. எனினும் 2013.12.31 ஆம் திகதியிலும் கூட அந்த நிர்மாணப் பணி நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

பொது அவதானிப்புகள்

46 நிறுவனங்கள் தொடர்பில் குழுவினால் பொதுவாக மேற்கொள்ளப்பட்ட பல அவதானிப்புகள் கீழே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. உரிய நிறுவனங்களின் நிதி மற்றும் நிருவாக வினைத்திறனின்மைகளினால் அதிகமான முறைகேடுகள் ஏற்பட்டிருந்தன. முன்னை கூட்டத்தில் குழுவினால் ஏற்கெனவே பல பணிப்புரைகள் விடுக்கப்பட்டிருந்த போதிலும் ஒருசில விடயங்கள் மறுபடியும் அவதானிக்கப்பட்டன.

01. துணைக் கம்பனிகளை நிருவகிப்பதில் காட்டுப்பாடின்மை
02. அரச வளங்கள் தொடர்பான அரச கட்டணங்கள் கிடையாமை
03. சரியான ஒரு கூட்டிணைந்த திட்டமில்லாமை
04. செயல் திட்டத்தைத் தயாரித்துச் செயற்படுத்துவதில் பலவீனம்
05. பணி, பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்வனவில் குறைபாடுகள்
06. கணக்கீட்டுக் குறைபாடுகள்
07. தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத் தகவல் முறைமைகளின் போதிய பயன்பாடின்மை
08. சரியான முற்சாத்தியவள ஆய்வுகளின்றி கருத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டமை
09. கணக்கு நிலுவைகள் அதிகாரமின்றி பதிவழிக்கப்பட்டமை
10. காணி நிருவாகம் தொடர்பான பிரச்சினைகள்
11. சொத்துக்கள் முகாமையில் பலவீனங்கள்
12. முதலீடுகள் மீதான பங்குலாபங்கள் அறவிடப்படாமை
13. ஒப்பந்தங்கள் உடன்படிக்கைகள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள்
14. மூலதனக் குறைவு
15. நிறுவன சார் வழங்கள் ஏனைய அரச நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டமை
16. நீண்டகாலமாக கடன் நிலுவைகள் இருந்து வருகின்றமை

01. துணைக் கம்பனிகளை நிருவகிப்பதில் காட்டுப்பாடின்மை

மு.ச. மற்றும் ஏனைய வரி நன்மைகளைப் பெறும் பொருட்டு வழக்கமாக துணை நிறுவனங்கள் உருவாக்கப்பட்டிருந்த போதிலும் அரசாங்கக் கணக்காய்வு மேற்பார்வையிலிருந்து விலகி தப்பித்துக்கொள்ளும் ஒரு சூக்ஷமான விதத்தில் அந்த நிறுவனங்கள் தனித்தனியாக உருவாக்கப் பட்டிருப்பதாகத் தென்படுகின்றன. தலைமை நிறுவனங்கள் அவற்றின் துணை நிறுவனங்கள் மீதான கட்டுப்பாட்டு அளவு பல சந்தர்ப்பங்களில் வறிதாகியுள்ளது. மேலும், அந்தத் துணை நிறுவனங்கள் அவற்றின் சொந்த உப நிறுவனங்களை உருவாக்கும் நடவடிக்கைத்

தொடர்ந்திருந்தன. சில துணை நிறுவனங்கள் அவற்றுக்கு இலாபங்கள் இருந்தும் கூட பங்குலாபங்களை வெளிப்படுத்தியிருக்கவில்லை. இவற்றின் வருடாந்த அறிக்கைகளும் கூட சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

02. அரச வளங்கள் தொடர்பான அரச கட்டணங்கள் கிடையாமை

வீதி நிர்மாணங்களின் போது வழமையாக அகற்றப்படுகின்ற கருங்கற்கள், மண் முதலியன போன்ற ஒரு சில வளங்கள் தொடர்பில் அரச கட்டணங்கள் அரசாங்கத்திற்குச் செலுத்தப்படாதிருந்த சந்தர்ப்பங்களை குழு அவதனித்தது.

03. சரியான ஒரு கூட்டிணைந்த திட்டமில்லாமை

பொதுத் தொழில்முயற்சிகள் பற்றிய 12 ஆம் இலக்க சுற்றறிக்கை கூட்டிணைந்த திட்டத்தைத் தயாரிப்பதற்குத் தெளிவான வழிகாட்டல்களை நிறுவனங்களுக்கு வழங்குகின்றது. எனினும், குழு நிறுவனங்களினால் அதற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த அதிகமான கூட்டிணைந்த திட்டங்கள் உரிய காலத்தில் இற்றைப்படுத்தப்படாதவையாகவும் திறைசேரியினால் விதிக்கப்பட்ட நியமங்களை அனுசரிக்காதவையாகவும் இருப்பதை அவதானித்தது. மேலும், தயாரிக்கப்பட்ட அந்தக் கூட்டிணைந்த திட்டங்களுக்கு நிறுவனங்கள் அவற்றின் பணிப்பாளர்கள் சபைகளின் அங்கீகாரங்களைப் பெற்றிருக்காத சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன.

04. செயல் திட்டத்தைத் தயாரித்துச் செயற்படுத்துவதில் பலவீனம்

ஒரு சில நிறுவனங்கள் கூட்டிணைந்த திட்டத்திற்கு இணங்க செயல் திட்டங்களைத் தயாரித்திருக்கவில்லை. செயல் திட்டத்தில் காணப்படும் செயற்பாடுகளை செயற்படுத்துவதற்குப் பொறுப்பான அலுவலர்கள் குறிப்பிப்பட்டிருக்காத பல சந்தர்ப்பங்களும் அவற்றில் அவதானிக்கப்பட்டன. இது தவிர, குறிப்பீடுசெய்யப்பட்ட காலப்பகுதி முடிவிலும் கூட அதிகளவான செயற்பாடுகள் நிறைவு செய்யப்படாமலிருந்ததையும் குழு அவதானித்தது.

05. பணி, பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்வனவில் குறைபாடுகள்

வெளிப்படைத்தன்மையான ஒரு கேள்வி நடைமுறை பின்பற்றப்படாமை, கேள்வி விலை மனுக்கள் அழைக்கப்படாமல் கேள்வி ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டமை, தேவையற்ற தாமதங்கள் என்பன கொள்வனவு நடைமுறை தொடர்பில் அடிக்கடி எதிர்நோக்கப்பட்ட முறைகேடுகளாகும். சில நேரங்களில் கேள்வி அறிவித்தலுக்கு பதிலளிப்பதற்குக் கூட போதிய அவகாசம் வழங்கப்பட்டிருக்கவில்லை. நன்கொடை நிறுவனங்களின்

செல்வாக்கின் பேரில் கேள்வி ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன.

06. கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்படாமையின் காரணமாக அதிகமான கணக்கீட்டுக் குறைபாடுகள் இருந்திருந்ததையும் இதனால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கணக்குகள் மீது தெளிவான ஒரு அபிப்பிராயத்தை வெளியிடுவதற்கு கடினமாக இருந்ததையும் குழு அவதானித்தது. சரியான பேரேட்டுக் கணக்குகள் பேணப்படாமையின் காரணமாக வந்த பிழையான நிலுவைகள், இணக்கல்செய்யப்படாது நீண்டகாலம் இருந்து வருகின்ற நிறுலுவைகள், ஆவணங்களினதும் பதிவுகளினதும் எளிய பேணுகை, தகுதியற்றவர்களினால் பேரேட்டுப் பதிவுகள் பதியப்பட்டமை மற்றும் சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்படாமை என்பன அதிகமான கணக்கீட்டுத் தவறுகளுக்கு வழிவகுத்திருந்தன.

07. தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத் தகவல் முறைமைகளின் போதிய பயன்பாடின்மை

பயனுள்ள தீர்மானமெடுத்தல் மற்றும் வினைத்திறன் வாய்ந்த ரீதியில் பின்னூட்டலை மேற்கொள்ளல் என்பவற்றுக்கு உதவும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவத் தகவல் முறைமைகளில் இது வரை அரச துறை பின்தங்கிய நிலையில் காணப்படுவதுடன் அந்தத் தகவல் முறைமைகள் குறைந்தளவிலேயே பயன்படுத்தப்படுகின்றன. அதிகமான நிறுவனங்களில் பயனுள்ள ஒரு தரவுத் தளம் காணப்படுவதாகவில்லை. சில நேரங்களில் ஓய்வூதியங்கள் போன்ற குறிப்பிட்ட ஒரு தரவில் தகவல் முதலியவற்றை முறைமையினூடாக நேரடியாகத் தேடிக்காணும் சாத்தியம் காணப்படவில்லை.

08. சரியான முற்சாத்தியவள ஆய்வுகளின்றி கருத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டமை

ஒரு சில கருத்திட்டங்கள் செயற்படுத்தப்படுவதற்கு முன்னர் திருப்திகரமான சாத்தியவள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்காமையை குழு அவதானித்தது. சில கருத்திட்டங்கள் தொடர்பில் சற்றும் முற்சாத்தியவளப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. இதன் விளைவாக கருத்திட்டங்கள் கடுமையான சுற்றாடல் பிரச்சினைகளைத் தோற்றுவித்திருந்தன. சில கருத்திட்டங்கள் முன்கூட்டியே சந்தை வாய்ப்புக்களைக் கண்டறியாத காரணத்தினால் தோல்வியில் முடிவடைந்திருந்தன.

09. கணக்கு நிலுவைகள் அதிகாரமின்றி பதிவழிக்கப்பட்டமை

ஒரு சில நிறுவனங்கள் திறைசேரியின் அனுமதியின்றி சில கணக்கு நிலுவைகள் பதிவழிக்கப்பட்டுக் காணப்பட்டன. ஒரு சில கடன் நிலுவைகள் அவற்றை மீளறவிடுவதற்கு போதிய முயற்சிகள் மேற்கொள்ளப்படாமல் பதிவழிக்கப்பட்டுள்ளதை குழு மேலும் அவதானித்தது. நிரூபிக்கக்கூடிய ஆவணங்கள் கிடையாமை, உடன்படிக்கைகள் முடிவடைந்திருந்தமை, கணக்கீட்டுத் தவறுகள், கடன் நிலுவைகளைத் தேடிக் கண்டறிய முடியாமையினால் நிலுவைத் தொகைகளை அறவிடுவதற்கு முடியாதிருந்தமை என்பன அத்தகைய பதிவழிப்பு சந்தர்ப்பங்களுக்கு முக்கிய காரணங்களாக அமைந்தன.

10. காணி நிருவாகம் தொடர்பான பிரச்சினைகள்

பல நிறுவனங்களின் காணி நிருவாகம் தொடர்பில் கணிசமான பிரச்சினைகள் காணப்பட்டன. குத்தகைக்கு விடப்பட்ட காணிகளின் உரித்துடமையை நிரூபிப்பதற்கான பதிவு ஆவணங்கள் கிடையாமை, உரித்துடமையை மாற்றிக் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை மற்றும் குத்தகைக்கு காணிகளைப் பெற்ற தரப்புகள் அந்தக் காணிகளை வெளித் தரப்புகளுக்கு விற்பனை செய்திருந்த சந்தர்ப்பங்கள் என்பன இவற்றில் சிலவாகும். காணியின் உரித்துடமையை மாற்றிப் பெறாமல் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்த பல சந்தர்ப்பங்களை குழு மேலும் அவதானித்தது. காணியின் உரித்துடமையைப் பெற்றுக் கொள்ள இயலாத காரணத்தினால் ஒரு நிறுவனம் அத்தகைய ஒரு காணியில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தை தனது துண்டு விலையில் விற்பனை செய்வதற்கிருந்த ஒரு சந்தர்ப்பமும் காணப்பட்டது.

11. சொத்துக்கள் முகாமையில் பலவீனங்கள்

ஒரு சில நிறுவனங்களினது சொத்துக்கள் முகாமைத்துவம் திருப்திகரமான அளவில் காணப்படுவதாகவில்லை என குழுவுக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையிட்டுள்ளனர். நிலையான சொத்துக்கள் பதிவேடு சரியான முறையில் பேணப்பட்டிருக்கவில்லை. நிறுவனத்தில் கிடைக்கக்கூடிய சொத்துக்களை நிச்சயப்படுத்திக் கொள்ளும் வகையில் பௌதீக சொத்துக்கள் உறுதிப்படுத்தலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. வாடகை அடிப்படையில் சொத்துக்கள் வெளிக்களத் தரப்புகளுக்கு வழங்கப்பட்டிருந்த பல சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. எனினும் பல ஆண்டுகளுக்கு முன்னர் வழங்கப்பட்டிருந்த அந்தச் சொத்துக்களின் இருப்பு தொடர்பில் பௌதீக உறுதிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், வாடகைக்கு விடப்பட்ட அத்தகைய ஒரு சில சொத்துக்கள் தொடர்பான வாடகை வருமானமும்

பல ஆண்டுகளாக நிலுவையாக இருந்து வருகின்றது. சில சந்தர்ப்பங்களில் சொத்துக்கள் மீள்விலைமதிப்பீடு பாராதீனப்படுத்தப்பட்டிருந்தது. ஒரு சில சொத்துக்களின் வாடகை நீண்டகாலமாக மாறாமல் இருந்திருந்தன.

12. முதலீடுகள் மீதான பங்குலாபங்கள் அறவிடப்படாமை

ஒரு சில நிவனங்கள் முதலிட்டிருந்த கம்பனிகள் இலாபம் அடைந்த போதிலும் பல வர்த்தக நடவடிக்கைகளில் முதலிட்ட அவற்றின் முதலீடுகள் பேரில் பங்குலாபங்களைப் பெற்றிருக்காத சந்தர்ப்பங்களை குழு அவதானித்தது. பங்குலாபங்களை அறவிடுவதற்கு போதிய பின்தொடர் நடவடிக்கை சில நிறுவனங்களினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதையும் குழு அவதானித்தது.

13. ஒப்பந்தங்கள் உடன்படிக்கைகள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள்

வெளிக்களத் தரப்புகளுடன் ஒப்பந்தங்கள் மற்றும் உடன்படிக்கைகள் என்பன தொடர்பான பல பிரச்சினைகளை குழு அவதானித்தது. அக்கறை முரண்பாடு, குறிப்பீடுசெய்யப்பட்ட காலப்பகுதியினுள் பணிகள் நிறைவு செய்யப்படாமை அல்லது கைவிடப்பட்டமை மற்றும் ஒப்பந்தத் தரப்புகளின் மூலம் தரம் குறைந்த நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டமை என்பன இனங்காணப்பட்டன. அந்த நேரத்தில் சரியான ஒரு கேள்வி நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. கடன் கொடுக்கும் நிறுவனங்களின் செல்வாக்கின் பேரில் ஒரு சில ஒப்பந்தத் தரப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தன என்ற விடயத்தை கண்ககாய்வாளர்கள் குழுவுக்கு அறிவித்திருந்தனர். பிணை முறிகள் பெறப்படாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. பிரதிகூலமான ஒரு சில ஒப்பந்தங்கள் தொடர்பில் தெளிவான ஒரு வாசகம் இல்லாததால், அரசாங்கத்திற்கு கணிசமானளவு நட்டங்களை ஏற்க நேர்ந்தது.

14. மூலதனக் குறைவு

தொடர்ச்சியாக பாரிய நட்டங்கள் ஏற்பட்டதன் காரணத்தினால், ஒரு சில பாரிய நிறுவனங்களின் தேறிய சொத்துக்கள் நிலை கணிசமானளவில் வீழ்ச்சிகண்டிருந்தது. அரசாங்கத்தின் நிதி உதவியின்றி இந்த நிறுவனங்கள் தொடர்ந்தும் இயங்குவது என்பது கேள்விக்குரியதாகும். மேலும், இந்த நிறுவனங்கள் பாரிய நட்டங்களுடன் தொடர்ந்து இயங்குவது நாட்டின் சேமிப்பில் நேரடியான ஒரு தாக்கத்தைச் செலுத்தியுள்ளது.

15. நிறுவன சார் வழங்கள் ஏனைய அரச நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டமை

ஒரு சில நிறுவனங்களின் வளங்கள் குறிப்பாக ஊழியர்கள் மற்றும் வாகனங்கள் நிரல் அமைச்சுக்களுக்கும் ஏனைய நிறுவனங்களுக்கும்

அமைச்சரவையின் அங்கீகாரமின்றி விடுவிக்கப்பட்டுள்ளன. இது 2007 இன் 116 ஆம் இலக்க PED சுற்றறிக்கையை மீறிய ஒரு செயலாகும். எனினும், எரிபொருள், பராமரிப்பு சார்ந்த செலவுகள் மற்றும் சம்பளங்கள் என்பனவும் அந்த நிறுவனத்தினாலேயே பொறுப்பேற்கப்பட்டுள்ளன.

16. **நீண்டகாலமாக கடன் நிலுவைகள் இருந்து வருகின்றமை**

முன்னைய அறிக்கைகளில் அறிக்கையிடப்பட்டவாறு, ஐந்து வருடங்களுக்கும் மேலதிகமாக நிலுவையாக இருந்து வருகின்ற கடன் நிலுவைகளை மீளறவிடுவதற்கு அதிகமான நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளில் குழு திருப்தியடைவதாகவில்லை.

சிபாரிசுகள்

முன்னுரிமை விடயங்களாக அடையாளப்படுத்தப்பட வேண்டிய பின்வரும் விடயங்கள் தொடர்பில் கொள்கை ஆக்குநர்களின் விஷேட கருசனையை குழு எதிர்பார்க்கின்றது.

01. திறைசேரியின் பிரதிநிதிகளினது ஆட்சேபனைகளை பாராதீனப்படுத்தி விட்டு நிறுவனங்கள் தீர்மானங்களை மேற்கொள்ளும் சந்தர்ப்பங்கள் பற்றி திறைசேரி குழுவுக்கு எழுத்தில் அறிக்கையிடுதல் வேண்டும்.

02. அரச துறையில் அதிகளவான தொழில்தேர்ச்சியாளர்களை உள்ளீர்த்துக் கொள்வதற்கு சம்பளத் திட்டங்கள் திருத்தப்படுதல் வேண்டும்.

03. வெளிநாடுகளில் கல்விச் செயற்பாடுகளை நிறைவு செய்த ஒரு சில அலுவர்கள் மீண்டும் நாட்டிற்குத் திரும்புவதில்லை என்பதை குழு அவதானித்தது. அந்த அலுவலர்கள் தொடர்பில் தொடர்ச்சியாக அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் தூதுவராலங்களுடன் சம்பந்தப்பட்ட ஒரு பொறிமுறைத்திட்டத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதையும் குழு சுட்டிக்காட்டியது.

04. அரச உடமை தொலைக்காட்சி நிலையங்களுக்கு கிரிகெட்டுப் போட்டி தொலைக்காட்சி ஒலிபரப்பல் உரிமைகளை வழங்குவதானது அவற்றின் நிதி நிலைகளை வலுப்பெறச்செய்யும்.

05. ஸ்ரீ லங்கா எயார் லைன் நிறுவனமும் மிஹின் லங்கா நிறுவனமும் ஒன்றிணைக்கப்படுதல் வேண்டும்.

06. திருத்தப்பட்ட நிதிப் பிரமாணக்குறிப்புகள் தொடர்பில் அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதாக குழுவுக்கு அறிக்கையிடப்பட்டுள்ளது. அந்தத் திருத்தங்கள் பற்றி உரிய அலுவலர்களுக்கு அறியப்படுத்தும் பொருட்டு ஒரு நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பிக்குமாறு நிதி அமைச்சுக்கு குழு சிபாரிசு செய்கின்றது.

07. சுற்றுலா போன்ற ஏனைய துறைகளின் அபிவிருத்திற்காக இரண்டு தேசிய விமான சேவை நிறுவனங்களினால் (ஸ்ரீ லங்கன் மற்றும் மிஹின் லங்கா) செய்யப்பட்ட பங்களிப்புக்கு ஒரு CESS ஐ அறிமுகப்படுத்தி உரிய மதிப்பளிக்கப்படுதல் வேண்டும் என சிபாரிசு செய்யப்படுகின்றது.

08. ஒரு சில கூட்டுத்தாபனங்களுக்கு அவற்றின் கீழ் துணை நிறுவனங்கள் இருக்கின்றன. எனினும், இந்த தலைமை நிறுவனங்கள் அவற்றின் துணை நிறுவனங்கள் மீது கட்டுப்பாட்டைக் கொண்டதாகவில்லை என்ற விடயம் அவதானிக்கப்பட்டது. இந்த நிலை நிறுவனத்தின் எதிர்போக்குகளை அதிகரிக்க வழிவகுத்துள்ளது. உரிய அமைச்சுக்களும் திறைசேரியும் இந்தப் பிரச்சினைகளைக் கவனித்து அமைச்சரவைக்கு பொருத்தமான சிபாரிசுகளை முன்வைக்க வேண்டும்.

09. குறித்த ஒப்பந்தங்களின் பிரகாரம் பணிகளை நிறைவு செய்வதற்குத் தவறியிருந்த ஒப்பந்தத் தரப்புகள் தடைசெய்யப்பட்ட பட்டியலில் சேர்க்கப்படுதல் வேண்டும்.

10. நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் பொதுத் தொழில்முயற்சிகளின் சிறந்த நிருவாகம் என்பன தொடர்பாக திறைசேரிக்கான செயலாளரினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டல்கள் என்பவற்றுக்கு பொதுத் தொழில்முயற்சிகளினது சகல பகுதித் தலைவர்களினதும் பணிப்பாளர்கள் சபையின் உறுப்பினர்களினதும் கவனம் ஈர்க்கப்பட வேண்டும்.

11. வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற அனைத்து பொதுத் தொழில்முயற்சிகளும், அவற்றின் கூட்டிணைந்த திட்டங்களைத் தயாரிக்கும் போது (அரசாங்க கணக்குகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 01/2014 ஆம் இலக்க சுற்றறிக்கை) SWOT என்ற ஒரு பகுப்பாய்வை மேற்கொள்ள வேண்டும் என்ற தேவைப்பாட்டிக்கு கவனத்தை ஈர்த்து, இதனை கடுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

12. புதிய ஒரு முகாமைத்துவத்திற்கு கையளிப்பது தொடர்பில் விதிக்கப்பட்டுள்ள வழிகாட்டி நடைமுறைகள் அதிகமான நிறுவனங்களினால் பின்பற்றப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. இந்த வழிகாட்டி நடைமுறைகள் கடுமையாகப் பின்பற்றப்படுகின்றனவா என்பது பற்றி ஆராய்ந்து பார்ப்பது பிரதான பொறுப்புக் கூறும் அலுவலரின் பொறுப்பாகும்.

13. தகவல் தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவத் தகவல் முறைமைகள் என்பவற்றின் பிரயோகம் பொதுத் தொழில்முயற்சிகளுக்கு மத்தியில் ஊக்குவிக்கப்படுதல் வேண்டும்.

14. விலை, விநியோகம், நிறைவு செய்யும் நேரம், சுற்றாடல் தாக்கம், இயக்கச்செயற்பாட்டுக் கிரயம், ஆகுசெலவு வினைத்திறன், தரம்,

சேவை மற்றும் தொழில்நுட்ப உதவி என்பவற்றின் அடிப்படையில் கேள்வி விலை மனு மதிப்பிடப்படுதல் வேண்டும். கேள்வி விலை மனு தாரர் தரப்புக்கு தகவுதிறன்கள் கிடைக்கச் செய்யப்படுதல் வேண்டும்.

15. நிலையான சொத்துக்கள் பதிவேடு பொறுப்புடைய ஒரு மேற்பார்வை அதிகாரியின் கீழ் சரியான முறையில் பேணப்படுதல் வேண்டும். அந்தச் சொத்துக்களின் பௌதீன உறுதிப்படுத்தல் விடயமும் வருடாந்தம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். இது தொடர்பில் கணணிமயப்படுத்தப்பட்ட பொதுவான ஒரு மொடியூலை திறைசேரி அறிமுகப்படுத்தலாம்.

16. நிலுவையாகவிருக்கின்ற கடன் நிலுவைகளைக் கவனித்துப் பார்ப்பதற்கு நிறுவனத்தினுள் தனியான ஒரு பிரிவு தாபிக்கப்பட வேண்டும்.

17. இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் மற்றும் இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமங்கள் என்பவற்றைப் பின்பற்றல் விடயம் குறிப்பீடுசெய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் அதற்கு இணங்க 1995 இன் 15 ஆம் இலக்க இலங்கைக் கணக்காய்வு மற்றும் கணக்கீட்டுச் சட்டத்தைத் திருத்தவும் வேண்டும்.

விசாரணை செய்யப்பட்ட நிறுவனங்களின் நிதி நிலை

உபாயமுறை வர்த்தக தொழில்முயற்சிகள் மற்றும் வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனிகள்

இலக்கம்	நிறுவனம்	வரிக்கு முன்னருள்ள இலாபம் / (நட்டம்) (ரூ.)		
		2013	2012	2011
01	மத்திய பொறியியல் உசாதுணைப் பணியகம்	569,787,344	499,944,941	315,850,245
02	இலங்கை மின்சார சபை	18,593,781,000	(61,447,317,000)	(20,185,381,000)
03	இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்	(7,732,818,000)	(89,569,175,000)	(94,356,643,000)
04	இலங்கைப் பெற்றோலியம் சேவைகள் டேர்மினல் லிமிற்றட்	1,596,039,296	2,193,477,383	2,341,504,652
05	வரையறுக்கப்பட்ட கொழும்பு உரக் கூட்டுத்தாபனம்	439,384,320	181,928,588	314,143,499
06	மில்கோ	199,057,444	(259,162,961)	(244,788,257)
07	தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்	11,622,173	17,820,214	2,417,938
08	வரையறுக்கப்பட்ட தேசிய பத்திரிகைக் கம்பனி	(109,684,000)	(73,713,000)	(212,193,000)
09	தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை	1,050,326,475	407,019,536	737,409,181
10	செலனி ரெலிவிஷன் நிறுவனம்	11,902,292	21,437,942	7,539,235

11	இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்	-	(70,382,929)	2,600,000
12	இலங்கைத் துறைமுகங்கள் அதிகார சபை	2,427,798,259	5,211,436,974	256,869,976
13	இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டத்தாபனம்	நிதிக் கூற்றுக்கள் கிடைக்கப் பெறவில்லை	நிதிக் கூற்றுக்கள் கிடைக்கப் பெறவில்லை	(52,413,476)
14	ஸ்ரீ லங்கா எயார் லைன்ஸ் லிமிற்றட்	(32,357,980,000)	(26,088,570,000)	(377,750,000)
15	அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்	132,064,773	140,567,143	133,688,336
16	இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனம்	நிதிக் கூற்றுக்கள் கிடைக்கப் பெறவில்லை	67,090,055	63,878,705

இலாபமற்ற ஸ்தாபனங்களும் ஏனைய நிறுவனங்களும்

இலக்கம்	நிறுவனம்	வரிக்கு முன்னருள்ள மிகை / (துண்டுவிழுகை) (ரூ.)		
		2013	2012	2011
01	இலங்கை மத்திய வங்கி	(22,248,312,000)	68,734,238,000	47,431,799,000
02	இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகம்	(160,087,243)	(108,514,206)	(101,085,841)
03	விவசாய கமநல காப்புறுதி சபை	(81,920,566)	(15,420,596)	87,675,318
04	சபரகமுவ பல்கலைக்கழகம்	(214,560,330)	(96,632,028)	(131,450,782)
05	இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்	308,950,542	253,210,125	599,148,170
06	வரையறுக்கப்பட்ட லங்கா சதொச	881,440,784	652,206,019	251,490,199
07	LLGC (ஓய்வூதிய சேமலாப நிதி)	25,118,987	25,963,371	54,478,480
08	இலங்கைப் பத்திரிகை மன்றம்	(1,795,205)	(79,648)	(877,363)
09	அறுவடைக்குப் பின்-தொழில்நுட்ப நிறுவகம்	(16,567,327)	(4,893,838)	(5,090,236)
10	இலங்கைத் தேசிய பட்டினி ஒழிப்புச் சபை	(5,077,457)	(8,142,953)	(6,471,589)
11	வீதி அபிவிருத்தி அதிகார சபை	547,175,198	(547,429,580)	(385,204,114)
12	மத்திய சுற்றாடல் அதிகார சபை	(28,610,438)	(30,635,316)	6,305,261
13	இலங்கைக் கிரிகெட் சரப	(1,111,022,034)	368,533,718	594,673,283
14	தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம்	(7,806,700)	(5,228,093)	(9,445,973)
15	ஊனமுற்றோருக்கான தேசிய செயலகம்	1,508,798	373,256,937	389,761
16	பொதுப் பயன்பாடுகள்	14,707,789	29,967,560	55,978,423

	ஆணைக்குழு			
17	இலங்கை சுற்றுலா ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம்	78,253,762	50,896,177	55,649,410
18	யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்	(119,128,668)	(100,783,982)	(60,290,341)
19	இலங்கைப் புத்தாக்குநர்கள் ஆணைக்குழு	(16,341,471)	(29,099,096)	(7,675,762)
20	கடல் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபை	(2,804,789)	(1,814,711)	142,233
21	இரத்தினக்கல் ஆபரண ஆராய்ச்சி பயிற்சி நிறுவகம்	(1,117,200)	(207,400)	383,100
22	வாழ்க்கைத் தொழில் பயிற்சி அதிகார சபை	(49,225,894)	16,030,860	(18,333,666)
23	தேசிய மனித வளங்கள் அபிவிருத்தி சபை	544,867	(3,756,366)	(758,795)
24	தேசிய நூலக தகவல் விஞ்ஞான மன்றம்	(863,647)	(1,796,279)	(1,331,723)
25	தொழில்நுட்ப நிறுவகம் - மொரட்டுவைப் பல்கலைக்கழகம்	2,804,799	(3,510,686)	4,834,423
26	இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனம்	-	67,090,055	63,878,705
27	சுதேசிய மருத்துவ நிறுவகம்	(98,204)	(12,270,709)	(25,847,594)
28	கூட்டுஆதன முகாமைத்துவ அதிகார சபை	(8,961,997)	16,005,452	(18,952,422)
29	நகர குடியேற்ற அபிவிருத்தி அதிகார சபை	6,032,874	11,619,000	(57,276,733)
30	தென்னை ஆராய்ச்சி சபை	36,054,442	(59,537,758)	(7,998,680)

மூலம்: கணக்காள்வாளர் தலைமை அதிபதியின் திணைக்களம்

பாராளுமன்றத்திற்கு வருடாந்த அறிக்கைகளை சமர்பித்தல்

இந்த அறிக்கையின் செயல்நோக்கின் கீழ் வருகின்ற நிறுவனங்களினால் 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்த அறிக்கை சமர்ப்பித்தல் நிலை பற்றிய விபரங்கள் தனித்தனியாக கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

2011 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையை (2014.10.30 ஆம் திகதியில்) சமர்ப்பித்திருக்காத நிறுவனங்கள்

- லங்கா சதொச நிறுவனம்
- அங்கவீனர்களுக்கான தேசிய செயலகம்
- வ/ப தேசிய பத்திரிகை கம்பனி
- சலசினே ரெலிவிஷன் நிறுவனம்
- இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்
- இலங்கைக் கிரிகெட் சபை
- இலங்கைப் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்
- நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை

2012 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையை (2014.10.30 ஆம் திகதியில்) சமர்ப்பித்திருக்காத நிறுவனங்கள்

- இலங்கை மின்சார சபை
- மத்திய பொறியியல் உசாதுணைப் பணியகம்
- இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
- கூட்டுஆதன முகாமைத்துவ அதிகார சபை
- இரத்தினக் கற்கள் ஆபரண ஆராய்ச்சி நிறுவகம்
- மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப நிறுவகம்
- அறுவடைக்குப் பின்-தொழில்நுட்ப நிறுவகம்
- லங்கா சதொச நிறுவனம்
- பல்கலைக்கழக ஓய்வூதிய சேமலாப நிதியம்
- அங்கவீனர்களுக்கான தேசிய செயலகம்
- தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்
- சலசினே ரெலிவிஷன் நிறுவனம்
- இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனம்
- இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்
- இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்
- இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகம்
- இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு சபை
- இலங்கைப் பத்திரிகை மன்றம்
- இலங்கைப் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

- இலங்கைத் துறைமுகங்கள் அதிகார சபை
- அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்
- யாழ்ப்பாண பல்கலைக்கழகம்
- சபரகமுவ பல்கலைக்கழகம்
- நகர மீள்குடியேற்ற அபிவிருத்தி அதிகார சபை
- வாழ்க்கைத்தொழில் பயிற்சி அதிகார சபை
- நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை

2013 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையை (2014.10.30 ஆம் திகதியில்) சமர்ப்பித்திருக்காத நிறுவனங்கள்

- இலங்கை மத்திய வங்கி தவிர எந்த ஒரு நிறுவனமும் 2013 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையை சமர்ப்பித்திருக்கவில்லை.

கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயம்

ஒரு நிறுவனத்தின் இறுதிக் கணக்குகள் தொடர்பில் கணக்காய்வாளர் அதிபதி வெளியிடும் அபிப்பிராயமானது அந்த நிறுவனத்தின் நிதி முகாமைத்துவத்தின் நம்பத்தகுதன்மையை சுட்டிக்காட்டுவதாக அமைகின்றது. நான்கு வித்தியாசமான கணக்காய்வு அபிப்பிராயங்களின் விரிவான விளக்கம் 2014 ஆம் ஆண்டிற்கான முதலாவது இடைக்கால அறிக்கையில் தரப்பட்டுள்ளது. ஒவ்வொரு அபிப்பிராயமும் வாசகர்களின் சௌகரிகம் கருதி கீழே வகைப்படுத்திக் காட்டப்பட்டுள்ளது.

1. தகுதியற்றது என்ற அபிப்பிராயம்

தகுதியற்றது என்ற அபிப்பிராயமானது ஒரு பொதுத் தொழில்முயற்சியின் நிதிக் கூற்றுக்களில் கணிசமான மீறல்களை அல்லது பிறழ்கூற்றுக்களை கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கண்டுகொள்ள முடியவில்லை என்பதை சுட்டிக்காட்டும்.

2. தகுதியானது என்ற அபிப்பிராயம்

தகுதியானது என்ற ஒரு அபிப்பிராயமானது கணக்கீட்டு நியமங்களை அறிக்கையிடுவதிலிருந்து வரும் வித்தியாசங்களின் அல்லது ஆவண ரீதியான சான்றுகள் கிடையாமை தொடர்பான நோக்கெல்லை வரையறையின் காரணமாக ஒரு பொதுத் தொழில்முயற்சியின் நிதி சார்ந்த தகவல்களில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி பிரச்சினைகளைக் கண்டறிந்தார் என்பதைச் சுட்டிக்காட்டும்.

3. கருத்து மறுப்புத் தெரிவித்தல்

போதிய கணக்காய்வு சான்றுகளை பெற முடியாதவிடத்து கருத்து வெளியிட முடியாது மற்றும் நிதி பற்றி கூற்றுக்களின் கண்டுபிடிக்கப்படாத தவறான கூற்றுகளின் பாதிப்பு நிதி பற்றிய கூற்றுக்களின் உறுதியில்லாத்தன்மை மூலப் பொருளாகவும் அத்துடன் ஊடுருவியும் நிற்குமென கணக்காய்வுத் தலைமை அதிபதி கூறியமை கருத்து மறுப்புத் தெரிவித்தலாகும்.

4. மாறான கருத்து

தவறான தகவல் காரணமாக நிதி பற்றிய கூற்றுக்களின் போதுமான தவறான கூற்றுக்களை கண்காய்வாளர் கண்டுபிடித்துள்ளமை மாறான கருத்து என்பதாகும்.

2012 ஆம் ஆண்டின் 46 நிறுவனங்களில் ஒவ்வொரு நிறுவனத்ததினதும் நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் தெரிவிக்கப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயம் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- மாறான கருத்துத் தெரிவிக்கப்பட்ட நிறுவனங்கள் - 02
- கருத்து மறுப்புத் தெரிவிக்கப்பட்ட நிறுவனங்கள் - 03

- தகுதியானது என்று கருத்துத்துத் தெரிவிக்கப்பட்ட நிறுவனங்கள் - 37
- தகுதியற்றது என்று கருத்துத் தெரிவிக்கப்பட்ட நிறுவனங்கள் - 04

தொடர்ச்சியாக 03 வருடங்களுக்கான கருத்து மறுப்பு அல்லது பாதகமான கணக்காய்வு அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டுள்ள நிறுவனங்களினது பணிப்பாளர்கள் சபைகளில் தலைவர்களையும் உறுப்பினர்களையும் மீளநியமிக்கும் வழக்கத்தைத் தவிர்த்துக்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்பது குழுவின் அபிப்பிராயமாகும்.

கீழே காணப்படும் அட்டவணை ஒவ்வொரு நிறுவனத்தினதும் 2012 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் வழங்கப்பட்ட அபிப்பிராயங்களை எடுத்துக்காட்டுகின்றது.

இலக்கம்	நிறுவனம்	அபிப்பிராயம்
01	இலங்கை மத்திய வங்கி	தகுதியற்ற
02	இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்	தகுதிவாய்ந்த
03	இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகம்	தகுதிவாய்ந்த
04	விவசாய கமநல காப்புறுதி சபை	தகுதிவாய்ந்த
05	இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்	-
06	இலங்கை மின்சார சபை	தகுதிவாய்ந்த
07	இலங்கைத் துறைமுகங்கள் அதிகார சபை	தகுதிவாய்ந்த
08	சபரகமுவ பல்கலைக்கழகம்	தகுதிவாய்ந்த
09	இலங்கை வெளிநாட்டுத் தொழில்வாய்ப்புப் பணியகம்	தகுதிவாய்ந்த
10	வரையறுக்கப்பட்ட லங்கா சதொச	தகுதிவாய்ந்த
11	**அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்**	**பாதகமான**
12	சிலோன் பெற்றோலியம் சேவிஸெஸ் டேர்மினெல் லிமிற்றட்	தகுதிவாய்ந்த
13	தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை	தகுதிவாய்ந்த
14	மத்திய பொறியியலு உசாதுணைப் பணியகம்	தகுதிவாய்ந்த

15	தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்	தகுதிவாய்ந்த
16	மில்கோ நிறுவனம்	தகுதிவாய்ந்த
17	**UGC (ஓய்வூதிய சேலாப நிதியம்)**	**உரிமை மறுப்பு**
18	ஸ்ரீ லங்கா எயார் லைன்ஸ் லிமிற்றட்	தகுதியற்ற
19	சலசினே ரெலிவிஷன் நிறுவனம்	தகுதிவாய்ந்த
20	இலங்கைப் பத்திரிகை சங்கம்	தகுதிவாய்ந்த
21	அறுவடைக்குப் பின்-தொழில்நுட்ப நிறுவகம்	தகுதிவாய்ந்த
22	இலங்கைத் தேசிய பட்டினி ஒழிப்பு சபை	தகுதிவாய்ந்த
23	**வரையறுக்கப்பட்ட தேசிய பத்திரிகைக் கம்பனி**	**பாதகமான**
24	வீதி அபிவிருத்தி அதிகர சபை	தகுதிவாய்ந்த
25	**இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்**	**உரிமை மறுப்பு**
26	மத்திய சுற்றாடல் அதிகார சபை	தகுதிவாய்ந்த
27	இலங்கைக் கிரிகெட் சபை	தகுதிவாய்ந்த
28	தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம்	தகுதிவாய்ந்த
29	ஊனமுற்றோருக்கான தேசிய செயலகம்	தகுதிவாய்ந்த
30	வரையறுக்கப்பட்ட கொழும்பு வர்த்தக உரக் கம்பனி	தகுதியற்ற
31	பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு	தகுதிவாய்ந்த
32	இலங்கை சுற்றுலா ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம்	தகுதிவாய்ந்த
33	**யாழ்ப்பாண பல்கலைக்கழகம்**	**உரிமை மறுப்பு**
34	ஒத்திசை மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகாரச் சபை	தகுதிவாய்ந்த
35	இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழு	தகுதிவாய்ந்த
36	கடல் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபை	தகுதிவாய்ந்த
37	இரத்தினக்கல் ஆபரண ஆராய்ச்சி பயிற்சி நிறுவகம்	தகுதிவாய்ந்த

38	வாழ்க்கைத்தொழில் பயிற்சி அதிகார சபை	தகுதிவாய்ந்த
39	தேசிய மனித வளங்கள் அபிவிருத்தி சபை	தகுதிவாய்ந்த
40	தேசிய நூலக தகவல் விஞ்ஞான மன்றம்	தகுதிவாய்ந்த
41	தொழில்நுட்ப நிறுவகம்-மொரட்டுவைப் பல்கலைக்கழகம்	தகுதிவாய்ந்த
42	இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனம்	தகுதிவாய்ந்த
43	சுதேசிய மருத்துவ நிறுவகம்	தகுதிவாய்ந்த
44	கூட்டுஆதன முகாமைத்துவ அதிகார சபை	தகுதிவாய்ந்த
45	நகர குடியேற்ற அபிவிருத்தி அதிகார சபை	தகுதிவாய்ந்த
46	தென்னை ஆராய்ச்சி சபை	தகுதியற்ற

பிரதான குழுவினால்
பரீட்சிக்கப்பட்ட நிறுவனங்கள்

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	இலங்கை மத்திய வங்கி **நிதி, திட்டமிடல் அமைச்சு**	**2014 மே 07**
1.	2013ஆம் ஆண்டில் வரிக்கு முன்னர் ரூபா 22,248 மில்லியன் தேறிய நட்டம் ஏற்பட்டுள்ளது.	IFR நியமங்களின் அடிப்பமையில் நட்டமொன்று அறிக்கை செய்யப்பட்டிருப்பினும் உண்மையில், வங்கி நாணய சட்டத்திற்கமைவாக இலாபம் ஈட்டியுள்ளதென நட்டம் தொடர்பாக ஆளுனர் நியாயப்படுத்தினார்.
2.	செலாவணி மாற்றீட்டுக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளின் மீறல் குறித்த சந்தர்ப்பம் தொடர்பில் குழு விசாரித்தது.	இப்பிரச்சினை தொடர்பாக விபரமான அறிக்கை ஒன்றை குழுவுக்குச் சமர்ப்பிக்குமாறு AO பணிக்கப்பட்டார்.
3.	2012ஆம் ஆண்டில் கிரேக்க அரசாங்க முறிகளில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளினால் CBSLஇற்கு ஏற்பட்ட நட்டம் தொடர்பாக குழு கலந்துரையாடியது.	இவ்விடயம் தொடர்பாக மத்தியஸ்த நடவடிக்கையொன்று முன்னெடுக்கப்படுகின்றது.
4.	பிரமிட் கருத்திட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பற்றி கலந்துரையாடப்பட்டது.	இவ்விடயம் சட்டத்துறை தலைமையதிபதியின் திணைக்களத்துக்கு கையளிக்கப்பட்டுள்ளதோடு வழக்காடல் நடைமுறைகள் செயற்பாட்டிலுள்ளன.

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் **பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சு**	2014 மே 09
1.	வெளிநாட்டு கம்பனியொன்றிலிருந்து எரிபொருள் கொள்வனவு செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் மிகைக் கட்டணம் இருதடைவைகள் செலுத்தப்பட்டமை உட்பட 2,060,842 அமெரிக்க டொலர்கள் மிகை கொடுப்பனவு செய்யப்பட்டமை தொடர்பாக 2013.12.02ஆம் திகதி COPEஇனால் வழங்கப்பட்ட பணிப்புரைக்கு அமைய பொறுப்பான அதிகாரிகளை கண்டறிவதற்கான உள்ளக விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	அத்தகைய சூழ்நிலைகளை எதிர்கொள்வதற்காக உள்ளக கட்டுப்பாடு இன்னமும் வலுப்படுத்தப்பட்டிருக்கவில்லை.
2.	ஹெட்ஜிங் கொடுக்கல் வாங்கல் காரணமாக ஏற்பட்ட 75.3 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான நட்டத்துக்குப் பொறுப்பான அதிகாரிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து குழு விசாரித்ததோடு 2013.06.03இல் உள்ளவாறான ஒவ்வொரு செயற்பாடுகளுக்குமான நட்டம் தனித்தனியாக பின்வருமாறு: **தொகை** ஸ்டேன்டட் சார்டட் வங்கி **60 மில்லியன் அமெரிக்க டொலர்** மத்தியஸ்த கட்டணம், 16.6 மில்லியன் அமெரிக்க டொலர் சட்ட மற்றும் பிற	ஹெட்ஜிங் கொடுக்கல் வாங்கலில் ஏற்பட்ட நட்டம் தொடர்பான அறிக்கை உட்பட அமைச்சரவை தீர்மானத்தை ஒரு வார காலப்பகுதிக்குள் குழுவுக்குச் சமர்ப்பிக்குமாறு CAO/AO பணிக்கப்பட்டார்.

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	குறைவு; இலாபம்(சிட்டி வங்கி) 1.3 மில்லியன் அமெரிக்க டொலர் **தேறிய நட்டம்** 75.3 மில்லியன் அமெரிக்க டொலர் அமைச்சரவையில் மேற்கொள்ளப்பட்ட கொள்கைத் தீர்மானத்துக்கு அமைய கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளப்பட்டதாக வலியுறுத்திக் கூறிய CAO/AO, அந்த குறிப்பிட்ட காலப்பகுதியின் போது பதவிவகித்த பிரதி பொது முகாமையாளருக்கு (நிதி) 5 வருட கட்டாய விடுமுறை அளிக்கப்பட்டுள்ளதாகவும் விசாரணையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.	
3.	CPC, தொடர்ந்தும் ஏற்பட்ட நட்டங்களினால் 2012, 2013ஆம் ஆண்டுகளின் இறுதியில் முறையே ரூபா 222.545 மில்லியன், ரூபா 236,529 மில்லியன் பெறுமதியான மறை பெறுமானமுடைய தேறிய சொத்து நிலவரத்தைக் கொண்டிருக்கின்றது. அரசாங்கத்தின் நிதி உதவி இன்றி CPCஇன் தொடர்ந்து இயங்கும் தன்மை ஸ்திரமற்ற நிலையிலேயே உள்ளது.	நிலக்கரி வலுவுடன் CEB மின்சார உற்பத்தியை ஆரம்பித்தவுடன் நிலைமை மாறலாம் என CPC எதிர்பார்ப்பதோடு இது எரிபொருள் மீது சார்ந்திருக்கின்ற தன்மையை குறைக்கும்.
4.	2011ஆம் மற்றும் 2012ஆம் ஆண்டுகளில் முறையே ENOC (25,000 MT) மற்றும் VITOL (30,000	புதிய தொழில்நுட்பத்துடன் நாட்டினுள் இறக்குமதி செய்யப்படும் வாகனங்களை கண்டறிந்து விவரக் குறிப்புகளை

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	MT) ஆகிய இரு கம்பனிகளில் இருந்தும் தரம் குறைந்த எரிபொருளை இறக்குமதி செய்தமை தொடர்பான இரண்டு சந்தர்ப்பங்கள் குறித்தும் குழு விசாரித்தது. ENOCஇன் எண்ணெய் விவரக் குறிப்புகளின் தரத்துக்கமைய காணப்படவில்லை என கம்பனி CPCக்கு அறிவித்திருந்த போதிலும், துறைமுகத்தில் CPC அதிகாரிகளினால் இருப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என CAO/AO கூறினார். மேலும் அவர், VITOLஇனால் வழங்கப்பட்ட இருப்பில் தரம் தொடர்பான எந்தப் பிரச்சினையும் இல்லை எனவும் கூறினார். CPCஇன் விவரக் குறிப்புகளில் நீரை பிரித்தெடுப்பதற்கான பரிமாணங்கள் உள்ளடக்கப்படாமையே இந்நிலை எற்படுவதற்கான வழிவகுத்தது.	அமைவாக இற்றைப்படுத்த CPC மோட்டார் வாகன திணைக்களத்துடன் இணைந்து செயற்பட வேண்டும் என்ற கருத்தைக் குழு கொண்டது. எதிர்காலத்தில் தரம் குறைந்த எரிபொருள் ஏதேனும் நாட்டினுள் இறக்குமதி செய்யப்படுமாயின், CPC அதற்கடுத்த வாரத்தில் COPEஇற்கு அழைக்கப்படும் என குழு தீர்மானித்தது.
5.	இருப்பு மட்டங்கள் குறித்த பதிவுகள் சரிவர பேணப்படாமையினாலும் CPSTLஇனால் அறிமுகப்படுத்தப்பட்டு அமுல்படுத்தப்படும் பிரயோகங்கள், உற்பத்திகள் முறைமையை (SAP) செயற்படுத்த வழிவகையின்மையினாலும் பெற்றோலிய உற்பத்திகளைக் கோருதல் தொடர்பாக CPCஇன் பங்களிப்பு மிக குறைவானதாக காணப்பட்டுள்ளது.	CAO/AO கட்டமைப்புப் பிரச்சினையை ஏற்றுக் கொண்டதோடு நிர்வாக கட்டுப்பாட்டை CPCஇன் கீழ் கொண்டுவர CPC திட்டமிடுகின்றதென தெரிவித்தார்.

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகம் **உயர் கல்வி அமைச்சு**	**2014 மே 21**
1.	98 மொத்த வெற்றிடங்களுள் 41 கல்விசார் பணியாட்தொகுதியினருக்கானதாக காணப்பட்டதினால், இது நிறுவனத்தின் செயலாற்றுகையில் மிகக்கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தலாம்.	குறைந்த சம்பள அளவுத்திட்டங்கள் காரணமாக கல்விசார் பணியாள் தொகுதியினரை ஆட்சேர்த்தல், அவர்களை தொடர்ந்து வைத்திருத்தல் என்பன இடர் மிகுந்ததாக இருந்ததினால், பல்கலைக்கழக கல்விசார் பணியாட்தொகுதியினரின் சம்பள அளவுத்திட்டத்துக்கமைய இவ்வளவுத் திட்டத்தை தரமுயர்த்த தீர்மானமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது, வருகை தரு விரிவுரையாளர்களின் சேவைகள் அவ்வெற்றிடங்களை நிவர்த்தி செய்யும் அடிப்படையில் பெறப்படுகின்றது.
2.	17 கிளைகள் தொழிற்படுகின்றதெனினும், 2013ஆம் ஆண்டில் 1754 டிப்ளோமா பட்டதாரிகள் மாத்திரமே உருவாக்கப்பட்டிருப்பதாலும் 2013ஆம் ஆண்டின் முதலாம் தவணைப் பரீட்சையில் சித்தி பெற்றவர்களின் வீதம் 39%ஆக மட்டுமே இருப்பதினாலும் நிறுவனத்தின் செயலாற்றுகை திருப்திகரமாக இருக்கவில்லை. அத்தோடு, ஒரு கிளை எவ்வித பாடநெறிகளையும் நடத்தியிருக்கவில்லை.	CAO/AOகூறியதன் பிரகாரம் 2009/2010ஆம் ஆண்டுகளில் நிரந்தர கட்டடம் இல்லாமை போன்ற காரணமாக வரையறுக்கப்பட்ட வளங்களே காணப்பட்டமையினால் குறைந்த மாணவர் உள்வாங்கலின் காரணமாக 2013ஆம் ஆண்டில் குறைவான பேறுகள் கிடைத்தன. அண்மையில் கட்டட பணிகள் நிறைவுற்ற இரத்தினபுரியிலுள்ள கிளை நிர்மாண பணிகள் காரணமாக எவ்வித பாடநெறியையும் நடத்த முடியாமலிருந்ததனால் அப்போது 03 நிகழ்ச்சிகளுக்கு 157 மாணவர்களை சேர்த்துக் கொண்டது.

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
		மேலும், சில மாணவர்கள் பின்னர் பல்கலைக்கழகங்களில் அனுமதி பெற்றுக் கொண்டமை, வேலை வாய்ப்புகளில் இணைந்து கொண்டமை போன்ற காரணங்களினால் இடைவிலகல் வீதம் ஒப்பீட்டளவில் அதிகமாக காணப்பட்டது என CAO/AO கூறினார்.
	கமத்தொழில், கமநல சேவைகள் காப்புறுதிச் சபை **நிதி, திட்டமிடல் அமைச்சு**	**2014 மே 22**
1.	2012ஆம் ஆண்டிலிருந்து கமக்காரர் ஓய்வூதிய நிதியம், சமூக பாதுகாப்பு நலன்புரித் திட்டம் ஆகியன நடைமுறையில் இல்லாத இரண்டு வருட காலப்பகுதியின் போதான செலுத்த வேண்டிய ஓய்வூதிய நிலுவைத் தொகைகளை ஓய்வூதியதாரர்களுக்குச் செலுத்த எவ்வித திட்டமும் இருக்கவில்லை.	CAO/AO கூறியதன் பிரகாரம், அத்தகைய நிலுவைகள் எவையும் செலுத்தப்பட மாட்டாது என்பதோடு பழைய உறுப்பினர்கள் புதிய திட்டத்தின் கீழ் நலன்களைப் பெற்றுக் கொள்வதற்காக அதில் இணைந்து கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளனர். எனினும், குறைநிரப்பு ஏற்பாட்டின் மூலமாவது நிதியைத் திரட்டி அந்த நிலுவைத் தொகைகளை செலுத்துவது சிறந்தது என்ற கருத்தைக் குழு கொண்டது.
2.	நிறுவனம், கமக்காரர் ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக ரூபா 53 பில்லியனையும் கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக ரூபா 1.7 பில்லியனையும் மறை பெறுமானச் சொத்துக்களாக கொண்டுள்ளதால் 2014 ஜனவரி 01ஆம் திகதியில் புதிய திட்டம் அமுல்படுத்தப்பட்டதற்கு அமைவாக கணக்குகள் மாற்றியமைக்கப்பட வேண்டும்.	இந்த பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் பொறுப்புக்கூற அரசாங்கத்துக்கு எவ்வித கடப்பாடும் இல்லை எனவும் பழைய திட்டத்தின் நலன் பெறுநர்கள் புதிய திட்டத்தில் சேரும் வரையில் பொறுப்புகள் முன் கொண்டு செல்லப்படாது எனவும் CAO/AO கூறினார்.

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
3.	குறை மூலதனமாக்கத்தின் காரணமாக இலாபமீட்டும் நிறுவனமாக தொடர்ந்தும் செயற்படாத காரணத்தினால் நிதியின் செல்லுபடியாகும் தன்மை தொடர்பில் பாரிய பிரச்சினையொன்று நிலவுகின்றது. காணப்படும் பொறுப்புக்கள் மீதான கடப்பாடு நிறுவனத்தினால் அல்லது அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.	புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக சாத்தியவள கற்கை அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு குழு CAO/AOவைப் பணித்தது.
	இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் **அரச வளங்கள், தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சு**	**2014 மே 23**
1.	2010ஆம் ஆண்டின் பின்னர் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	நிலுவையிலுள்ள வருடாந்த அறிக்கைகளை மூன்று மாதங்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு CAO/AOவுக்குப் பணிக்கப்பட்டது.
2.	SLSPCஇன் 11,905.08 ஹெக்டெயார் பரப்புடைய காணி நிறுவனத்தின் கட்டுப்பாட்டுக்கு அப்பால் இருப்பதை கண்டறிந்து இவ்விடயத்தின் தற்போதைய நிலைமை குறித்து விசாரிக்கப்பட்டது. பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளுக்குச் சொந்தமாயிருந்த பெருந்தோட்டங்கள் சட்ட முறைக்கமைய மாற்றப்பட்டுள்ளன என CAO/AO கூறினார். எனினும், சில காணிகள் பணிப்பாளர் சபையின் அனுமதியின் பேரில் தனியார் பங்காளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.	தற்போதைய உரிமையாளர் ஒவ்வொருவருக்கும் எழுத்து மூலம் அறிவித்து அவர்களின் கட்டுப்பாட்டிலுள்ள காணியின் விஸ்தீரனம் குறித்த தகவல்களைப் பெற்றுக் கொள்ளுமாறு குழு CAO/AOவைப் பணித்தது.

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
3.	குத்தகையின் அடிப்படையில் சபுகஸ்தென்ன பெருந்தோட்ட லிமிரெட்டுக்கு மாற்றப்பட்ட காணிகளும் கட்டடங்களும் 2007ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனத்தின் அனுமதியின்றி கம்பனியினால் ரூபா 100 மில்லியனுக்கு நிதிக் கம்பனிக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.	இந்த காணிகள் தற்போது காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டில் உள்ளன.
4.	குழுவினால் கணக்காளர் தலைமையதிபதிக்கு கையளிக்கப்பட்ட 23 மனுக்கள் 2013 மே 23ஆம் திகதியன்று SLSPC வளாகத்தில் அமைந்துள்ள அரசாங்க கணக்காய்வு அலுவலகத்தில் ஏற்பட்ட திருட்டுச் சம்பவத்தின் போது களவாடப்பட்டுள்ளமை வெளிப்படுத்தப்பட்டது.	இந்த சம்பவத்தில் ஈடுபட்டதாக சந்தேகப்படும் 02 அதிகாரிகள் பணி இடைநிறுத்தப்பட்டு குற்றப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.
5.	பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்துக்கு விண்ணப்பங்கள் பெறப்படாமையினால் உயர் மட்டங்களில் அதிக எண்ணிக்கையான வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. அதிக எண்ணிக்கையான நீதிமன்ற வழக்குகள் காணப்படுகின்றமையினால் ஒரு சட்ட அதிகாரி, ஒரு கணக்காளர் ஆகியோரை ஆட்சேர்க்குமாறு திறைசேரியிடம் கோரப்பட்டுள்ளது. எனினும், கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.	SLSPCஇலுள்ள பணியாள்தொகுதியினரின் பிரச்சினையை தீர்க்கும் முகமாக இவ்விடயம் தொடர்பாக கௌரவ அமைச்சருடனும் திறைசேரி அதிகாரிகளுடனும் கலந்துரையாடுமாறு குழு CAOவைப் பணித்தது.

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	இலங்கை மின்சார சபை **வலு, சக்தி அமைச்சு**	**2014 ஜூன் 03**
1.	குழு, LTL ESOT கம்பனியின் உரிமையாண்மை குறித்து கலந்துரையாடி, ஆறு ஊழியர்கள் கூட்டிணைவின் போது மூல சந்தாதாரர்களாக கையெழுத்திட்டுள்ளனர் என அறிந்து கொண்டது. கம்பனியின் ஊழியர்களாக உள்ள அனைத்து பங்குதாரர்கள் பற்றிய விபரங்களை உள்ளடக்குவதில் உள்ள இடர்ப்பாடு காரணமாக நிபுணர் குழுவொன்றினால் மேற்பார்வை செய்யப்படும் தனியான நிதியமொன்று அவர்களை பிரதிநிதித்துவப் படுத்துவதற்காக நியமிக்கப்பட்டுள்ளது.	நிதியத்தில் சேவையாற்றியவர்களின் பதவிக்காலம் தொடர்பாக குழு அறிந்து கொள்ள முற்பட்டதோடு மேலும், அனைத்து ஊழியர்களுக்கும் நியாயமான நடைமுறையொன்று காணப்படுகின்றதா எனவும் விசாரித்தது. நிதிய ஒப்பந்தத்தை கற்றறிந்த பின்னர் இவ்விடயம் தொடர்பாக அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்க CAO இணக்கம் தெரிவித்தார். மேற்கூறிய நிதிய ஒப்பந்தத்தின் கணக்காய்வு அவதானிப்புகளை உள்ளடக்கிய அறிக்கை ஒன்றையும் பிற துணை நிறுவனங்களின் நிதி ஒழுங்குகளை உள்ளடக்கிய அறிக்கை ஒன்றையும் சமர்ப்பிக்குமாறு குழு கணக்காய்வாளர் தலைமையதிபதியைப் பணித்தது.
2.	தற்போதுள்ள துணை நிறுவனங்களின் கீழ் துணைக் கம்பனிகள் தாபிக்கப்பட்டுள்ளதை குழு அவதானித்ததோடு, துணை கம்பனிகளின் துணை நிறுவனங்கள் மீதான CEBஇன் கட்டுப்பாடு தொடர்பில் கலந்துரையாடியது.	BOI நலன்களையும் வரி நன்மைகளையும் பெற்றுக் கொள்வதற்காக தாபிக்கப்பட்ட துணைக் கம்பனிகளின் துணை நிறுவனங்கள் மீது CEBக்கு எவ்வித கட்டுப்பாடும் இருக்கவில்லை என CAO/AO தெரிவித்தார். துணைக் கம்பனிகளின் துணை நிறுவனங்கள் தொடர்பான அனைத்து விபரங்களையும் வழங்குமாறு குழு CAOவைப் பணித்தது. காணப்படும் துணை நிறுவனங்களின் கீழுள்ள துணைக் கம்பனிகள் குறித்த

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
		அறிக்கையையும் சமர்ப்பிக்குமாறு குழு கணக்காய்வாளர் தலைமையதிபதியைப் பணித்தது.
3.	CEBஇல் ஒழுங்கற்ற முறையில் செலுத்தப்படும் படிகள் அரசாங்கத் துறையில் ஒத்த பிரிவுகளின் சம்பள அளவுத்திட்டத்தில் குறிப்பிடத்தக்க முரண்பாட்டை ஏற்படுத்தியுள்ளதோடு, அதன் விளைவாக பிற நிறுவனங்கள் கணக்காளர்கள், பொறியியலாளர்கள் போன்ற தொழில்வல்லுனர்களை தொடர்ந்தும் வைத்திருப்பதில் சிக்கலை எதிர்நோக்கியுள்ளன.	CEBஇனால் ஊழியர்களுக்கு செலுத்தப்படும் அனைத்து படிகளை செலுத்துவதற்கான அடிப்படை, சதவீதம், அங்கீகரிக்கும் அமைப்பு போன்றவற்றையும் உள்ளடக்கிய படிகள் தொடர்பான விவரமான அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு குழு CAO/AOவைப் பணித்தது.
4.	பிற நிறுவனங்களுக்கு செலுத்தப்பட வேண்டியுள்ள நிலுவைகள் குறித்து குழு கலந்துரையாடியது.	மக்கள் வங்கிக்கு ரூபா 44 பில்லியனும் பலதரப்பட்ட சுயாதீன வலு உற்பத்தியாளர்களுக்கு ரூபா 14 பில்லியனும் செலுத்த வேண்டியுள்ளதாக CAO/AO தெரிவித்தார். மேலும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு ரூபா 14 பில்லியன் செலுத்த வேண்டியுள்ளது.
5.	சுவட்டு எரிபொருளினால் ஏற்படும் சூழல் பாதிப்பை கருத்திற் கொண்டு மரபுசாரா சக்தி வளங்களின் பாவனையை விருத்தி செய்வதற்கு ஒருங்கிணைந்த திட்டமிடலின் முக்கியத்துவத்தை குழு சுட்டிக்காட்டியது.	எழக்கூடிய பிரச்சினைகள், பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கான உபாயங்கள் ஆகியனவற்றை உள்ளடக்கிய மதிப்பீட்டுடன் கூடிய மரபுசாரா சக்தி வளங்களின் பாவனையை ஊக்குவிக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக குழுவுக்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு குழு CAO/AOவைப் பணித்தது.

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	இலங்கைத் துறைமுகங்கள் அதிகார சபை. **துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சு.**	**2014 யூன் 04**
1.	தனியார் கம்பனியெனத் தம்மைப் பதிவுசெய்துகொண்ட தொழிற் சங்கமொன்று, காலிமுகத்திடலில் மென்பானங்களை விற்பனை செய்வதற்கான ஏகபோக உரிமையைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், அதிகாரசபையின் ஒப்புதலைப் பெறாமல் ரூ.5.5 மில்லியனுக்கு வெளியிலுள்ள கம்பனியொன்றிற்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது. (உசாத்துணை – 2012 செயலாற்றுகை)	சட்டத்துறைத் தலைமை அதிபதியின் அறிவுரையின்படி தொழிற் சங்கத்திற்கெதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், மேலும் இவ்விடயம் தொடர்பில் விசேட விசாரணையொன்றை மேற் கொள்ளும்படி கம்பனிப் பதிவாளர் கோரப்பட்டதாகவும் CAO/AO குறிப்பிட்டார்.
2.	2012.12.31இல் உள்ளவாறு திருகோணமலை, காலி ஆகிய துறைமுகங்களில் முறையே ரூ.240 மில்லியன் மற்றும் ரூ.47 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்ததாகக் காட்டப்படிருந்தது.	பல்வேறு கருத்திட்டங்களின் கீழ் இரண்டு துறைமுகங்களையும் அபிவிருத்தி செய்வதன் மூலம் 2015இல் நட்டத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக CAO/AO குறிப்பிட்டார்.
3.	சேவைகளைப் பெற்றுக்கொள்வதன் பொருட்டு 2012இல் துறை முகங்களுக்கு வருகைதந்த கப்பல் களின் எண்ணிக்கை திருப்தியற்ற தாகக் காணப்பட்டது.	வருகை தரும் கப்பல்களின் எண்ணிக்கையை 2000 வரையில் அதிகரிக்கும் நோக்கில் கப்பல் களும் சலுகை அடிப்படையில் 12 மணித்தியால சேவையை வழங்குவதற்கான நடவடிக்கை களை அதிகாரசபை மேற் கொண்டுள்ளது.
4.	ஊழியர்களின் சம்பளங்களிலிருந்து கழிப்பதற்குப் பதிலாக, 2012 டிசம்பர் 31 வரை அதற்கு முந்திய ஐந்து வருட காலப்பகுதிக்கான 'உழைக்கும் போது செலுத்துதல்'	நிதி அமைச்சின் ஒப்புதலின் பிரகாரம் ஊழியர்களுக்கான 'உழைக்கும் போது செலுத்துதல்' வரியை 2000 முதல் அதிகாரசபை செலுத்தியிருந்தது. பணியாளர்

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	வரியாக ரூ.1998 மில்லியனைத் தனது நிதியிலிருந்து அதிகாரசபை செலுத்தியிருந்தது.	களுக்கு மத்தியில் ஏற்படக்கூடிய அமைதியின்மையைத் தடுக்கும் முகமாக இந்தச் செயன்முறை மாற்றப்படவில்லை. உழைக்கும் போது செலுத்துதல் வரியாகச் செலுத்தப்பட்ட தொகையை ஊழியர்களின் சம்பளத்திலிருந்து கழிப்பதற்கான வாய்ப்புகள் உள்ளனவா என அடுத்த சம்பள மீளாய்வுக் குழுக் கூட்டத்தின் பொழுது கவனிப்பதற்கு AO இணங்கினார்.
5.	சவுத் ஏசியா கேட்வே டமினல் லிமிட்டெட் (SAGT) தனது செயற்பாடுகளை உடன்படிக்கைக்கு முரணாக இந்த வளாகத்தில் மற்றொரு துறைமுகத்தில் மேற் கொள்வதற்கு ஏதாவது அக்கறை முரண்பாடுகள் காணப்படுகின் றனவா எனக் குழு வினவியது. மற்றொரு துறைமுகத்தில் செயற் படுவதற்கு "SAGT" இடம் அக்கறை முரண்பாடுகள் காணப்படுகின்றன என்பதை உறுதி செய்வதற்கான தகவல்கள் இல்லையென AO குறிப்பிட்டார்.	சட்டரீதியான அபிப்பிராயங்கள் உள்ளடங்கலாக இவ்விடயம் தொடர்பிலான விரிவான அறிக்கையை இரண்டுவார காலப்பகுதியினுள் சமர்ப்பிக்கும் படி CAO/AO ஐக் குழு பணித்தது.
6.	அதிகாரசபையின் நோக்கங்களுடன் தொடர்புடைய, ரூ.4.8 பில்லியன் முதலீட்டில், 2011இல் நிர்மாணிக்கப் பட்ட சூரியவெவ கிரிக்கெட் விளையாட்டரங்கு தொடர்பாகக் குழு விசாரித்தது.	அமைச்சரவையின் ஒப்புதலின்படி நிர்மாணப்பணிகள் மேற்கொள்ளப் பட்டதாகவும், கொடுக்கல்வாங்கல் தொடர்பான தொகையை கிரிக்கட் சபை செலுத்தாதன் காரணத்தி னால் ஒப்பந்தக்காரருக்குக் கொடுப்பனவுகளைச் செலுத்த முடியவில்லை எனவும் AO குறிப்பிட்டார். இவ்விடயம் தொடர்பிலான அறிக்கையொன்றைக் குழுவிற்குச் சமர்ப்பிக்கும்படி CAO/AO ஐக் குழு

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
		பணித்தது.
7.	2011இல் கொள்வனவு நடைமுறைகளைப் பின்பற்றாமல் இலங்கைத் துறைமுகங்கள் முகாமைத்துவ மற்றும் ஆலோசனைக் கம்பனி சிறிய சேவைகளை நிறைவேற்றியதன் காரணமாகத் தரகுப் பணமாக ரூ.31,151,474/= மேலதிகச் செலவு ஏற்பட்டது.	அதிகாரசபை தனது சொந்தப் பணியாட்களைப் பயன்படுத்தி மேற்கொள்கின்ற பொழுது ஏற்படும் செலவுடன் ஒப்பிடுகையில், அவ்விதச் சேவைகளைக் குறிப்பிட்ட கம்பனி மூலமாக மேற்கொள்வது சிக்கனமானது என AO குறிப்பிட்டார்.
8.	ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட கருத்திட்டம் பின்னர் செலவிடப்பட்டமையின் காரணமாகக் கொழும்புத் துறைமுகத்தின் வினைத்திறனை மேம்படுத்தும் பொருட்டு செலவிடப்பட்ட ரூ.391 மில்லியன் பயனற்றதாகிவிட்டது. (உசாத்துணை – 2011 செயலாற்றுகை)	அரசாங்கக் கொள்கையில் ஏற்பட்ட மாற்றங்களின் காரணமாக இக் கருத்திட்டத்தைக் கைவிட வேண்டிய நிலை தமக்கு ஏற்பட்டதாக AO குறிப்பிட்டார்.
9.	டென்மார்க்கின் DANIDA முகவரிடமிருந்து கிடைக்கப்பெற்ற ரூ.6,780 மில்லியன் மற்றும் இலங்கைத் துறைமுகங்கள் அதிகாரசபையிடமிருந்து கிடைக்கப்பெற்ற ரூ.444 மில்லியன் ஆகியவற்றைச் செலவிட்டு ஒலுவில் துறைமுக நிர்மாணப் பணிகள் பூரணப்படுத்தப்பட்ட பொழுதிலும் அதனது செயற்பாடுகள் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை. மேலும் சுமார் 9 மீற்றர் அளவில் குறைந்த ஆழம் காணப்படுவதன் காரணமாகச் சிறிய கப்பல்கள் மாத்திரமே இத்துறைமுகத்தில் தரித்து நிற்க முடியுமெனத் தெரிவிக்கப்பட்டது. (உசாத்துணை – 2014 செயலாற்றுகை)	ஆரம்பிக்கப்பட்ட கலந்துரையாடல்களின் பொழுது அத்தகைய சிரமங்களை இலங்கைத் துறைமுகங்கள் அதிகார சபை குறிப்பிட்டதாகவும், இந் நிலைமையைத் தணிக்கும் முகமாக ரூ.6780 மில்லியனைக் கடனாக வழங்கிய டென்மார்க் அரசாங்கத்தின் DANIDA முகவரியினால் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் AO குறிப்பிட்டார்.

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	சப்பிரகமுவ பல்கலைக்கழகம் **உயர்கல்வி அமைச்சு**	**2014 யூன் 05**
1.	நிர்வாகக் கட்டடமொன்றை நிர்மாணிப்பதற்கான ஆரம்பக் கொடுப்பனவாக ரூ.1,494,543/= வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும் 2007இல் இதற்கான அமைச்சரவை ஒப்புதல் வழங்கப்பட்டிருந்த பொழுதிலும் இதுவரை எவ்வித நிர்மாணப்பணிகளும் ஆரம்பிக்கப் பட்டிருக்கவில்லை.	சட்ட வழக்கொன்றின் காரண மாகத் தாமதம் ஏற்பட்டது. சட்டரீதியான பிரச்சினையொன்று இருக்கையில் அத்தகைய பாரிய ளவு பணத்தைச் செலவிட்டமைக் குத் தனது அதிருப்தியை வெளியிட்ட குழு, அதற்குப் பொறுப்பான அதிகாரிகளது பெயர்களை அனுப்பிவைக்கும்படி CAO/AO வைக் கேட்டுக் கொண்டது.
2.	பணியாளர் கடன்கள் அறவிடப் படாமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில், சம்பந்தப்பட்ட பணியார்கள் இராஜிநாமா செய்கையில்/ ஓய்வு பெறுகையில் அவர்களது கடன் நிலுவைகள் அறவிடப்படாமைக்குப் பொறுப் பான அதிகாரிகளுக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை முகாமைத்துவம் எடுத்திருக்க வேண்டுமென்ற கருத்தைக் குழு கொண்டிருந்தது.	சம்பந்தப்பட்ட பணியாட்டொகுதி உறுப்பினரின் ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து கடன் நிலுவையைக் கழிப்பதற்கான அதிகாரம் பல்கலைக்கழகத்திற்கு உள்ளதா என்பதைக் கண்டறியும் முகமாகச் சட்டரீதியான அறிவுரை களைப் பல்கலைக்கழக முகாமைத் துவம் பெற்றுக்கொள்ள வேண்டு மெனக் குழு கருதியது.
3.	சப்பிரகமுவ பல்கலைக்கழகத்தில் மாணவர் சங்கங்களை இடை நிறுத்தியமை தொடர்பான சம்பவங் கள் பற்றிக் குழு கலந்துரையாடியது.	மாணவர் சங்கங்களைச் சரியான பாதையில் இட்டுச் செல்வதற்கான பொறிமுறையொன்றைத் தயாரிப் பதற்கான நடவடிக்கைகளை CAO/AO மேற்கொள்ள வேண்டுமெனக் குழு கேட்டுக் கொண்டது.
4.	ஆளுகைச் சபைக்கு உறுப்பினர் களைத் தெரிவு செய்யும்பொழுது பின்பற்றக்கூடிய நெறிமுறைகள் பற்றிக் குழு கலந்துரையாடியது.	இது தொடர்பிலான நெறிமுறை யொன்றை CAO/AO உருவாக்கி, அதனைக் குழுவிற்கு அனுப்பி வைக்கும்படி குழு கேட்டுக் கொண்டது.

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம். **வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சு**	**2014 யூன் 06**
1.	போலியான கையொப்பங்கள் இடப்பட்டு 2009 செப்டெம்பரில் பணமாக மாற்றப்பட்ட ரூ.800,000/= பெறுமதியுடைய இரண்டு காசோலைகள் மோசடிகளுடன் தொடர்புடைய விசாரணைகளின் முன்னேற்றம் பற்றிக் குழு ஆராய்ந்தது.	விசாரணைகளில் ஏற்பட்ட தாமதங்கள் தொடர்பில் கலந்துரையாடும் பொருட்டு பொலிஸ் மா அதிபர் அவர்களைப் பணியகம் சந்தித்தது. அதன் பின்னர் பொலிஸ் மா அதிபரின் உத்தரவின் பிரகாரம் மிரிஹானை பொலிஸ் விசாரணைகளை ஆரம்பித்தது. மேலும், நீதிமன்ற வழக்கு முடிவுற்றதன் பின்னர், தீர்வொன்றிற்கு வருவதற்கான இணக்கத்தை இலங்கை வங்கியும், செலான் வங்கியும் தெரிவித்தன. இதற்குப் பொறுப்பான இரண்டு அதிகாரிகளுக்கும் குற்றப்பத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன், அன்று முதல் பல விசாரணை அமர்வுகளும் நடைபெற்றிருந்தன.
	லங்கா சதொச லிமிடட். **கூட்டுறவு உள்நாட்டு வர்த்தக அமைச்சு**	**2014 யூன் 17**
1.	கம்பனிகள் சட்டத்தின் கீழ் கம்பனி தாபிக்கப்பட்டது முதல், ஆண்ட றிக்கைகளைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவேண்டிய அவசிய மில்லை என்ற அடிப்படையில், கூட்டிணைக்கப்பட்ட வருடமான 2005இல் இருந்து பாராளுமன் றத்தில் ஆண்டறிக்கைகள் சமர்ப் பிக்கப்பட்டிருக்கவில்லை.	கம்பனியானது 100% பொது நிதியத்தில் தாபிக்கப்பட்ட தாபனம் என்ற முறையில் தனது ஆண்டறிக்கைகளைப் பாராளுமன் றத்தில் சமர்ப்பிக்க வேண்டுமெனக் குழு குறிப்பிட்டதுடன், 2011 வரையிலான சகல ஆண்டறிக்கை களையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும்படி பணித்தது. மேலும் 2012, 2013 ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக் கையை ஆறுமாத காலப்

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
		பகுதியினுள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும்படியும் பணித்தது. 2005 – 2011 வரையிலான காலப்பகுதிக்கான கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளின் பிரதிகளை, ஒரு வார காலப் பகுதியினுள் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு செயலகத்திற்கு அனுப்பி வைக்கும்படி CAO/AO ஐக் குழு மேலும் பணித்தது.
2.	05 வருட காலப்பகுதிக்கு வெளியிலிருந்து கணக்காய் வாளர்களை நியமிப்பதற்கான ஒப்புதல் ஆரம்பத்தில் திறை சேரியிடமிருந்து பெறப்பட்டிருந்த பொழுதிலும், அதன்பின்னர் பணிப்பாளர் சபையிடமிருந்து பெறப்பட்ட ஒப்புதலைத் தவிரத் தனியார் கணக்காய்வாளர்களை நியமிப்பதற்கான எந்த ஒப்புதலும் பெறப்பட்டிருக்கவில்லை.	திறைசேரியின் இணக்கத்தைப் பெற்று இவ் விடயத்தை ஒடுங்குபடுத்தும்படி CAO/AO ஐக் குழு பணித்தது.
3.	ரூ.2,025,186,297/= பெறுமதியான வியாபார இருப்பு மற்றும் ரூ.362,484,580/= பெறுமதியான நிலையான சொத்துக்கள் ஆகியன தொடர்பில் முறையான பதிவேடு களோ, பதிவுக் குறிப்புகளோ பேணப்படாமையின் காரணமாக 2011 நிதிக் கூற்றுக்களில் தகைமையான கணக்காய்வு அபிப்பிராயம் தெரிவிக்கப் பட்டிருந்தது.	விசாரணை நடைபெற்ற திகதி யிலும் கூட இவ் விடயம் திருத்தப்பட்டிருக்கவில்லை. 2013இற்கான கணக்குகள் இறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் ஆறுமாத காலப்பகுதியினுள் அதனைப் பூரணப்படுத்துவதற்கு இணங்கப்பட்டது.
4.	2014ஆம் ஆண்டு கிளிநொச்சி விற்பனை நிலையத்தில் ரூ.11	சதொச விற்பனை நிலையங்களின் பாதுகாப்பிற்கு அப்பிரதேச

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	மில்லியன் பெறுமதியான பொருட்கள் மோசடி செய்யப் பட்டிருந்தன. அதன் முகாமையாளர் குற்றவாளியாகக் காணப்பட்டதன் காரணமாகக் கைது செய்யப்பட்டார். மேலதிக விசாரணைகள் நடை பெற்றுக்கொண்டிருந்தன.	பொலிஸ் நிலையப் பொறுப் பதிகாரியே பொறுப்பு எனத் தெரிவித்துத் தனது கையொப்பத் துடன் வர்த்தமானி அறிவித்த லொன்றை பொலிஸ் மா அதிபர் வெளியிட்டுள்ளதன் காரணமாக விற்பனை நிலையங்களின் பாதுகாப்புப் பலப்படுத்தப் பட்டிருந்தன.
	அரச அச்சுக் கூட்டுத்தாபனம் **வெகுசன ஊடகத் தகவல் அமைச்சு**	**2014 யூன் 19**
1.	2010 நவம்பர் காலப்பகுதியில் விற்பனைக்கெனக் கண்டி வியாபார நிலையத்திற்கு ரூ.3,381,000/= பெறுமதியான புத்தக இருப்புகள் விநியோகிக்கப்பட்ட பொழுதிலும், அவை அவர்களால் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. குறை வான வருமானங்களையுடைய குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளை களுக்கு ஊக்குவிப்பு செயற் பாடுகளுக்காக இந்த அப்பியாசக் கொப்பிகள் அனுப்பிவைக்கப் பட்டதாக AO குறிப்பிட்ட பொழுதிலும், இவ்விடயம் தொடர் பில் அரச அச்சுக் கூட்டுத்தாபனம் நடந்துகொண்ட விதம் தனக்குத் திருப்தியளிக்கவில்லையெனக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி குழுவிடம் தெரிவித்தார்.	அத்தகைய ஊக்குவிப்புச் செயற் பாடுகளை மேற்கொள்வதற்கு முன்னர் முறையான சந்தைப் படுத்தல் திட்டமொன்று அரச அச்சுக் கூட்டுத்தாபனத்திடம் இருந்திருக்க வேண்டுமென்ற கருத்தைக் குழு கொண்டிருந்தது. இவ் விடயம் தொடர்பில் CAO கவனம் செலுத்தி அறிக்கை யொன்றைச் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொண்டது.
2.	குறிப்பிட்ட திகதிகளில், அச்சிடப் பட்ட புத்தகங்களைக் கையளிக்க முடியாத காரணத்தினாலும் சம்பந்தப்பட்ட விளக்க விபரங்களின் பிரகாரம் பாடப்புத்தகங்களை அச்சிடாமையின் காரணமாகவும் 2010 மற்றும் 2011இல் ரூ.54,889,800/= தண்டப்பணமாகச்	இலாப இழப்பில் மேலும் அதிகரிப்பைத் தவிர்ப்பதற்கு முறைமையாகாத முகாமைத்துவ முறையொன்று அரச அச்சுக் கூட்டுத்தாபனத்திடம் இருந்திருக்க வேண்டுமென்ற கருத்தைக் குழு கொண்டிருந்தது.

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	செலுத்தப்பட்டிருந்தது.	
3.	அரச அச்சுக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த பதினொரு ஊழியர்கள் அமைச்சிற்கு விடுவிக்கப் பட்டிருந்தனர். 2011ஆம் ஆண்டில் அவர்களுக்கான சம்பளமாகவும், மேலதிக நேரக் கொடுப்பனவாகவும் ரூ.2,156,638/= செலுத்தப் பட்டிருந்தது. மேலும் நிரல் அமைச்சின் செல்லிடத் தொலை பேசியுடன் தொடர்புடைய கட்டணமாக ரூ.356,894/= அரச அச்சுக் கூட்டுத்தாபனத்தினால் தீர்க்கப்பட்டிருந்தது.	மேற்படி விடயம் தொடர்பில் தனது கவனத்தைச் செலுத்தி அறிக்கையொன்றைக் குழுவிடம் சமர்ப்பிப்பதற்கு CAO இணங்கினார்.
4.	சுற்றுநிருப அறிவுறுத்தல்களுக்கு முரணாக 2011இல் தவிசாளருக்கான தங்குமிடக் கட்டணமாக ரூ.614,787/= செலுத்தப்பட்டிருந்தது.	இது தொடர்பில் கவனத்தில் எடுப்பதற்கு CAO இணங்கினார்.
5.	2012இல் ரூ.2,799,538/= செலவில் மேற்கொண்ட வெளிநாட்டு விஜயத்திற்கான முன் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை என்பதைக் குழு தெரிவித்ததுடன், அவ்வாறு விஜயம் செய்த நாடுகளைப் பற்றி விசாரித்தது.	விஜயம் செய்த நாடுகள், ஒவ்வொரு நாட்டிலும் தங்கியிருந்த காலப்பகுதி, செலவிட்ட தொகை போன்றன உள்ளடங்கலாக மேற்படி வெளிநாட்டு விஜயம் தொடர்பில் விரிவான அறிக்கையொன்றைக் குழுவிற்குச் சமர்ப்பிக்கும்படி CAO பணிக்கப்பட்டார்.
6.	2010இல் சட்ட ஏற்பாடுகளுக்கு முரணாகப் பிரதித் தவிசாளரொருவர் நியமிக்கப்பட்டிருந்தார். அவருக்கு மாதாந்த சம்பளமாக ரூ.45,000/= மற்றும் மாதாந்த வாகனப் படியாக ரூ.40,000/= செலுத்தப்பட்டிருந்தது.	இவ் விடயம் தொடர்பில் தனது கவனத்தைச் செலுத்தித் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி CAO பணிக்கப்பட்டார்.

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	வரையறுக்கப்பட்ட இலங்கைப் பெற்றோலியக் களஞ்சியத் தொகுதி **பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சு**	**2014 யூன் 20**
1.	2013இல் நிர்வாகச் செலவுகள் தொழிற்பாட்டு இலாபத்தின் 195% ஆகக் காணப்பட்டன.	மாதமொன்றிற்கான சம்பளங்கள் மற்றும் மேலதிக நேரக் கொடுப்பனவு தொடர்பான செலவுகள் முறையே ரூ.150 மில்லியன் மற்றும் ரூ.100 மில்லியனாகக் காணப்பட்டதாக CAO/AO குறிப்பிட்டார். மேலும், இந்நிறுவனமானது நாள் முழுவதும் தொழிற்படும் ஒரு தாபனம் எனவும் அவர் தெரிவித்தார்.
2.	2008 முதல் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை இந்திய எண்ணெய்க் கம்பனி ஆகியவற்றிற்கு மீளச் செலுத்தப்படாமல் நிலுவையாக முறையே காணப்படுகின்ற மிகை முனையக் கட்டணங்களான ரூ.1,065,391,574/= மற்றும் ரூ.120,258,623/= ஆகியவற்றை மீளச் செலுத்துவதற்கு என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன எனக் குழு விசாரித்தது.	3 – 4 வருடங்களாக மேலதிகமாக அறவிடப்பட்டிருந்த இந்தத் தொகையானது, பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் குறை அறவிட்ட தொகையாகப் பின்னர் சரி செய்யப்பட்டது.
3.	2013ஆம் ஆண்டில் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களை ஏற்றிச் சென்றதன் காரணமாக வரையறுக்கப்பட்ட இலங்கைப் பெற்றோலியக் களஞ்சியத் தொகுதிக்கு ரூ.531.80 மில்லியன் நட்டம் ஏற்பட்டதுடன், வட்டி நட்டமாக ரூ.117.75 மில்லியன் ஏற்பட்டிருந்தது.	டிப்போக்களிலிருந்து எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரி பொருள்களைக் கொண்டு செல்வது தொடர்பிலான தற்போதைய கட்டணங்களை மீளாய்வு செய்வதன் அவசியத்தை CAO/AO குறிப்பிட்டார். புதிய விலை முறையொன்றை அறிமுகப் படுத்துவதற்கான கோரிக்கை நிரல் அமைச்சிற்கு விடுக்கப்பட்டுள்ளது.

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
4.	கொழும்புத் துறைமுகத்திலிருந்து கொலன்னாவை முனையம் வரை குழாய்களைப் பதிப்பது தொடர்பான கருத்திட்டத்திற்குப் பொருத்தமான தொழில்நுட்பத்தைத் தெரிவு செய்வது தொடர்பான பிரச்சினை கள் மற்றும் காணப்படும் இரண்டு தொழில்நுட்பங்களுள் ஒவ்வொன்று டன் தொடர்புடைய விலைகள் ஆகியன பற்றிக் குழு கலந்துரையாடியது. சிறப்பானதைத் தெரிவு செய்யும் பொருட்டு இத்துறையில் நிபுணர்களைக் கொண்ட குழுவொன்றை நியமிக்கும் படி அமைச்சரவை அறிவுறுத் தியுள்ளது.	இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை கள், மேற்படி கருத்திட்டத்தைப் பூரணப்படுத்துவதற்கு அவசிய மான காலச் சட்டகம் ஆகிய வற்றைக் குறிப்பிட்டு அறிக்கை யொன்றைச் சமர்ப்பிக்கும்படி CAO/AO ஐக் குழு பணித்தது. மேலும், தமது சம்பளங்கள், ஏனைய வசதிகள் ஆகியவற்றிற்கு மேலதிகமாக மேற்படி கருத் திட்டத்தின் பொருட்டு மேலதிக கொடுப்பனவுகள் எத்தனை அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டன? அவ்வித வசதிகள் தொடர்ந்தும் எவ்வளவு காலத்திற்கு அவர்களுக்கு வழங்கப்படும்? ஆகியன உள்ளடங்கலாக அறிக்கையொன்றை அனுப்பிவைக்கும்படி CAO/AO பணிக்கப்பட்டார்.
5.	தமது குறைபாடுகள் பற்றி முகாமைத்துவத்துடன் கலந்துரை யாடுவதற்கான வாய்ப்புகள் வரையறுக்கப்பட்ட இலங்கைப் பெற்றோலியக் களஞ்சியத் தொகுதி தொழிற் சங்கத்திற்கு அதிகமாக வழங்கப்பட வேண்டுமென்பதையும் குழு அவதானித்தது.	அவசியப்படுமிடத்து, தொழிற் சங்கங்கள் மூன்று மாதத்திற்கொரு முறை முகாமைத்துவத்தைச் சந்திப்பதற்கான வாய்ப்புகள் வழங்கப்படுவதை உறுதி செய்து கொள்ளும்படி CAO/AO பணிக்கப்பட்டார்.

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை **நீர் வழங்கள் வடிகாலமைப்பு அமைச்சு**	**2014 யூலை 09**
1.	2010ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஆண்டறிக்கைகள் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. நிறுவனத் தினால் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளில் குறைபாடுகள் காணப்பட்டதன் காரணமாக 2012 மற்றும் 2013ஆம் வருடங்களுக்கான கணக்குகளுக்கான கணக்காய்வு அறிக்கையைச் சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்பட்டது.	விரைவில் அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கு CAO/AO இணங்கினார்.
2.	தொழிற்சங்கங்களுடன் இணக்க மொன்றிற்கு வரமுடியாமையின் காரணமாக ஆட்சேர்ப்புத் திட்டத்தைத் தயாரிப்பது கடினமாகியதாக CAO/AO குறிப்பிட்டார்.	முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துடன் கலந்தாராய் வுகளை மேற்கொண்டு நிறுவன முகாமைத்துவத்தினால் ஆட் சேர்ப்புத் திட்டங்கள் தயாரிக்கப் படல் வேண்டும். இச் செயன்முறையின் இறுதியிலேயே தொழிற்சங்கங்களின் கருத்துக் களைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
3.	குறிப்பிடக்கூடியளவு மோசடிகள், இணக்கப்பாடற்ற மிகுதிகள் போன்றன அவதானிக்கப்பட்டன.	அதிக தகைமையான கணக் காய்வாளர் உடனடியாக நிறுவனத்திற்கு ஆட்சேர்க்கப்படல் வேண்டும்.
4.	நிதிப்பிரிவை முன்னெடுத்துச் செல்வதற்குப் பொருத்தமான தகைமையான நபரொருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. பிரதிப் பொதுமுகாமையாளரின் (நிதி) தொழிற்பாட்டுச் செயற்பரப்பிலிருந்து வர்த்தகப் பிரிவு அகற்றப்பட்டிருந்தது.	தகைமையற்ற நபர்களைப் பயன்படுத்தி நாட்குறிப்பேட்டில் பதிவுகளை மேற்கொண்டமையின் காரணமாக, இரண்டு பிரிவுகள் தொடர்பில் பதியப்பட்ட தகவல்களுக்கிடையில் பாரிய வித்தியாசம் காணப்பட்டது. வர்த்தகப் பிரிவின் நிதிரீதியான தொழிற்பாடுகளைப் பிரதிப் பொது

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
		முகாமையாளர் (நிதி) அவர்களின் நோக்கெல்லையின் கீழ் கொண்டுவரும்படி CAO/AO பணிக்கப்பட்டார். இந்த வேறு பாட்டைத் தவிர்க்கும் முகமாக வர்த்தகப் பிரிவானது சகல விதமான தகவல்களையும் ஆவணங்களையும் நிதிப்பிரிவிடம் சமர்ப்பிக்கவேண்டுமெனவும் பணிக்கப்பட்டது.
5.	கொழும்பு மாநகர சபையினால் நீண்டகாலம் செலுத்தப்படாமல் கடனாளி நிலுவையாக ரூ.28,519,949/= காணப்படுகிறது. வியாபார மற்றும் சாக்கடைத் தொகுதி மொத்தக்ககடனாளி நிலுவையாக 2011.12.31இல் ரூ.810 மில்லியன் காணப்பட்டது.	கொழும்பு மாநகர சபையினால் செலுத்தவேண்டியுள்ள நிலுவைத் தொகை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில், பணத்தை அறவிடும் பொருட்டு உள்ளூராட்சி மன்றத்துடன் அவர்கள் பேச்சு வார்த்தை நடத்தியதாக CAO/AO குறிப்பிட்டார்.
	மத்திய பொறியியல் உசாவுகைப் பணியகம் **நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சு**	**2014 யூலை 10**
1.	2011இல் நிர்மாணப் பணிகளின் காரணமாக ஏற்பட்ட ரூ.295 மில்லியன் நட்டத்திற்கு மேலதிக மாக, பிரதானமாக வீதக் குழுவினால் கணிப்பு மேற் கொள்ளப்படும் தன்மையின் காரணமாக 2013ஆம் ஆண்டில் 08 அடிப்படை அலுவலகங்களினால் கையாளப்பட்ட 103 ஒப்பந்தங்களில் 223 மில்லியன் மேலதிக நட்டம் ஏற்பட்டிருந்தது.	இப்பிரச்சினையைத் தீர்க்கும் முகமாக மேற்கொள்ளப்பட்ட 2012.04.18ஆம் திகதிய அமைச் சரவைத் தீர்மானம் உரிய நேரத்தில் நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கவில்லை.

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	தேசிய திரைப்படக்கூட்டுத்தாபனம் வெகுசனஊடக தகவல் அமைச்சு	**11 ஜூலை 2014**
1.	பொது முகாமையாளர், பிரதிப் பொது முகாமையாளர் (நடவடிக்கைகள்), பிரதி பொது முகாமையாளர் (நிதி) பதவி வெற்றிடங்கள் தொடர்பாக பல தடவைகள் விளம்பரம் செய்யப்பட்டபொழுதிலும் அவைகள் வெற்றிடங்களாக உள்ளன.	அப்பதவி நிலைகளுக்காக SOR எவ்வாறு மீளமைக்கப்பட வேண்டுமென பணிப்பாளர்கள் சபையுடன் கலந்துரையாடி சபையின் தீர்மானத்தை CAO ஊடாக திறைசேரிக்கு ஆற்றுப்படுத்தும்படி CAO/AO வை குழு பணித்தது. திறைசேரியின் பதிலை குழுவுக்கு முன்வைக்குமாறும் பணிக்கப்பட்டது.
2.	முந்திய அ.பொ.ப.கு. கூட்டத்தில் பணிக்கப்பட்டவாறாக 177 சினிமா திரையரங்குகளுக்கு கொடுக்கப்பட்டு அறவிட்டுக்கொள்ளப்படாத கடன்கள் தொடர்பானவைகளுடன் கூடிய ஒரு அறிக்கையானது குழுவுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	ஒரு மாத காலப்பகுதிக்குள்ளாக குழுவுக்கு அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதை உறுதிப்படுத்தும்படி CAO/AO பணிக்கப்பட்டார்
3.	திரைப்படங்களைத் தயாரிப்பதற்கு வழங்கப்பட்ட கடன்கள் தொடர்புடையவற்றில் ரூபா 109 மில்லியன் தொகை கடன்பட்டோர் மீதி காணப்படுவதுடன், அது 5 வருடங்களுக்கு மேலாக 50 மில்லியன் ரூபாய்களாவும், 3-5 வருடங்களாக ரூபா 13 மில்லியன்களாகவும் உள்ளன	தயாரிப்பாளர்களுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களில் உள்ள குறைபாடுகளின் நிமித்தமாக கூட்டுத்தாபனமானது கடன்களை மீளப் பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்கொள்கிறது.

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	என்று தெரிய வந்துள்ளது. மேலும் படங்கள் தயாரிக்கப்படாது இருத்தல் அல்லது திரையிடப்படாது இருத்தலுடன் உரிய கடன்கள் செலுத்தப்படாமல் இருக்கும் சந்தர்ப்பங்களும் உள்ளன.	
4.	ஏற்கனவே திரையிடப்பட்டுள்ள 7 படங்களின் தயாரிப்புக்காக கொடுக்கப்பட்ட ரூபா 15,611,384 தொகையான கடனிலே, ரூபா 5,207,998 (33%)ஆனது பல வருடங்களாக இன்னும் (31.12.2012) வரவேண்டியதாக உள்ளது. அத்துடன் உரிய ஒப்பந்தங்களில் உள்ள குறைபாடுகளானவை அவைகளை கிடைக்கச் செய்வதில் உள்ள சிரமமாக உள்ளது.	அறவிடமுடியாத கடன்களில், ஏற்கனவே சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளவைகள், சட்டநடவடிக்கை எடுக்கப்பட வேண்டியுள்ளவைகள், பதிவளிக்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை, வட்டியுடன் அறவிடப்படக்கூடிய கடன்களின் எண்ணிக்கை, ஏனைய கடன்படுநர்கள் என்பவை உட்பட கூட்டுத்தாபனத்தால் கடன் வழங்கப்பட்ட எல்லாவிதமான கடன்களையும் வகைப்படுத்திய அட்டவணையொன்றை சமர்ப்பிக்குமாறு குழு CAO/AO வைப் பணித்தது
5.	திரைப்பட மண்டபங்களைப் புனர்நிர்மாணம் செய்வதற்குப் பெற்றுக்கொடுக்கப்பட்ட கடன்களை மீளப் பெறுவதற்கு போதிய பின்தொடர்வு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை	புனர்நிர்மாணக் கடன்களை அறவிட்டுக் கொள்வது மீதான ஒரு அறிக்கையை தயாரித்து அளிக்குமாறு CAO/AO வைக் குழு பணித்தது

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
6.	பதில் பொது முகாமையாளராக (நடவடிக்கைகள்) போதிய தகைமைகளும் அறிவுமற்ற ஆணையாளர் நியமிக்கப்பட்டுள்ளார்.	2014 செப்ரெம்பர் அளவில் அப்பதவிநிலையை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு CAO/AO இணங்கினார்
7.	வாடகைக்கு விடப்பட்ட திரைப்படங்களின் தாமதித்த கொடுப்பனவுகளில் இருந்து பெறப்பட வேண்டிய 2.5 வீத மிகைக்கட்டணம் 2012 இல் கூட்டுத்தாபனத்தால் பெற்றுக்கொள்ளப்படவில்லை	மேலதிக கட்டணங்களை அறவிட்டுக்கொள்வதற்கான ஒரு பொறிமுறையைக் கூட்டுத்தாபனம் கைக்கொள்ள வேண்டும்
	மில்க் இன்டஸ்ரீஸ் ஒவ் லங்கா லிமிற்றட் கால்நடை வளர்ப்பு கிராமிய சனசமூக அபிவிருத்தி அமைச்சு	**22 ஜூலை 2014**
1.	2012/2013 ஆண்டின்பொழுது 298 மில்லியன் நட்டம் ஏற்பட்டுள்ளது.	CAO/AO கூறுவதின் பிரகாரம் 2013 நவம்பரில் கம்பனியானது இலாப நட்டமற்ற நிலைமையை அடைந்திருந்தபொழுதிலும்;, 2013 டிசெம்பரில் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தினாலும், தொழிற்சாலைகள் புதிதாக்கப்பட்டமையின் நிமித்தமாக உற்பத்தி செயன்முறைக்கு விளைவிக்கப்பட்ட குழப்பங்களினாலும்; அத்துடன் மின்சாரக் கட்டணங்களின் அதிகரிப்பினாலும் அது நட்ட நிலைக்குத் திரும்பியது. எவ்வாறாயினும் பால் உற்பத்திகளின் விற்பனையானது துரிதமாக அதிகரித்ததனால், பரிசோதிப்பு வேளையில் மில்கோவானது ஒரு இலாபத்தைக்

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
		காட்டக்கூடியதாக இருந்துள்ளது.
2.	தொடர்ச்சியாக நட்டம் ஏற்பட்டிருப்பதையும் பொருட்படுத்தாது, 2012 இல் இருந்து ஒவ்வொரு பணியாளருக்கும் ரூபா 15000/- ஊக்குவிப்பு, திறைசேரியின் அங்கீகாரம் இன்றி கொடுக்கப்பட்டுள்ளதுடன், சில பணியாளர்களின் அடிப்படைச் சம்பளமானது மிகவும் குறைவாக இருந்தமையினாலே அக் கொடுப்பனவு செலுத்தப்பட்டதாக CAO/AO தெரிவித்தார்	CAO/AO வின் அந்தப் பதிலுடன் குழு திருப்தியடையாது இருந்ததுடன், கம்பனியின் பணியாட்டொகுதியினரின் சம்பள அளவுத்திட்டத்தை மீள் கட்டமைத்திருக்க வேண்டியதே கம்பனியின் பொறுப்பு எனக் குழு குறிப்பிட்டது.
3.	2011/2012 புள்ளிவிபரங்களுடன் ஒப்பிடும்பொழுது நிதிச் செலவினமானது ரூபா 100 மில்லியன்களாலும் விநியோகச் செலவினமானது கிட்டத்தட்ட ரூபா 80 மில்லியன்களாலும் 2012/2013 இல் அதிகரித்துள்ளது	விற்பனையானது 21% ஆல் அதிகரித்து இருக்கும் அதேவேளையில் விநியோகச் செலவினமானது 109மூ ஆல் அதிகரித்து இருப்பதானது நியாயப்படுத்தப்பட முடியாதது எனவும், விநியோகச் செலவினங்கள் மீதான ஒரு அறிக்கையை சமர்ப்பிக்குமாறு CAO/AO பணிக்கப்பட்டார்
4.	2013 மார்ச் 31 இல் உள்ளவாறாக வங்கி உத்தரவாதம் இன்றி வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன் பெறுமதியானது ரூபா 144 மில்லியனாக இருந்தது.	மில்க்கோ லிமிற்றட்டின் வரையறைக்குட்பட்ட களஞ்சியப்படுத்தல் வல்லமையின் நிமித்தமாக சிலவேளைகளில் ஏனைய கம்பனிகளுக்கு திருப்பப்பட்ட பாலின் நிமித்தமான தொகையே அக் குறித்த தொகை என AO குறிப்பிட்டார்.
5.	கொள்வனவுச் செயன்முறையிலான தாமதங்களின் நிமித்தமாக, 2012	வருடம் முடிவதற்கு முன்பதாக, விலை மனுக்கோரல்

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	மற்றும் 2013 இல் மில்கோவின் இயலுமையை தரம் உயர்த்துவதற்காக, 5 இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்ட மேலதிக நிதியானது, குறைவாகப் பயன்படுத்தப்பட்டதுடன், 2 இயந்திரங்கள் மாத்திரமே கொள்வனவு செய்ப்பட்டன.	செயன்முறைகளைப் பூர்த்தி செய்ய முடியாமையினால் அமைச்சிடமிருந்து பணத்தை பெற்றுக்கொள்ள முடியவில்லை என்பதை ஒத்துக்கொண்ட AO, தமது சொந்த நிதியங்களில் இருந்து தேவையான இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டதாகக் குறிப்பிட்டார்.
	பல்கலைக்கழக சேமலாப நிதியம் மற்றும் ஓய்வூதிய நிதியம் உயர்கல்வி அமைச்சு	**23 ஜூலை 2014**
1.	பங்களிப்புகளுடன் தொடர்புடைய இனங்காணப்படாத மிகுதியானது 31.12.2013 அன்று அளவில் ரூபா 6,903,569 ஆக அதிகரித்து	கணக்கியல் தவறுகளே இப்பிரச்சினையை விளைவித்தது என CAO/AO தெரிவித்தார். சேமலாபநிதியச் சட்டத்தின் மீதான விதியமைப்பு கட்டளைச் சட்டத்தில் எந்தத் தாக்கத்தையும் இது ஏற்படுத்தாமையினால் இது ஒரு வருமானத் தொகையாக எடுத்துக்கொள்ளப்பட முடியாது
2.	24.03.1999 இல் எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் பணியாளர்களின் சம்பளத்தில் 10% ஆனது ஓய்வூதிய நிதியத்திற்கு வரவு வைத்திருக்க வேண்டும் என்ற பொழுதிலும் 8% மாத்திரமே வரவு வைக்கப்பட்டுள்ளது	உயர்கல்வி அமைச்சின் செயலாளரும் திறைசேரியின் செயலாளரும் இது தொடர்பாக ஒரு அமைச்சரவை நிருபத்தை தயாரிக்கும் செயன்முறையில் இருப்பதாகவும், இரண்டு தொடக்கம் மூன்று மாதங்களுக்குள் இவ்விடயத்தை சரிசெய்வதற்கு இணங்கியுள்ளதாகவும் CAO/AO மேலும் தெரிவித்தார்

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் சிவில் விமானச் சேவைகள் அமைச்சு	**24 ஜூலை 2014**
1.	உல்லாசப்பயணத்துறை போன்ற வேறு துறைகளின் விருத்திக்காகவும் நீடித்திருப்புக்காகவும் தேசிய விமானச் சேவையினால் வழங்கப்பட்ட பங்களிப்புக்களுக்கு உரிய அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும்.	இது தொடர்பாக CESS அறிமுகம் செய்வது மீதான ஒரு முன்மொழிவினை சமர்ப்பிக்கும் சாத்தியத்தை கவனிக்குமாறு CAO/AO பணிக்கப்பட்டார்.
2.	2013/2014 ஆண்டுக்கான நிகர நட்டமானது வரிகளுக்குப் பிற்பாடு ரூபா 26 பில்லியனாகவும் மற்றும் இழப்பானது ...	இவ்வண்ணமான பெரும் தொகைகளில் தொடர்ச்சியாக நட்டம் ஏற்படும் பொழுது தேசிய சேமிப்புக்கள் வீழ்ச்சியடையும்
3.	கம்பனியின் நியாயப்படுத்தலின் பிரகாரம் பிரதானமாக பிராந்தியத்தில் நிலவுவதைக் காட்டிலும் 6-8% உயர்வான எரிபொருள் விலைகளின் நிமித்தமாகவும், ரூபாவின் பெறுமதி மதிப்புக் குறைவின் நிமித்தமாகவும் நிதி நெருக்கடியினை திருத்திக்கொள்ள முடியாமல் போனது	மொத்த எரிபொருள் கொள்வனவில் 50% மாத்திரமே CPC யிடமிருந்தான எரிபொருள் கொள்வனவாக இருப்பதினால், கம்பனியினால் கொடுக்கப்பட்ட வாதமானது செல்லுபடியற்றதாக உள்ளது. எரிபொருளின் 6-8% தாக்கமானது நீக்கப்பட்ட பிற்பாடு கூட இழப்பானது இன்னும் ரூபா 21 மிபில்லியனாக தொடர்ந்துள்ளது. சம்பந்தப்பட்ட காலப்பகுதியில், ரூபாவும் நியாயமான அளவு உறுதியானதாக இருந்துள்ளது
4.	திறைசேரிக்கு நினைவூட்டல் அனுப்பப்பட்ட பொழுதிலும், ஜெற் எரிபொருள் மீது விதிக்கப்பட்டுள்ள கட்டணங்களை நீக்கிவிடுமாறு கடந்த வரவு செலவுத்திட்டத்தில் செய்யப்பட்ட முன்மொழிவுகள் இன்னும்	இது தொடர்பாக திறைசேரிக்கு எழுதப்பட்ட கடிதத்தின் பிரதியொன்றினை சமர்ப்பிக்குமாறு குழு CAO/AO வைப் பணித்தது

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	அமுல்ப்படுத்தப்படவில்லை	
5.	உல்லாசப்பயணத்துறையை ஊக்குவிப்பதற்காக, மத்தளை விமான நிலையத்தின் இயலுமைகளைப் பயன்படுத்துவதற்கு, ஏனைய உரிய துறைகளுடன் எவ்வித ஒட்டுணர்வுத் திட்டமோ ஒருங்கிணைப்போ இல்லாதுள்ளது.	உல்லாசப்பயணத்துறையை விமானச் சேவைத் துறையுடன் இணைப்பதன் சாத்தியம் மீதான ஒரு எண்ணக்கரு பத்திரத்தை உருவாக்கிச் சமர்ப்பிக்குமாறு CAO பணிக்கப்பட்டார்
	வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசி கூட்டுத்தாபனம் அரச வளங்கள், தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சு	**6 ஆகஸ்ட் 2014**
1.	கொழும்பு கொமேஷல் கம்பனி லிமிற்றட்டில் 1.10.2013 இல் பணியாற்றிக் கொண்டிருந்த வேளையில் ரூபா 5 மில்லியன் பெறுமதியான ஒரு காசோலையை மாற்றியமைத்ததாக குற்றம் சாட்டப்பட்ட கம்பனியின் பொது முகாமையாளருக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து குழு விசாரித்ததுடன், கம்பனியின் பொறுப்பான பதவி நிலைக்கு எவ்வாறு அவ்வாறான ஒருவர், மீள வேலைக்கு அமர்த்தப்பட்டார் என மேலும் கேள்வி எழுப்பியது.	கம்பனியின் தகைமை வாய்ந்த அதிகாரிகளுக்கு அவரது சேவையை முடிவுறுத்துமாறு எழுத்து மூலமாக அறிவிக்கப்பட்டதாக CAO தெரிவித்தார்.
2.	2007 ஆம் ஆண்டிலிருந்து எவ்வித வருடாந்த அறிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	சமர்ப்பிக்கப்படாதுள்ள வருடாந்த அறிக்கைகளை 3 மாத காலப்பகுதிக்குள் சமர்ப்பிப்பதற்கு CAO/AO இணங்கினார்.
3.	கம்பனியின் நிதிக் கட்டுப்பாடானது மிகவும் பலவீனமான நிலையில் இருப்பதாகவும் திறைசேரியின் நிதி	உண்மைகளை ஏற்றுக்கொண்ட AO, அவர்களால்

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	உதவி இல்லாது கம்பனி செல்லும் நிலையானது கேள்விக்குரியதாகவும் உள்ளது	எதிர்கொள்ளப்படும் பிரதான தடை ஆரம்ப முதலீடு இன்மையாகும் எனக் குறிப்பிட்டதுடன், மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்வதற்குக் கூட போதிய நிதியங்கள் கிடைக்கப்பெறாதது குறித்துக் குறிப்பிட்டார்
4.	AO குறிப்பிடுவதின் பிரகாரம் கம்பனியை மீள அமைப்பதற்கு ரூபா 300 மில்லியன் தேவைப்படுகிறது	ஒரு பில்லியனுக்கு மேற்பட்ட ஒன்று திரட்டிய நட்டத்தையும் மற்றும் 500 மில்லியனுக்கு மேற்பட்ட தற்போதைய பொறுப்புக்களையும் பரிசீலிக்கும்பொழுது, கம்பனியின் தந்திரோபாயத்துடன் கம்பனியை மீளமைப்பதானது யதார்த்த ரீதியாக இருக்கவில்லை. வாழைச்சேனை கடதாசித் தொழிற்சாலையின் மீளமைப்புக்காக திறைசேரியானது ஒரு மூலதன உள்ளீட்டைக் கொடுக்க வேண்டும். ஒரு புதிய வியாபாரத் திட்டத்தை தயாரிக்குமாறும் இருவாரங்களுக்குள் அதனை திறைசேரிக்கு அனுப்புமாறும், அ.பொ.ப.கு. க்கும் ஒரு பிரதியை அனுப்புமாறும் குழுவால் CAO/AO பணிக்கப்பட்டார். புதிய வியாபாரத் திட்டத்தை தயாரிப்பதில், தேவையான வழிகாட்டுதல்களை வழங்குமாறு அரச வளங்கள் முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியைக் குழு பணித்தது. கம்பனியின் நிதி செயற்பாடுகள் மற்றும் ஏனைய

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
		கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பாக ஒரு முழுமையான விசாரணையை நடத்தி அ.பொ.ப.கு. க்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு கணக்காய்வாளர் நாயகத்தையும் குழு பணித்தது
5.	2012 ஆம் ஆண்டில் ரூபா 40 மில்லியன் பெறுமதியான பழைய இரும்பு இருப்பு ஒன்றினை கூறுவிலைகள் கோரியதன் மூலம் கம்பனி விற்றுக்கொண்டது. ஆனால் 16 மில்லியன்களை மாத்திரமே பெற்றது. அத்துடன் இந்தக் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக பல எண்ணிக்கையான திரும்பிய காசோலைகளும் பெறப்பட்டுள்ளன.	இருப்பின் நிறை மற்றும் பெறுமதி, இருப்பை விற்றதன் பிற்பாடு பெற்றுக்கொள்ளப்பட்ட தொகை என்பன உட்பட்ட முழு கொடுக்கல் வாங்கல் செயன்முறை தொடர்பான ஒரு விபரமான அறிக்கையை இரண்டு வாரங்களுக்குள் சமர்ப்பிக்குமாறு CAO/AO பணிக்கப்பட்டார்
6.	எம்பிலிப்பிட்டிய கடதாசி தொழிற்சாலையின் தற்போதைய நிலை தொடர்பாக குழு விசாரித்தது	30 வருட குத்தகைக்கு தொழிற்சாலையைப் பெற்றுக் கொண்ட முதலீட்டாளர் இன்னும் இலங்கையில் இருப்பதாகவும் SRMC யின் பிரதம நிறைவேற்றுஅதிகாரியுடனான தொடர்புகொள்கைகள் தொடர்பாக அவரிடமிருந்து எவ்வித பதில்களும் கிடைக்கப்பெறவில்லை எனவும் CAO குறிப்பிட்டார். செலான் வங்கிக்கு எதிராக குத்தகைக்கு பெற்றவரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கானது இன்னும் இடம்பெற்றுக்கொண்டு இருப்பதால் காணியையும் சொத்தையும் பொறுப்பெடுத்துக்கொள்வதற்கான சாத்தியம் இல்லையென சட்டமா அதிபர் அவர்களுக்கு அறிவுரை வழங்கினார். ஒரு விசாரணையை மேற்கொண்டு

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
		அறிக்கையை சமர்ப்பிக்குமாறு கணக்காய்வாளர் நாயகம் பணிக்கப்பட்டார்
7.	எம்பிலிப்பிட்டிய கடதாசி தொழிற்சாலையில் இருந்து பல்வேறு பொருட்களை கொள்ளை அடித்தது தொடர்புபட்ட பொறுப்பான தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டதா என குழு கேள்வி எழுப்பியது.	தொழிற்சாலையானது செலான் வங்கியிடம் அடகு வைக்கப்பட்டிருப்பதினால் தொழிற்சாலையின் பாதுகாவலராக செலான் வங்கியே உள்ளது எனவும், அரச வளங்கள் முகாமைத்துவ கூட்டுத்தாபன லிமிற்றட்டானது பொலிசாரிடம் முறைப்பாடு செய்துள்ளது.
8.		20.02.2013 இல் இடம்பெற்ற முந்திய அ.பொ.ப.கு. கூட்டத்தில் குழுவால் செய்யப்பட்ட சிபார்சுகளுக்கு அவர்கள் பதிற்செயற்பாடு காட்டவோ அல்லது அவற்றை அமுல்படுத்தவோ இல்லை என்பது தொடர்பாக முகாமைத்துவத்தின் மீதான அதிருப்தியினை குழு வெளிப்படுத்தியது.
	வீதி அபிவிருத்தி அதிகாரசபை துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு	**07. ஆகஸ்ட் 2014**
1.	பேலியகொடவில் அமைந்துள்ள ரூபா 25.98 மில்லியன் பெறுமதி வாய்ந்த காணியைப் பயன்படுத்துவதற்காக மகநெகும கம்பனிகளிடமிருந்தான ஒரு வாடகைக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை (உசாவல் கணக்காய்வுப் பந்தி 2.2.1(e)iii 2011)	RDA யின் கீழ் நிறுவப்பட்டுள்ள ஒரு துணைக்கம்பனியாக இருப்பதினால் வரி அறவிடப்படவில்லை என CAO/AO குறிப்பிட்டார்

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
2.	மகநெகும நிர்மாண மற்றும் உபகரணக் கம்பனிக்கு விடுவிக்கப்பட்ட பொறித்தொகுதி மற்றும் இயந்திரங்கள் தொடர்பான வாடகைக்கு விடும் கட்டணங்களானவை கம்பனியால் வழங்கப்பட்ட தகவல்களை மாத்திரம் கொண்டு கணிக்கப்பட்டதாகும். தகவல்களின் துல்லியத்தன்மையால் RDA ஆல் உறுதிப்படுத்தப்படவில்லை. இதன் நிமித்தம் RDA யின் கணக்குகளில் கொடுக்கப்பட்ட தகவல்களானவை கம்பனியால் உறுதிப்படுத்தப்பட்ட தகவல்களில் இருந்து வேறுபடுகின்றன.	மகநெகும கம்பனியுடன் மேலும் கலந்துரையாடி தகவல்களை சரிபார்த்துக் கொள்வதற்கும் மேலும் ஒன்றரை மாத காலப்பகுதிக்குள் கொடுக்கல் வாங்கலை தெளிவுபடுத்துவதற்கும் CAO இணங்கினார்
3.	மூன்று மகநெகும கம்பனிகளானவை 2011, 2012, 2013 இல் இலாபங்களைக் காட்டியிருந்தபொழுதிலும் எந்தப் பங்கு இலாபமும் RDA க்கு செலுத்தப்படவில்லை	வாடகை அடிப்படையில் இரண்டு மகநெகும கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட பொறித்தொகுதி இயந்திரம் மற்றும் வாகனங்களானவை அப்பொழுதே முழுமையாகப் பெறுமானத்தேய்வு ஏற்பட்டிருந்ததாக CAO குறிப்பிட்டார். இந்தக் கம்பனிகளிடமிருந்து ஒரு வருமானத்தை பெற்றுக்கொள்ளும் நோக்குடன் சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்து ஒரு மதிப்பீடு செய்யுமாறு CAO/AOவை குழு பணித்தது
4.	53 வீதிகளின் புனர்நிர்மாணத்திற்காக அரச மற்றும் தனியார் வங்கிகளிடமிருந்து ரூபா 131,564 மில்லியன் பெற்றுக்கொள்ளப்பட்ட போதிலும் 2013 இல் இக் கருத்திட்டங்களுக்காக ரூபா 33,728	பணம் செலவழிக்கப்பட்ட விதத்தை விளக்கம் செய்து குழுவுக்கு ஒரு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு CAO இணங்கினார்

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	மில்லியன்கள் மாத்திரமே செலவழிக்கப்பட்டுள்ளதுடன், இந்த நிதியங்களானவை பயனுள்ளதாக பயன்படுத்தப்பட்டதா என நியாயப்படுத்துமாறு குழு RDA யிடம் கேட்டது.	
5.	புசல்லாவை உலப்பன வீதியின் வில்லுப் பாலத்தை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்திற்கு 1999 இல் மதிப்பிடப்பட்ட செலவினமாகிய ரூபா 42 மில்லியன் வழங்கப்பட்டது. ரூபா 34 மில்லியன் செலவழிக்கப்பட்ட பிற்பாடு 2003 இல் நிர்மாண வேலைகள் நிறுத்தப்பட்டமையின் நிமித்தம், ஒப்பந்த வேலையானது 18.06.2009 க்கு முன்பதாக வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில், மிகுதியான வேலையை பூர்த்தி செய்வதற்காக, ரூபா 75 மில்லியன், அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனத்திற்கு மீண்டும் வழங்கப்பட்டது. எவ்வாறாயினும் நிர்மாண வேலைகளானவை 31.12.2013 வரையிற்கூட பூர்த்தி செய்யப்படவில்லை	2003 இல் RDSCC யின் மூடுகையுடன் 2003 இல் நிர்மாண வேலைகள் நிறுத்தப்பட வேண்டியிருந்தன. அத்துடன் SDCC ஆகிய இரண்டாவது ஒப்பந்தகாரரின் வேலை முன்னேற்றமும் திருப்திகரமாக இருக்கவில்லை. நிர்மாண வேலையானது அடுத்த மாதம் அளவில் பூர்த்தியடையும் என அவர் எண்ணுகிறார்.
6.	ஜனாதிபதியின் செயலாளரால் அனுப்பப்பட்டுள்ள 'அரச செலவின முகாமைத்துவம்' தொடர்பான சுற்றுநிருபத்திற்கு முரணான வகையில் தெற்கு நெடுஞ்சாலையில் ஒரு ஓய்வெடுக்கும் இடத்தை நிர்மாணிப்பதற்காக 3.0056	அக்காணியானது ஒரு அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் குத்தகைக்கு விடப்பட்டுள்ளதாக CAO குறிப்பிட்டதுடன் அதன் பிரதி ஒன்றை குழுவுக்கும் கணக்காய்விற்கும் சமர்ப்பிக்க இணங்கினார்.

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	ஹெக்டேயர்கள் விஸ்தீரணமுள்ள ஒரு காணியானது இலங்கை காப்புறுதியுடன் இணைந்த ஒரு கம்பனிக்கு 2011 ஆம் ஆண்டில் 99 வருடங்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.	
7.	2009-2012 காலப்பகுதியில் கடன் வழங்கும் முகவராண்மைகளினால் குறித்துரைக்கப்பட்ட ஒப்பந்தக்காரர்களுக்கு ரூபா.198,762.75 மில்லியன் மதிப்புள்ள 38 ஒப்பந்தங்கள் போட்டித்தன்மைமிக்க விலைமனுக் கோரல் நடைமுறையைப் பின்பற்றாது நேரடியாக வழங்கப்பட்டிருந்தது.	பி.க.அ /க.அ. கூற்றின் படி , குறிப்பிட்ட நிர்மாணப்பணிகளின் போது சேமிக்கப்பட்ட நிதிகளைப் பயன்படுத்தி வீதிகளின் நீளம் அதிகரிக்கப்பட்டிருந்த சூழ்நிலையில் சிலவேளை இது நடந்துள்ளது.
	இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம் **அரச வளங்கள், தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சு**	**2014 ஓகத்து 08**
1.	இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் தற்போதைய நடவடிக்கைகள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அதன் நோக்கு, பணி மற்றும் குறிக்கோள்களுடன் இணங்கிச் செல்வதில்லை. 1992ஆம் ஆண்டு பல தொழிற்சாலைகளை தனியார்மயப்படுத்தியமை மற்றும் பிராந்திய பாதுகாப்பு விடயங்கள் சீமெந்துத் தயாரிப்பை கைவிடுவதற்கு இட்டுச்சென்றிருந்தது.	குறித்த விடயத்தை கௌரவ அமைச்சருடன் கலந்தாலோசித்து அதன் நோக்கு, பணி மற்றும் குறிக்கோள்களை மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பி.க.அ /க.அ. பணிக்கப்பட்டார். அதற்கமைய கூட்டாண்மைத் திட்டத்தை வகுக்குமாறும் பணிக்கப்பட்டது.
2.	உள்ளக கணக்காய்வுப் பிரிவில் கடமைகளை நிறைவேற்ற ஒரு அலுவலர் மாத்திரமே நியமிக்கப்பட்டிருக்கிறார்.	உள்ளக கணக்காய்வுப் பிரிவிற்கு இன்னுமொரு அலுவலரை நியமிக்குமாறு பி.க.அ /க.அ. பணிக்கப்பட்டார்.

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
3.	இலங்கை சீமெந்துக் கம்பனி லிமிட்டடில் கூட்டுத்தாபனம் ரூபா.1,084 மில்லியனை முதலீடு செய்து 62.45% பங்குகளை கொண்டிருந்தாலும் கூட திரட்டுக் கணக்குகள் அண்மைக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததோடு 2013ஆம் ஆண்டிற்கான கணக்குகள் இன்னும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	கம்பனியின் கணக்குகள் கடந்த வாரத்தில் கிடைத்தமையினால் திரட்டுக் கணக்குகளை நேரத்துடன் சமர்ப்பிக்க பி.க.அ /க.அ. இணக்கம் தெரிவித்தார்.
4.	நிறுவனத்தினால் ஈட்டப்படும் நட்டத்தின் அளவை மற்றும் சந்தைப்பங்கை கருத்திற் கொள்ளும் போது கூட்டுத்தாபனத்தின் தேவைப்பாடு பற்றி மீளாய்வு செய்யப்பட வேண்டும். சந்தையில் சீமெந்து விலைக் கட்டுப்பாட்டை பேணுவதற்காக குறித்த நிறுவனம் காணப்படுவது இன்றியமையாதது என்ற நிலைப்பாட்டை பி.க.அ /க.அ. கொண்டிருந்தார்.	விலைக் கட்டுப்பாட்டை நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையினாலோ அதையொத்த ஏனைய நிறுவனங்களினாலோ கையாளப்படலாம் என்பதினால் பி.க.அ /க.அ. வாதத்தில் எந்த அர்த்தமுமில்லை.
5.	இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தையும் இலங்கை சீமெந்துக் கம்பனி லிமிட்டடையும் ஒன்றிணைப்பதற்கும் காங்கேசந்துறை சீமெந்துத் தொழிற்சாலையின் செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பதற்கும் மேற்கொண்ட 2011ஆம் ஆண்டின் அமைச்சரவைத் தீர்மானம் இன்னும் நிறைவேற்றப்படவோ மாற்றப்படவோ இல்லாதிருந்தது. அதேவேளை இராணுவத்தினால் காணி கொள்ளப்பட்டிருந்தது. பி.க.அ /க.அ. கூற்றின் படி, கடல் நீரினால் குறித்த பகுதி மாசடையும்	காங்கேசந்துறை தொழிற்சாலையை மீள ஆரம்பிக்க அமைச்சரவை தீர்மானமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த வேளையில் குறித்த தொழிற்சாலையின் காணி ஏன் கொள்ளப்பட வேண்டும் என்று வினவி பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளரிற்கு கடிதம் எழுதுமாறு பி.க.அ /க.அ. பணிக்கப்பட்டார். பாதுகாப்புச் செயலாளரின் பதிலின் அடிப்படையில் கௌரவ அமைச்சருடன் விடயத்தை கலந்துரையாடிய பின்னர்

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	அபாயத்தைக் கருத்திற்கொண்டு முருகைக்கல் அகழ்விற்கு வடமாகாண சபையின் எதிர்ப்பு காணப்பட்டுள்ளது	அமைச்சரவையிற்கு அவர்களது ஆலோசனைகளுடன் அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு பி.க.அ /க.அ. மேலும் பணிக்கப்பட்டார்.
6.	இலங்கை சீமெந்துக் கம்பனி லிமிட்டட்டை மூடுவதென்றால் மொத்தப் பங்குகளில் 12% தனியார் பங்குதாரர்களைக் கொணடுள்ள அதற்கு கூட்டுத்தாபனம் இழப்பீடு செலுத்த நேரிடும் என்பதனால் கம்பனியை ஒருங்கிணைப்பதற்குத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.	தனியார் பங்குதாரர்களுக்கு இழப்பீடு செலுத்துவதற்காக திறைசேரியில் இருந்து நிதியைக்கோரி வேண்டுகோள் விடுக்கும் முன்மொழிவொன்றைக் கூட்டுத்தாபனம் தயாரிக்கலாம்.
7.	2010 இருந்து 2012 வரை செலவினங்களின் பாரிய அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. 2010ஆம் ஆண்டு ரூபா. 32,418,704ஆக காணப்பட்ட இது ரூபா.81,710,913 வரை அதிகரித்திருந்தது.	ரூபா.12 மில்லியன் பெறுதியான காலாவதியான 18,000 மூட்டைகளைக் கொண்ட சீமெந்துத் தொகை கைப்பற்றப்பட்டதனால் எற்பட்ட நட்டம், 1992ஆம் ஆண்டு தனியார்மயமாக்கப்பட முன்புள்ள காலப்பகுதியுடன் தொடர்பான மிகப்பழைய கடன் நிலுவையாக காணப்பட்ட அமெரிக்க டொலர் 300,000 செலுத்தித் தீர்த்தன் மீது ஏற்பட்ட செலவு, இலங்கை வங்கியிடம் இருந்து பெற்ற ரூபா.40 மில்லியன் கடன் ஆகியன கூட்டாக குறித்த செலவினத்தின் அதிகரிப்பிற்கு பங்களிப்புச் செய்திருந்தது.
8.	2003ஆம் ஆண்டு விற்பனை முகவர் ஒருவரிற்கு கடன் அடிப்படையில் வழங்கப்பட்ட 1500 சீமெந்து மூட்டைகளுக்காக போலிக் காசோலை மூலம் பிறப்பிக்கப்பட்டிருந்த ரூபா. 1,656,000ஐ மீளப்பெற வேண்டியிருந்தது	நீதி மன்றத்தினால் நிறுவனத்திற்குச் சார்பான ஒரு தீர்மானம் வழங்கப்பட்டிருந்தும் கூட , குறித்த விற்பனை முகவரிற்கு உரித்தான எந்தவொரு சொத்துக்களும் இல்லாததனால் அந்தப் பணத்தைக் குறைந்தபட்சம் அவரது ஆதனங்களை

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
		ஏலத்திலிட்டாவது மீட்க முடியாதுள்ளது.
	மத்திய சுற்றாடல் அதிகாரசபை சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு	**2014 ஓகத்து 19.**
1.	2008-2012 'பிலிசரு திட்டம்' மீதான முற்சாத்தியவள அறிக்கை இன்னும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் குறித்த திட்டம் பல சிரமங்களுக்கு மத்தியிலும் அமுலாக்கப்பட்டிருந்தது என்று பி.க.அ /க.அ. உறுதியளித்தார்.	கொழும்பில் குப்பை கூளங்களை சுகாதார அடிப்படையில் அகற்றுவதற்கு உகந்த காணியொன்றை இனங்காண்பதில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் முகம் கொடுக்கப்படும் சிரமங்கள் அத்தோடு மேற்கொண்ட தீர்வுகள் தொடர்பாக அறிக்கையொன்றை அனுப்புவதற்கு குழு பணிப்புரை விடுத்தது.
2.	தொம்பை திண்மக் கழிவு நீர் முகாமைத்துவத் திட்டத்தில் இடம் பெற்றதாகக் குறிப்பிடப்படுகின்ற அறிக்கையிடப்பட்ட முறைகேடுகள் பற்றிக் கலந்துரையாடியது. ஒப்பந்தக்காரர் எதிர்பார்த்தவாறு தேவைப்பாட்டைக் கொண்டிராத மண்ணை நீக்கப்படாமையினால் ஒரு நட்டம் ஏற்பட்டிருந்தது என்று பி.க.அ./க.அ. தெரிவித்தார். (பார்க்க -2013 செயலாற்றுகை)	இந்த விடயம் தொடர்பாக அதிகாரசபையினால் கையளிக்கப்பட்ட அறிக்கையை ஆராமாறும் தேவைப்படின் மீண்டும் குழுவிற்கு அறிக்கையிடுமாறும் குழு கணக்காய்வாளர் தலைமை அதிபதியைப் பணித்தது.
	இலங்கை கிரிக்கெட் விளையாட்டுத்துறை அமைச்சு	**2014 ஓகத்து 20**
1.	இலங்கை கிரிக்கெட் 2011ஆம் ஆண்டு உள்நாட்டு தொலைக்காட்சி ஒளிபரப்பு உரிமைகளை வழங்குவதற்குப் பின்பற்றிய கொள்வனவுச் செயற்பாடு வெளிப்படைத் தன்மையற்றது என்பதுடன் ஒரேயொரு விலைமனுக் கோரல் மாத்திரமே கேள்விப்பத்திரக்	இலங்கை கிரிக்கெட்டின் செயலாளர் பிரதம நிறைவேற்று அதிகாரியாக செயற்பட்ட ஒரு கம்பனிக்கு கேள்விப் பத்திரம் வழங்கப்பட்டமை தெளிவான மோதலொன்றிற்கு வழிவகுக்கிறது.

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	கோரலிற்கு பதிலளிக்கும் வகையில் கிடைக்கப்பெற்றிருந்தது. சிறிய விளம்பரமாக கேள்விப்பத்திரம் பிரசுரிக்கப்பட்டதினாலும் அதற்கு விண்ணப்பிப்பதற்கு காலம் குறுகியதாக காணப்பட்டதினாலும் கேள்விப்பத்திரத்திற்கு போதியளவு பிரச்சாரம் வழங்கப்பட்டிருந்ததில்லை.	
2.	2013ஆம் ஆண்டின் நட்டம் ரூபா.1.1 பில்லியனாகும்.	நட்டத்தில் ரூபா.674 மில்லியன் தேய்மானம் உள்ளடங்குகிறது என்பதுடன் உண்மையான நட்டம் ரூபா.436 மில்லியன் ஆகும் என்று பி.க.அ /க.அ. தெரிவித்தார். மேலும், இலாபத்தன்மை கிடைக்கப்பெறுகின்ற சுற்றுலாக்களிலே பாரியளவு தங்கியுள்ளது என்று அவர் தெரிவித்தார்.
3.	2011 மற்றும் 2012ஆம் ஆண்டுகளில் இலங்கை கிரிக்கெட் முறையே ரூபா.74,901,760, ரூபா242,465,738 மில்லியன் வருவாய்களை அறவிட முடியாக்கடனாக பதிவழித்திருந்தது.	அறவிடப்பட வேண்டியவற்றை சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் இருந்து மீளப்பெறுவதற்கு போதிய நடவடிக்கை மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் கடன்களை மீளப்பெறல் திருப்பதியற்றதாக இருந்தது அவதானிக்கப்பட்டது.
4.	பி.க.அ /க.அ. கூற்றின் படி ச.கி.பே.(ICC) தேவைக்கேற்ப இலங்கை கிரிக்கெட் 2010 சனவரி முதல் 2011பெப்ருவரி வரையான காலப்பகுதியில் அன்றைய உலகக் கிண்ணப் போட்டிகளுக்காக புதிய விளையாட்டு மைதானங்களை நிர்மாணித்திருந்தது.	இந்தத் தீர்மானம் காரணமாக இலங்கை கிரிக்கெட்டின் நிதி நிலைமை மீது ஏற்பட்ட தாக்கத்தைப் பற்றி குழு கலந்துரையாடியதோடு ச.கி.பே. (ICC) உலகக் கிண்ணப் போட்டிகளுக்காக புதிய விளையாட்டு மைதானங்களை நிர்மாணிக்குமாறு வழங்கிய பணிப்புரையை உறுதி

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
		செய்வதற்கு எழுத்துமூல சாட்சியை பி.க.அ /க.அ இருந்து எதிர்பார்த்தது.
	இலங்கை சுற்றுலா , ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம் **பொருளாதார அபிவிருத்தி அமைச்சு**	**2014 ஓகத்து 21**
1.	2010ஆம் ஆண்டு அமைச்சின் கீழ் உள்ள நான்கு நிறுவனங்களையும் ஒன்றிணைப்பதற்கான நகல் சட்டம் ஒன்று சட்டத்துறை தலைமை அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் கூட அவற்றினால் கையாளப்படும் வித்தியாசமான செயற்பாடுகளைக் கருத்திற்கொண்டு நான்கு நிறுவனங்களையும் தொடர்ந்தும் பேணிவருவதற்கு மேற்கொண்ட தீர்மானம் காரணமாக இந்த விடயம் தடைப்பட்டுள்ளது.	சுற்றுலா ,ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம், இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் மற்றும் இலங்கை மாநாட்டுப் பணியகம் ஆகிய இந்த நிறுவனங்களில் ஒருங்கிணைப்பும் பொறுபபுக்கூறலும் திருப்பதியற்றதாக இருந்ததோடு இவை அனைத்தினதும் உச்ச அமைப்பான இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபைக்கு வருடாந்த அறிக்கையை சமர்ப்பிக்காதமைக்காகவும் குறித்த வருட செயற்பாட்டை அறிக்கையிடாமையிற்காகவும் அவர்களை பொறுப்புக்கூற வைப்பதற்கு தற்போதைய சட்டத்தை திருத்தமுடியுமா என்பதைப் பார்க்குமாறு பி.க.அ /க.அ பணிக்கப்பட்டார். மேலும், இந்த மூன்று நிறுவனங்களையும் தனி அமைப்புகளாகப் பேணும் அதேவேளையில் அவற்றின் வினைத்திறனை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பதைப் பற்றி ஒரு அறிக்கையை தயார்செய்து குழுவிற்கு அளிக்குமாறும் பணிக்கப்பட்டார்.
2.	2011ஆம் ஆண்டு “சமுத்ரா ஹோட்டலின்” 13 அறைகளை புதுப்பிப்பதற்கான ஆரம்ப மதிப்பீடு	இந்த விடயத்தை ஆராய்வதற்கு குழு ஒன்றை நியமிக்கப்பணித்ததன் பிறகு

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	2.5 மில்லியனாக இருந்தும் கூட ஓர் அறைக்கு ரூபா.3.9 மில்லியன் எள்ற அடிப்படையில் கேள்விப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது.எனினும் தெரிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரர் குறித்த தரத்திற்கு அமைவாக புதுப்பித்தல் நடவடிக்கையை செய்யத் தவறியும் கணக்காய்வு அவதானிப்புக்களைப் புறக்கணித்து இறுதிப் பணத்தொகை செலுத்தப்பட்டிருந்தது.	பி.க.அ /க.அ அறைகளைத் திருத்தி விரிவான அறிக்கை ஒன்றை சமர்ப்பிப்பக்க வேண்டும் என குழு எதிர்பார்த்தது.இந்த நான்கு நிறுவனங்களையும் ஒன்றிணைப்பதன் மூலம் இந்த முறைகேடுகளை தவிர்க்க முடிந்திருக்கும் என்று குழு கருத்துத் தெரிவித்தது. இதுவரை இந்த விடயத்திற்கு எந்தவொரு உத்தியோகத்தரையும் பொறுப்புக்கூற வைக்க முடியாதுள்ளது.
3.	கடன் வாங்கியவர்கள் மற்றும் பற்றாளர்கள் பலரினதும் குறிப்பிடத்தக்களவு தீர்க்கப்படாத நிலுவைகள் நீண்ட காலமாக இருந்து வந்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டது.	நிர்வாக மற்றும் நிதியல் விடயங்களை சீர்செய்வதற்காக அமைச்சின் கீழ் உள்ள அனைத்து நிறுவனங்களுக்கும் ஏற்புடைய புதிய நிர்வாக முறைமையொன்றை உருவாக்குவதற்கு பி.க.அ பணிக்கப்பட்டார். 2014 ஓகத்து முடிவடைவதற்கு முன்னர் மறுசீரமைப்புச் செயற்பாடு மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட நிலுவையில் உள்ள தொகைகளை செலுத்தித் தீர்க்க மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றி அறிக்கையொன்றை தயாரிக்குமாறு க.அ. பணிக்கப்பட்டார்.
4.	ரூபா. 571,985,108 மதிப்புள்ள 11 பொருட்களின் ஒப்பந்த உடன்படிக்கைகள், சரிபார்த்தல் அறிக்கைகள், சொத்துக்களின் பதிவேடு, இருப்புச் சீராக்கங்கள் மற்றும் சான்றுக்குரிய ஆவணங்கள் கணக்காய்விற்காக வழங்கப்பட்டிருக்கவில்லை	அத்தகைய பதிவேடுகள் பேணப்படாமை நிறுவனத்தின் ஆதனங்களின் தவறான பயன்பாட்டிற்கு இட்டுச் சென்றுள்ளதுடன் நிறுவனத்தின் உத்தியோகத்தர் ஒருவர் ஆதனங்களின் அத்தகைய தவறான பயன்பாடு தொடர்பாக குற்றவாளியாக்கப்பட்ட சந்தர்ப்பம்

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
		ஒன்றும் காணப்பட்டது. குறித்த உத்தியோகத்தரை இடை நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது என்று பி.க.அ /க.அ கூறினார்.
	யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உயர்கல்வி அமைச்சு.	**2014 ஓகத்து 22**
1.	பல்கலைக்கழகத்தில் பெருமளவில் சொத்துக்கள் பயன்பாடற்ற நிலையில் இருப்பதை குழு அவதானித்து.	பி.க.அ /க.அ தெளிவுபடுத்தலுக்கு அமைய கணக்காய்வின் போது பயன்பாடற்ற நிலையில் இருந்த சொத்துக்கள் பிறகு பயன்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டிருந்தது. இந்த பயன்பாடற்ற நிலையில் உள்ள சொத்துக்கள் பற்றி அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு குழு பி.க.அ /க.அ பணித்தது.
2.	வெளிநாட்டுக் கல்விக்காகச் சென்று மீணடும் நாடு திரும்பாது பிணைகளை முறித்த விரிவுரையாளர்களிடம் இருந்து நஷ்டஈட்டை மீளப்பெறுதல் திருப்பதிகரமாக இல்லை என அவதானிக்கப்பட்டது. 2014.08.20ஆம் திகதி இருந்தவாறு ரூபா. 96.2 மில்லியனின் ரூபா. 19.15 மில்லியன் மாத்திரமே மீளப்பெறப்பட்டிருந்தது.	ரூபா. 30.17 மில்லியன் மதிப்புள்ள பிணைகள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததோடு ரூபா.47.26 மில்லியன் மதிப்புள்ள பிணைகளை முறித்த ஏனைய ஆட்களை பல்கலைக்கழகம் தேடிக்கொண்டிருந்தது.
3.	ரூபா. 1,933,590,051 மதிப்புள்ள சொத்துக்களின் மறுபடிவிலைமதித்தல் தனியார் தரப்பொன்றிற்கு புறவளமிடப்பட்டிருந்தும் கூட 80% பணி மாத்திரமே இன்னும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. நிதி ஒழுங்குவிதிகளுக்கு அமைய அரசாங்க பிரதம மதிப்பாளர் தனது	மதிப்பீடு தொடர்பான விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளிற்கு இணங்க செயற்படுமாறு அறிவுருத்தி நிதி ஒழுங்குவிதிகளின் உரிய வாசகத்தின் பிரதியொன்றை அனைத்து பல்கலைக்கழகங்களிற்கும் விநியோகிக்குமாறு பல்கலைக்கழக மானியங்கள்

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	சேவைகளை வழங்க முடியாத சந்தர்ப்பங்களின் போது மாத்திரமே வெளித் தரப்பு ஒன்றின் சேவையை பெற்றுக்கொள்ள முடியும். (பார்க்க – கணக்காய்வுப் பந்தி 2.2.1(i)-2011)	ஆணைக்குழுவின் தவிசாளரிற்கு குழு பணித்தது.
4.	திறைசேரியின் அங்கீகாரம் இல்லாமல் கூட பல்வேறுபட்ட கொடையாளிகளிடம் இருந்து கிடைத்த ரூபா.29,493,089 நன்கொடைகள் அவை வழங்கப்பட்ட நோக்கத்திற்கு மாறாக ஏனைய தேவைகளுக்காக முதலீடு செய்யப்பட்டிருந்தது. பல்வேறு காரணங்களிளால் அவை வழங்கப்பட்ட நோக்கத்திற்காக முதலீடு செய்ய முடியாமல் இருந்த இந்த நன்கொடைகள் அவற்றை வழங்கியவர்களின் அங்கீகாரத்துடன் வேறு நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது என பி.க.அ /க.அ கூறினார். பல்கலைக்கழகங்களிற்கு சொந்தமான அவற்றின் நிதிகளை அமைச்சின் செயலாளரின் தற்றுணிபின் பேரில் மாத்திரம் முதலீடு செய்வதற்கு திறைசேரியினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதால் திறைசேரியின் அங்கீகாரத்தை பெறுவதற்கான தேவை இல்லை எனவும் அவர் கூறினார்.	பல்கலைக்கழகங்களுக்கு அத்தகைய அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது குறுகியகால தேவைகளுக்காக மாத்திரமே அன்றி முதலீடுகளுக்காக அல்ல என்று திறைசேரி உத்தியோகத்தர்கள் தெரிவித்ததனால் பல்கலைக்கழகத்தினால் குறித்த அங்கீகாரத்திற்கு தவறாக பொருள்கோடல் வழங்கப்பட்டிருத்தாக தெரிகிறது. குறித்த அங்கீகாரம் தொடர்பில் விளக்கமளிக்க பி.க.அ இணக்கம் தெரிவித்தார்.
5.	உரிய ஆவணங்கள் காணப்படாமையினால் சொத்துக்கள், பொருட்பதிவேட்டில் காணபட்டவை மற்றும் பல்வேறு	இந்த வருட திசெம்பர் இறுதிக்கு முன்னர் நிலையான ஆதனங்களுக்கான இடாப்பை பூர்த்திசெய்வதற்கு க.அ. இணக்கம்

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	பழுதுபார்த்தல்கள், கட்டணங்கள்,வாடகை போன்றவற்றிற்கான செலவினங்கள் ரூபா.1,323,032,618 தொகை தொடர்பாக உத்தரவாதம் வழங்கமுடியாத நிலையில் கணக்காய்வு உள்ளது. (பார்க்க – கணக்காய்வுப் பந்தி 1.2.4 (அ)-2011 மற்றும் 1.2.3 (அ,ஆ)-2012)	தெரிவித்தார்.

உபகுழு I இனால்
பரீட்சிக்கப்பட்ட நிறுவனங்கள்

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனம் **சுதேச மருத்துவத்துறை அமைச்சு.**	**2014 செப்தெம்பர் 12**
1.	வைன் மதுபான உற்பத்திக்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,011,767 பெறுமதியுள்ள 24,780 போத்தல்கள் மற்றும் ரூபா. 667,500 பெறுமதியுள்ள 30,000 தக்கைகள் பற்றி குழு விசாரித்தது. உற்பத்தி இயலளவைக் கருத்திற்கொள்ளும் போது குறித்த அளவு 17 வருடங்களுக்கு போதுமாகும். (பார்க்க – கணக்காய்வுப் பந்தி 4.2.(7)-2011)	பி.க.அ /க.அ கூற்றின் படி, இலங்கை கண்ணாடிக் கம்பனியிடம் இருந்து வைன் போத்தல் வாங்கும் போது கொள்வனவு கட்டளையில் குறைந்தபட்ச அளவு குறித்துரைக்கப்பட்டுள்ளது. நிறுவனம் உற்பத்தியை அதிகரிக்க திட்டமிட்டிருந்தும் கூட அது வெற்றியளிக்காதிருந்தது.
	சுதேச மருத்துவத்துறை நிறுவகம் உயர்கல்வி அமைச்சு.	**2014 செப்தெம்பர் 12**
1.	முகாமைத்துவக் கட்டுப்பாட்டிற்கான பயனுறுதிமிக்க கருவியாக வரவு-செலவுத் திட்டம் பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் உண்மையான வருமானத்திற்கும் வரவு செலவில் திட்டமிடப்பட்ட வருமானத்திற்கும் இடையே 48% விலகல் அவதானிக்கப்பட்டது. மூன்று மீண்டெழும் விடயங்களின் கீழ் ஏற்பட்ட செலவுகள் நிதி ஒதுக்கீடுகளை ரூபா 7,016,415ஆல் விஞ்சியிருந்தது. நிதி ஒதுக்கீடுகளின் குறைபாவனை இரண்டு மீண்டெழும் விடயங்கள் தொடர்பாக அவதானிக்கப்பட்டது.	சர்வதேச கண்காட்சி ஒன்றிற்காக அந்தப் பணத்தை செலவிட நேரிட்டது என்று பி.க.அ /க.அ கூறினார். அந்தத் திருத்தங்களைச் சீராக்குவதற்கும் முன் அங்கீகாரத்துடன் பணத்தைச் செலவு செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அவர் கூறினார்.

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	(பார்க்க – கணக்காய்வுப் பந்தி 5.4 - 2012)	
2.	2012ஆம் ஆண்டு பட்டப்பின் படிப்பு நடைமுறைக் கணக்கில் சராசரி மாதாந்தச் செலவு ரூபா 235,100 மாத்திரம் காணப்பட்ட போதும், உரியமுறையில் முதலீடு செய்யாது , சராசரி மாதாந்த நிலுவையாக ரூபா 1,326,700 வைத்திருக்கப்பட்டது. 2013 திசெம்பர் 31ஆம் திகதி இருந்தவாறு நிலுவை ரூபா. 2,727,387 ஆகக் காணப்பட்டது.	வங்கியில் முதலீடு செய்வதற்கு பல்வேறு தேர்வுகள் காணப்படுகின்றன என்றும் நடைமுறைக் கணக்கு நிலுவைகளை முதலீடு செய்வதற்கு தகுந்த முறையொன்றை கையாளுமாறும் குழு பணித்தது.
3.	ரூபா3,00.5,192 பெறுமதியான சிவந்தமண் மற்றும் மருந்து உற்பத்தி இயந்திரக் கொள்வனவு தொடர்பாக 2012ஆம் ஆண்டில் இடம்பெற்றிருந்த கொள்வனவு நடைமுறையில் பாரதூரமான நிதி துஷ்பிரயோகத்தை ஏற்படுத்திய நடவடிக்கையைக் குழு அவதானித்தது.	CAO/AO அந்தச் சம்பவம் பற்றி விபரமாகக் கூறினார். ஒவ்வாரு கொடுக்கல் வாங்கல்களிலும் நிதி ஒழுங்குவிதிகளைப் பிரயோகித்து மருந்து உற்பத்தி இயந்திரம் தொடர்பான அறிக்கையொன்றை இரண்டு வாரங்களில் சமர்ப்பிக்குமாறு குழு பணித்தது.
	தேசிய நூலக, தகவல் விஞ்ஞான நிறுவகம் **உயர்கல்வி அமைச்சு**	**2014 செப்ரெம்பர் 12**
1.	நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட பாடநெறிகள் இற்றைவரை ஒரு தகைமையாக ஆசிரியர் சேவை பிரமாணக்குறிப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.	நிறுவகத்தின் பாடநெறிகளைப் பதவி உயர்வுகளுக்கான தகைமையாக ஆசிரியர் சேவை பிரமாணக்குறிப்பில் சேர்த்துக்கொள்வதற்கெனக் கௌரவ அமைச்சருடன் பல கலந்துரையாடல்கள் நடைபெற்றிருந்த போதிலும், அது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என AO கூறினார்.
2.	நிறுவகத்தின் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் பாடநெறிகளுக்கான	பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அங்கீகாரம்

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டிராமையால், அவர்களினால் வழங்கப்பட்ட சான்றிதழ்களை ஏற்றுக்கொள்ளல் சர்ச்சைக்குரியதாயிருந்தது.	ஏற்கனவே நாடப்பட்டிருந்ததுடன் இவ்விடயத்தைத் தீர்த்துவைப்பதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்வதெனப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அதிகாரிகள் இணங்கியிருந்தனர் எனவும் கூறப்பட்டது.
	தொழில்நுட்பவியல் நிறுவகம் – மொறட்டுவ பல்கலைக்கழகம் **உயர்கல்வி அமைச்சு**	**2014 செப்ரெம்பர் 12**
1.	2010 மற்றும் 2011 ஆகிய வருடங்களுக்கெனப் பாராளு மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆண்டறிக்கைகளில் நிதிக் கூற்றுக்கள் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை.	இவ்விடயம் தொடர்பாக உயர்கல்வி அமைச்சினால் அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரகாரம் ஆண்டறிக்கைகள் தயாரிக்கப்பட்டிருந்தன எனக் கணக்கீட்டு அதிகாரி கூறினார். பொதுமக்களுக்கான தகவல் குறித்த தேவைக்கெனப் பாராளுமன்றத்தில் ஆண்டறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுகின்றமையால் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களை ஆண்டறிக்கையில் உள்ளடக்குவது அவசியமாக இருந்தது எனக் குழுவினால் வலியுறுத்தப்பட்டது. 2010 மற்றும் 2011 ஆகிய வருடங்களுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளின் பிரதிகளைக் குழுச்செயலகத்திற்கு அனுப்பிவைப்பதோடு அமைச்சரவை அங்கீகாரத்துடன் அவற்றை உள்ளடக்கியபின் ஆண்டறிக்கைகள் இரண்டையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறும் பிரதான கணக்கீட்டு அதிகாரி/கணக்கீட்டு

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
		அதிகாரி பணிக்கப்பட்டார்.
2.	பதவியை வெறிதாக்கிய 03 அலுவலர்களிடமிருந்து ரூபா.205,290/= மற்றும் ஒப்பந்த அடிப்படையில் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்த விரிவுரையாளரிடமிருந்து ரூபா.106,350/= ஆகிய ஊழியர்கடன்கள் அறவிடப் பட்டிராமை அவதானிக்கப்பட்டது.	நிறுவனத்திற்கெதிராக அலுவலர் ஒருவர் சட்ட நடவடிக்கை மேற்கொண்டிருந்ததோடு ஏனைய இரண்டு அலுவலர்களும் வெளிநாடு சென்றிருந்தமையாலும் நிலுவைத்தொகைகளை அறவிடுவது தாமதமடைந்தது எனக் கணக்கீட்டு அதிகாரி கூறினார். எனினும், ஒப்பந்த அடிப்படையில் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தவரிடமிருந்து ரூபா.102,000/= முந்திய மாதத்திலே அறவிடப்பட்டிருந்தது.
	தேசிய மனிதவள அபிவிருத்தி மன்றம் **இளைஞர் அலுவல்கள், திறன் அபிவிருத்தி அமைச்சு**	**2014 செப்ரெம்பர் 12**
1.	மொத்த மீண்டெழும் செலவினத் தொகையான ரூபா.30,247,869/= இல், மன்றத்தின் முக்கிய நோக்கமான மனிதவள அபிவிருத்திக்கென ரூபா.19,182,148/= செலவழிக்கப் பட்டிருந்த அதேவேளை இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக பிரச்சாரத்திற்கென ரூபா.9,939,546/= அல்லது 52 சதவீதம் செலவழிக்கப்பட்டிருந்ததைக் குழு அவதானித்தது. (குறிப்பு – கண்காய்வுப் பந்தி 3.1(ஆ) -2011)	பிரதான கணக்கீட்டு அதிகாரி/ கணக்கீட்டு அதிகாரி ஏற்றுக்கொண்டதுடன் இந்த விடயம் அடுத்துவரும் வருடத்தில் திருத்தியமைக்கப்படும் எனவும் கூறினார்.
2.	கல்விப் பொதுத்தராதர (சாதாரணதரப்) பரீட்சையில் சகல பாடங்களிலும் சித்தியடையத்	இந்நிகழ்ச்சித்திட்டம் முன்னைய தலைவரின் காலப்பகுதியின்போது மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன்

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	தவறும் மாணவர்களை வலுவூட்டு வது தொடர்பில் வெற்றியளிக்காத நிகழ்ச்சித்திட்டத்திற்கு ரூபா.12,979,803/= செலவழிக்கப் பட்டிருந்தமை குழுவினால் அவ தானிக்கப்பட்டது. (குறிப்பு: கணக்காய்வுப் பந்தி 3.1(இ) – 2011)	தற்போது அது நிறுத்தப்பட்டிருக்கின்றது எனவும் பிரதான கணக்கீட்டு அதிகாரி/ கணக்கீட்டு அதிகாரி கூறினார்.
3.	"வேலைவாய்ப்பின்மையிலிருந்து வேலைவாய்ப்பு வரை" எனும் கருத்திட்டத்திற்கு ரூபா.2,218,153/= செலவழிக்கப்பட்டிருந்ததைக் குழு அவதானித்தது. (குறிப்பு: கணக்காய்வுப் பந்தி 3.1(இ) – 2012 மற்றும் 3.1(ஈ) – 2011)	வெற்றியளிக்காதிருந்த இந்நிகழ்ச்சித்திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை எனப் பிரதான கணக்கீட்டு அதிகாரி/ கணக்கீட்டு அதிகாரி கூறினார்.
4.	மன்றம் நடாத்துவதற்குத் திட்டமிட்டிருந்த "நிபுனத்தா ஹன்ட" என அழைக்கப்பட்ட தேர்ச்சியில்லாத கலைஞர்களுக்கான தொலைக்காட்சி பாட்டுப் போட்டிக்கென 2011ஆம் ஆண்டில் ரூபா.3,082,453/= பத்திரிகை விளம்பரத்திற்கெனச் செலவழிக்கப் பட்டிருந்ததைக் குழு அவதானித்தது. பத்திரிகை விளம்பரம் தவிர, அங்கு வேறு ஏதும் முன்னேற்றம் இற்றைவரை ஏற்பட்டிருக்கவில்லை என்பதையும் குழு அவதானித்தது.	பிரதான கணக்கீட்டு அதிகாரி/ கணக்கீட்டு அதிகாரி பதிலிறுத்த முறைதொடர்பில் குழு திருப்தியடையாததோடு அப்பணத்தைச் சம்பந்தப்பட்ட ஆட்களிடமிருந்து அறவிடுமாறும் பணித்தது.
5.	இலங்கையில் உள்ள வேலையற்றோர் பற்றிய தரவுத் தளமொன்றை உருவாக்கிப் பேணுவதற்கெனப் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றைத் தனியார் கம்பனியுடன் ஏற்படுத்தியிருந்தமையைக் குழு அவதானித்ததுடன் அச்செயற்பாடு தனியார் கம்பனிக்கு	முன்னைய தவலைவரின் காலப்பகுதியின்போது பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்படாமல் இது மேற்கொள்ளப்பட்டிருந்தது என CAO/AO கூறியமையால், பிரதேச செயலகங்களில் இணைப்புச் செய்யப்பட்டுள்ள பட்டதாரிகள் மூலமாக இதை மேற்கொள்ளுமாறு

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	வழங்கப்பட்டது ஏன் எனவும் வினவியது.	CAO/AO ஐக் குழு பணித்ததுடன் இதற்குப் பொறுப்பான ஆட்களுக்கெதிராக நீதிமன்ற வழக்கொன்றைத் தாக்கல் செய்து இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை பற்றிக் குழுவிற்கு அறிக்கையொன்றை அனுப்பிவைக்குமாறும் பணித்தது.
6.	விளம்பரங்களை நேரடியாக இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகத்திற்குக் கையளிப்பதற்குப் பதிலாகக் கொள்வனவு வழிகாட்டல்களைப் பின்பற்றாது 2012ஆம் ஆண்டில் தனியார் கம்பனியொன்றிற்கு ரூபா.4,937,720/= செலுத்தப்பட்டது ஏன் எனக் குழு விசாரித்தது. தனியார் கம்பனி முன்னைய தலைவரின் பிரத்தியேக முகவரியில் அமைந்திருந்தது.	இவ்விடயத்தில் இலஞ்ச மற்றும் ஊழல் ஆணைக்குழுவினர் தமது அதிகாரிகள் சாட்சியமளிப்பதற்கென வரவழைக்கப்பட்டு விசாரணை நடாத்தப்பட்டிருந்தபோதிலும், ஏதேனும் முடிவு தமக்கு இற்றைவரை அறிவிக்கப்பட்டிருக்கவில்லை என CAO/AO கூறினார். முன்னைய தலைவரைத் தொடர்புகொள்ள முடியவில்லை என்பதால் விசாரணையொன்றை அவர்களை மேற்கொள்ளுமாறும் குழு கூறியது.
	வாழ்க்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபை **இளைஞர் அலுவல்கள், திறன் அபிவிருத்தி அமைச்சு**	**2014 செப்ரெம்பர் 12**
1.	சம்பளத்துடனான கற்கை விடுமுறை வழங்கப்பட்டிருந்ததுடன் பணிக்கு மீண்டும் சமூகமளிக்காதிருந்த 03 அலுவலர்களிடமிருந்து அறவிடவேண்டியரூபா.8,164,704/= தொகை பற்றிக் குழு விபரமாகக் கலந்துரையாடியது.	இந்தக் கொடுக்கல் வாங்கல் சம்பந்தப்பட்ட சகல விபரங்கள் மற்றும் கண்டுபிடிப்புகள் ஆகியவற்றைச் சரியாகச் சட்டத்துறை அதிபதிக்கு அனுப்பிவைத்துச் சட்ட ஆலோசனைக்கான கோரிக்கையை விடுத்து அதன் பிரகாரம் நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு CAO/AO ஐக் குழு பணித்தது.

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
2.	அலுவலர் ஒருவர் செப்ரெம்பர் 2008 முதல் டிசம்பர் 2010 வரையான காலப்பகுதிக்கு ரூபா.40,000/= எனும் மாதாந்த வாடகையில் தனக்குச் சொந்தமான வாகனமொன்றை வாடகைக்கு அமர்த்துவதற்கு ரூபா.1.119 மில்லியனை வாடகையாக மோசடி செய்து பெற்றுக்கொண்டமை பற்றிக் குழு விசாரித்தது.	சம்பந்தப்பட்ட அலுவலர், பதவியிலிருந்து நீக்கப்பட்டதோடு அவருக்கெதிராகக் கொழும்பு மாவட்ட நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டதெனவும் CAO/AO கூறினார். அத்துடன், முறைப்பாட்டை மேற்கொள்வதற்கென மோசடிப்புனாய்வுப் பிரிவுடன் கலந்துரையாடல் நடாத்தப்பட்டிருந்தது.
3.	2009ஆம் ஆண்டில் பெறுமதிசேர் வரி மற்றம் பிடித்துவைத்தல் வரி ஆகியவற்றைக் கழிக்காது நிலையான சொத்துப்பதிவு இடாப்பைத் தயாரிப்பதற்கென ஒப்பந்தக்காரருக்கு ரூபா.2,643,114/= செலுத்தப்பட்டமை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பற்றியும் குழு வினவியது.	இவ்விடயம் தொடர்பாக வாய்மூல மற்றும் எழுத்துமூல விசாரணைகளை அவர்கள் மேற்கொண்டிருந்தபோதிலும் இற்றைவரை தீர்த்துவைக்க முடியவில்லை என CAO/AO கூறினார். உடன்படிக்கையின் அடிப்படையில் அவர்களுக்கெதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு குழு பணித்தது.
4.	முகாமைத்துவ சேவை சுற்றறிக்கைக்கு முரணாக 55 தடவைகள் ஊழியர்ககள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுப் பதவியுயர்வு மேற்கொள்ளப்பட்டிருந்தமை மற்றும் முன்னைய அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் கூட்டத்தில் பணிக்கப்பட்டவாறு இந்த விடயத்தைத் தீர்த்துவைப்பதற்கு மேற்கொள்ளப்பட்டிருந்த பரிகார நடவடிக்கை பற்றிக் கழு வினவியது.	அதற்குத் தழுவல் அங்கீகாரமொன்றைப் பெற்றுக்கொள்வதற்குத் தாம் திறைசேரியைக் கோரியிருந்தபோதிலும் அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை என CAO/AO கூறினார். இம்மாற்றம் பற்றிய தமது அதிருப்தியைக் குழு வெளிப்படுத்தி, இத்தகைய கொடுப்பனவுகளை முன்னங்கீகாரம் இன்றி எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டாமெனவும் ஆலோசனை கூறியது.

உபகுழு II இனால்
பரீட்சிக்கப்பட்ட நிறுவனங்கள்

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	தொலைக்காட்சி நிறுவகம் **வெகுசன ஊடக, தகவல் அமைச்சு**	**2014 யூலை 24**
1.	2008ஆம் ஆண்டுவரையான ஆண்டறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	முன்னைய வருடங்களின் கணக்குகளில் உள்ள கணக்கீட்டு வழுக்களைச் சரிசெய்யும் செயற்பாட்டில் அவர்கள் ஈடுபட்டதுடன் பழைய படுகடனாளிகளைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டியிருந்தமையால் அது கடினமான பணியாக இருந்தது என CAO/AO கூறினார். 2003 முதல் 2008 வரையான ஆண்டறிக்கைகளை முடிந்தவரை விரைவில் சமர்ப்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு CAO/AO பணிக்கப்பட்டார்.
2.	2014ஆம் ஆண்டிற்கான கணக்காய்வுக் குழுக் கூட்டம் ஒன்றேனும் நடாத்தப்பட்டிராத அதே வேளையில் 2013ஆம் ஆண்டிற்கென ஒரு கூட்டம் மட்டுமே நடாத்தப்பட்டிருந்தது.	நிறுவனத்தின் வினைத்திறன் தொடர்பாக ஆகக்குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையேனும் கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்படவேண்டியதன் தேவையைக் குழு வலியுறுத்தியது.
3.	நிறுவனத்தை ஒரு சட்ட அமைப்பாகக் கூட்டிணைத்தல் தொடர்பான தற்போதைய நிலைமை பற்றி விசாரிக்கப்பட்டது.	இவ்விடயம் தொடர்பாக 02 அமைச்சரவைப் பத்திரங்கள் இரு தடவைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அதேவேளையில் 2008ஆம் ஆண்டில் மீள்கட்டமைப்புச் செயன்முறை ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அண்மையில் இறுதி அவதானங்களுக்கான திறைசேரியின் உடன்பாடு பெறப்பட்டிருந்தது எனவும்

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
		CAO/AO தெரிவித்தார். இவ்விடயத்தை 03 மாதகாலப்பகுதியினுள் முடிவு செய்யுமாறு CAO/AO பணிக்கப்பட்டார்.
4.	ரூபா.6.5 மில்லியன் இனங்காணப்படாத படுகடனாளி நிலுவைகள் காணப்பட்டன.	10 வருடங்களுக்கு முற்பட்ட சில நிதி விடயங்கள் இந்நிலைமைக்கு இட்டுச் சென்றிருந்ததுடன் அத்தகைய செலவினங்களை ஏற்படுத்துவதற்குக் கட்டளையிட்ட ஆட்களைத் தேடிக் கண்டுபிடிப்பது கடினமாக இருந்ததெனவும் CAO/AO கூறினார். அவசியமான அங்கீகாரத்துடன் அறவிடப்படாத தொகைகளைப் பதிவழிப்புச் செய்வதற்கு ஏற்கனவே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன எனவும் கூறினார்.
5.	ஊடகக் கொள்கையொன்றை வகுத்தல்.	துறை முழுவதற்குமான ஊடகக் கொள்கையொன்று வகுக்கப்பட்டால் அது நாட்டிற்று நன்மைபயப்பதாகும் எனக் குழு ஆலோசனை வழங்கியதோடு கௌரவ அமைச்சரின் வழிகாட்டலுடன் அத்தகைய கொள்கையொன்றை வகுப்பதற்கான சாத்தியக்கூற்றைப் பரிசீலிக்குமாறும் CAO க்குத் தெரிவித்தது.
6.	ரூபா.18,613,695/= பெறுமதிசேர் வரியானது உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்துக்கு அனுப்பிவைக்கப்படாது சேமிப்புக்கணக்கொன்றில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது.	குறித்த காலப்பகுதியில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்தப்படாதிருந்த பாரிய தொகைப்பணம் நிலுவையில் இருந்தமையால், முன்னைய விடயம் தீர்த்துவைக்கப்பட்டபின் செலுத்தித் தீர்த்துவைப்பதற்காக

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
		ஏதேனும் நோக்கத்திற்கென உபயோகிக்காது பணத்தை வைத்திருக்குமாறு அமைச்சு நிறுவனத்துக்குத் தெரிவித்திருந்தது என CAO கூறினார். உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்துடன் கலந்துரையாடியபின் இந்த விடயத்தை விரைவில் தீர்த்துவைக்குமாறு CAO பணிக்கப்பட்டார்.
	இலங்கைப் பத்திரிகைப் பேரவை **வெகுசன ஊடக, தகவல் அமைச்சு**	**2014 யூலை 24**
1.	பேரவையின் பிரதான பதவிகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஏதேனும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததா எனக் குழு விசாரித்தது.	இரண்டு உதவி ஆணையாளர்கள் ஏற்கனவே நியமிக்கப்பட்டிருந்தனர் எனவும் ஆணையாளர் பதவிக்கான வெற்றிடம் விளம்பரப்படுத்தப்பட்டிருந்த போதிலும் தேவையான தகைமைகளைக் கொண்டிராத ஒரு விண்ணப்பதாரி மட்டும் விண்ணப்பித்திருந்ததாகவும் CAO/AO கூறினார்.
2.	அலுவலகத்தை அரசாங்கக் கட்டடமொன்றிற்கு இடமாற்றம் செய்யும் தற்போதைய நிலைமை பற்றிக் குழு வினவியது.	நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் பல கலந்துரையாடல்கள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அரசாங்கத்துக்குச் சொந்தமான கட்டடத்தில் பொருத்தமான இடமொன்றைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்ததுடன் அந்த அலுவலகம் அமைச்சரவைக் கட்டடத்துக்கு இடமாற்றம் செய்ய முடியாமையால் பேரவையின் சுயாதீனத்தன்மை பாதிப்படையும்

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
		என CAO/AO கூறினார்.
3.	சட்டத்தின் 8ஆம் பிரிவிற்கிணங்க, பேரவையின் முக்கிய நோக்கங்களில் ஒன்றான ஊடகத்துறை ஒழுக்கநெறியின் உயர்தரத்தைப் பேணுவதாக இருந்ததோடு அந்நோக்கத்திற்காகத் தயாரிக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான ஒழுக்கநெறிக்கோவை 1981ஆம் ஆண்டிலிருந்து திருத்தப்படாமலிருந்தமை பற்றியும் குழு CAO/AO இன் கவனத்திற்குக் கொண்டுவந்தது.	CAO/AO கூறியதுபோல ஊடகத்தை ஒழுக்கரீதியான உடன்படிக்கையின் கீழ் கொண்டுவருவதற்கு முயற்சித்தபோது அது ஊடக சுதந்திரத்தை வெகுவாகப் பாதிக்கும் எனப் பொதுமக்கள் கூறி நிராகரித்தனர். மேலும், ஒரு நாடு ஊடகத்துறை மீது சட்டக்கட்டுப்பாட்டிலும் பார்க்க ஒழுக்கம் சார் கட்டுப்பாட்டைப் பேணிவரின், அந்த நாடு அபிவிருத்தியடைந்தது என்பதாகும். அத்துடன், அவ்விடயத்தை விரைவாக முடிவுறுத்துமாறு குழு பணித்தமையால் அவர்கள் அவ்விடயத்தை ஏற்கனவே இணையத்தில் வெளியிட்டிருந்தனர்.
	பின் அறுவடைத் தொழில்நுட்பவியல் நிறுவகம் **கமத்தொழில அமைச்சு**	**2014 யூலை 24**
1.	உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளில் எழுப்பப்பட்ட விடயங்களில் போதிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.	உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளில் எழுப்பப்பட்ட விடயங்களைக் கையாளுவதற்காகச் செயற்குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்ததுடன் அப்போது பல விசாரணைகள் சீர் செய்யப்பட்டிருந்ததாக CAO/AO தெரிவித்தார். எஞ்சியுள்ள விசாரணைகளைச் சீர் செய்யும் நடைமுறையைத் துரிதப்படுத்துவதுடன் ஏற்கனவே

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
		தீர்க்கப்பட்ட விடயங்கள் குறித்து நிறுவனத்தின் பிரதிநிதியொருவரின் மூலம் கணக்காய்வாளர் நாயகத்திற்குத் தெரியப்படுத்துமாறு CAO/AO பணிக்கப்பட்டார்.
2.	2010ஆம் ஆண்டளவில் முழுமையாகத் தேய்மானத்திற்குட்படுத்தப்பட்டுத் தொடர்ந்தும் பாவனையிலிருந்த ரூ.30,004,226/= பெறுமதியான ஏழு சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டுக் கணக்குகளில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.	மீள்மதிப்பீடு செய்வதற்காக மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு இச்சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் ஏற்கனவே வழங்கப்பட்டிருந்ததால், இச்சொத்துக்கள் நெல் சந்தைப்படுத்தல் சபையினால் இந்நிறுவனத்திற்கு மீள்மதிப்பீடு செய்யப்படாமலேயே மாற்றப்பட்டிருந்தது எனத் தெரிவிக்கப்பட்டது. இவ்விடயத்தைப் பின்னாய்வு செய்யுமாறு அமைச்சின் மூலம் துரிதப்படுத்துமாறும் AO பணிக்கப்பட்டார்.
3.	நீண்டகால நிலுவைத் தொகையான ரூ.1,778,837/= இனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் ரூ.2,494,275/= உரிய தரப்புகளுக்குத் தீர்க்கப்படாதிருந்தது.	சொத்துக்களை மாற்றம் செய்யும்போது நெல் சந்தைப்படுத்தல் சபையிலிருந்து இந்நிலுவைகள் தொடர்ந்ததாகவும் அப்போது 2014ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்படவிருந்த கணக்குகளிலிருந்து இந்நிலுவைகளை நீக்குவதற்குத் திறைசேரியின் அனுமதி பெறப்பட்டிருந்ததாகவும் AO தெரிவித்தார்.
4.	2011ஆம் ஆண்டளவில் விநியோகிக்கப்படுவதற்கு அட்டவணைப்படுத்தப்பட்டிருந்த ரூ.1.7 மில்லியன் பெறுமதியான	இப்பொருட்களைப் பாவனைக்கு உட்படுத்துவதற்கான பொருத்தமான பொறிமுறையொன்றைக்

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	பிளாஸ்ரிக் கொள்கலன்கள் மற்றும் ரூ.280,000/= பெறுமதியான 04 நடமாடும் விற்பனைச் சாவடிகள் பாவிப்பாரற்றுக் காணப்பட்டிருந்தன.	கண்டுபிடிக்குமாறு CAO/AO வைக் குழு பணித்தது. இச்சாவடிகள் தேசிய விவசாயிகள் வாரத்தின் நடவடிக்கைகளுக்குச் சமானமாக விநியோகிக்கப்படலாமென CAO/AO தெரிவித்தார்.
5.	நிறுவகத்தின் செயற்பாட்டு வருமானமானது 2012ஆம் ஆண்டிலிருந்து 2013ஆம் ஆண்டு வரை பாரியளவு குறைக்கப்பட்டிருந்தது.	குறைந்த வட்டி வருமானம், நூடில்ஸ் உற்பத்தியிலிருந்து பெறப்படும் குறைந்த வருமானம் மற்றும் திறைசேரியிலிருந்து வழங்கப்படும் திறைசேரிக்குறைப்பு என்பன இந்நிலையைத் தோற்றுவித்திருந்தன என CAO/AO தெரிவித்தார். காலாண்டுக் கணக்குகளையாவது தயாரிப்பது எந்தவொரு நிறுவனத்தினதும் அடிப்படைத் தேவையெனக் குழு அழுத்தியுரைத்ததுடன் மேற்குறிப்பிட்ட காலத்திற்கான நிதிப்பெறுபேறுகளை ஒருவார காலத்திற்குள் குழுச் செயலகத்திற்கு அனுப்பிவைக்குமாறும் பணித்தது.
	இலங்கைத் தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை **கமத்தொழில் அமைச்சு**	**2014 யூலை 24**
1.	23 பேரேட்டுக் கணக்குகளை இனங்காணல் அல்லது பதிவழித்தல் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	திறைசேரியின் அனுமதி பெறப்பட்டவுடன் இந்நிலுவைகள் பதிவழிக்கப்படுமென CAO/AO தெரிவித்தார்.
2.	வட்டக்கச்சிப் பண்ணை இடமாற்றத்துடன் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு	ஒரு மாத காலத்திற்குள் இயந்திரத்தைக் கையேற்குமாறு CAO/AO பணிக்கப்பட்டார்.

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	வழங்கப்பட்டிருந்த ரூ.1.5 மில்லியன் பெறுமதியான நெல் அறுவடை இயந்திரத்தைக் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	
3.	வேலியொன்றை நிர்மாணிப்பதற்காகத் தம்மால் ஏற்கப்பட்ட ரூ.3.2 மில்லியன் செலவினத்தை நிறுவனம் தீர்த்துவைக்கவில்லையென ஒப்பந்தக்காரர் ஒருவரினால் கோரிக்கைப்பத்திரமொன்று நிறுவனத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்ததுடன் மாவட்ட நீதிமன்றத்தில் ஒரு வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.	வழக்கின் இறுதியில் ஒரு தொகை இழப்பீடு வழங்கவேண்டியிருக்குமென்பதால் CAO/AO ஒப்பந்தக்காரருடன் ஒரு உடன்பாட்டிற்கு வரவேண்டுமெனக் குழு விரும்பியது.
	கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை **நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சு**	**2014 செப்டெம்பர் 26**
1.	அதிகாரசபைக்கு அனுப்பிவைக்கப்பட்ட டயஸ் இடம் மற்றும் திசாநாயக்கவத்தை வீடமைப்புத் தொகுதிகளில் இடம்பெற்ற பௌதீகக் கணக்காய்வு மேற்பார்வையில் வெளிக்கொணரப்பட்ட செய்யப்படாத ஒரு வேலைக்கான ரூ.2.5 மில்லியன் கொடுப்பனவு தொடர்பான கணக்காய்வு விசாரணை மற்றும் 2014.04.08ஆம் திகதியிடப்பட்ட மேலுமொரு கணக்காய்வு விசாரணை ஆகியவற்றிற்குப் பதிலளிக்காமை குறித்துக் குழு விசாரித்தது.	பதிலுக்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை CAO/AO விளக்கியதுடன் 2 வார காலத்திற்குள் பதில்களைக் கணக்காய்விற்கு அனுப்பிவைக்க உடன்பட்டார்.

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
2.	2012ஆம் ஆண்டில் 74 வீடமைப்புத் திட்டங்கள் தொடர்பில் கூட்டாட்சி ஆதனச் சான்றிதழ்கள் வழங்கப்படாமை மற்றும் முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்கள் நிறுவப்படாமை தொடர்பாகக் குழு வினவியது.	இது தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை CAO/AO விளக்கினார். எட்மன்டன் தொடர்மாடிக்குக் கூட்டாட்சி ஆதனச் சான்றிதழ்கள் வழங்கப்படாமை குறித்துப் பதிலளிக்கையில் மாநகரசபையானது நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து தொடர்மாடிக்கான இணங்கல் சான்றிதழைப் பெற்றுக்கொண்டிராதமையினாலேயே அதிகாரசபையினால் கூட்டாட்சி உடமைச் சான்றிதழை வழங்க முடியவில்லையென CAO/AO தெரிவித்தார். ஒரு மாத காலத்திற்குள் இது தொடர்பான விளக்கமான அறிக்கையொன்றை அனுப்புமாறு குழு பணித்தது.
	நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை **நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சு**	**2014 செப்டெம்பர் 26**
1.	UDA சட்டத்தின் உபபிரிவு16(2)இற்கு அமைவாகக் குறைந்த செலவின வீட்டு வேலைத்திட்டங்களுக்கு நிதிகளை வழங்குவதற்கான சேவைக்கட்டணமாக ஆதன அபிவிருத்தியாளர்களிடமிருந்து UDA சேகரித்த ரூ.207,231,731இனை அதிகாரசபையின் நிதியத்திற்கு வரவுவைக்க வேண்டியுள்ளதெனக் குழு அவதானித்தது. (பார்க்க – கணக்காய்வுப் பந்தி இல: 36 – 2008)	குறிப்பிட்ட தொகையை மீளப்பெறுவதற்காகப் பல படிகளை மேற்கொண்டிருந்ததாக CAO/AO வெளிப்படுத்தினார். தீர்வொன்றை எட்டுவதைக் குறித்துச் சம்பந்தப்பட்ட அமைச்சருடன் கலந்தாலோசித்துக் குழுவிற்கு அறிக்கையிடுமாறு CAO பணிக்கப்பட்டார்.

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
2.	வீடுகள் நிர்மாணத்தில் இடையீட்டாளர்களாகச் செயற்படுகின்ற 29 சனசமூக அடிப்படையிலான சங்கங்கள் அருணோதய நகர வறிய வீட்டு வேலைத்திட்டத்தின் கீழ் அதிகாரசபையால் அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.6,094,976/= இனைப் பெற்று அதனைப் பயனாளர்களுக்கு வழங்காது தக்கவைத்துக்கொண்டிருப்பதனையும் குழு அவதானித்தது. (பார்க்க – செயலாற்றுகை – 2009)	அதிகாரசபை உருவாக்கப்பட முன்னரே இவ்வேலைத்திட்டம் நடத்தப்பட்டதாயினும் இச்சங்கங்களிலிருந்து ரூ.2,673,805 இனை மீளப்பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக CAO/AO தெரியப்படுத்தினார். குழு இது ஒரு மோசடி எனக் குறிப்பிட்டதுடன் மிகுதியை மீளப்பெற்றுக்கொள்வதற்காகச் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பணித்தது.
3.	அருணோதய நகர வறிய வீட்டு வேலைத்திட்டத்திலுள்ள வீட்டுத்தொகுதியொன்றிலிருந்து ரூ.1000/= ஐ வைத்துக்கொண்டு 1000 சுவர்க்கடிகாரங்கள் ரூ.630,000/= செலவில் 09.03.2011 அன்று கொள்வனவு செய்யப்பட்டு எல்லா வீட்டுத்தொகுதிகளுக்கும் அதிகாரசபையின் அதிகாரிகள் மற்றும் பணிப்பாளர்களுக்கும் வழங்கப்பட்டதையும் குழு அவதானித்தது. (பார்க்க – செயலாற்றுகை – 2009)	இக்கொடுக்கல் வாங்கல் குறித்துக் குழு திருப்தியடையாததுடன் எஞ்சியுள்ள 213 சுவர்க்கடிகாரங்களுக்குப் பொருத்தமான நடவடிக்கை மேற்கொண்டு கணக்காய்வாளர் நாயகத்திற்கு அறிக்கையிடுமாறும் குழு பணித்தது.
	தெங்கு ஆராய்ச்சி நிறுவகம் **தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சு**	**2014 செப்டெம்பர் 26**
1.	வட மாகாணத்திலிருக்கும் காணியைப் பாவிப்பதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பாக முன்னைய அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுக்கூட்டத்தில் (COPE) விடுக்கப்பட்ட பணிப்புரை தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்துக் குழு விசாரித்தது.	நாற்றுப்பண்ணையொன்றை அமைப்பதற்காக வனசீவராசிகள் வளப்பேணுகை அமைச்சு தனது காணியொன்றை விடுவிக்கவுள்ளதாக CAO/AO தெரிவித்தார்.

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
2.	நாட்டிலுள்ள தேங்காய் தரும் தென்னைமரங்களின் எண்ணிக்கை தொடர்பான இற்றைப்படுத்தப்பட்ட தரவுகள் இல்லை.	தகவல் சேகரிப்புத் தொடர்பாகக் கிராம அலுவலர், பொருளாதார அபிவிருத்தி அலுவலர்கள், விவசாய விரிவாக்க அலுவலர்கள் போன்ற அடிமட்ட நிலையிலுள்ள அதிகாரிகளைக் கூட்டிணைக்கும் ஒரு பொறிமுறை இருத்தல் வேண்டும்.

உபகுழு IIIஇனால்
பரீட்சிக்கப்பட்ட நிறுவனங்கள்

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	சமூக அபிவிருத்தி பற்றிய தேசிய நிறுவகம் **சமூக சேவைகள் அமைச்சு**	**2014 ஆகஸ்ட் 20**
1.	2012ஆம் ஆண்டிற்கான செயற்றிட்டத்தில் கூறப்பட்டிருந்த பின்வரும் செயற்பாடுகள் அவ்வருடத்திற்குள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. (i) நூலக நூல்களைக் கணணிமயமாக்கல் மற்றும் நூலகத்தைத் தன்னியக்க நூலகமாக மாற்றியமைத்தல். (ii) யூனியன் சுட்டியுடன் இணைந்து தேசிய மற்றும் ஏனைய நூலகங்களிடையே தொடர்பு. (iii) இணையத்தினூடான நூலகத்தின் சர்வதேசமயமாக்கல்.	நிறுவகம் முன்னர் இயங்கிய வாடகைக் கட்டடத்தில் நிலவிய இடப்பற்றாக்குறை காரணமாக இப்பணி பூரணப்படுத்தப்பட முடியவில்லையெனவும் இதனால் நாரஹேன்பிட்டவில் ஒரு விசாலமான கட்டடம் 2013ஆம் ஆண்டிலிருந்து வாடகைக்குப் பெறப்பட்டுள்ளதெனவும் CAO/AO தெரிவித்தார்.
2.	வெற்றிடங்களை நிரப்புவதற்காக ரூ.362,826/= செலவில் விண்ணப்பங்கள் கோரப்பட்டு வாய்மொழித் தேர்வு நடாத்தப்பட்டு 07 விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்பட்டிருந்தபோதிலும் அவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. மாறாக வேறு 07 பேர் வேறொரு நேர்முகத்தேர்வின் மூலம் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர்.	தாம் ஜனவரி 2013இல் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டிருந்தபோது மேற்குறிப்பிடப்பட்ட விடயம் 06 வருடங்களுக்கும் மேலாக இழுத்தடிப்புச் செய்யப்பட்டு வந்திருந்ததாகவும் இது மிகவும் பிரச்சினைக்குரியதாகக் காணப்பட்டதாகவும் AO தெரிவித்தார். ஆகவே, கௌரவ அமைச்சரினதும் பணிப்பாளர் சபையினதும் வழிகாட்டலோடு இவ்வெற்றிடங்கள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு முறையாக நிரப்பப்பட்டிருந்தது.
3.	நிறுவகத்தின் கல்விசார் தலைவராக 03 ஏப்ரல் 2006 தொடக்கம் ஒரு வருடத்திற்கு அமைச்சரவையின் அனுமதியுடன்	இவ்வுண்மையை ஏற்றுக்கொண்ட CAO/AO அண்மையில் அவசியமான அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்காக ஒரு புதிய

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	சேர்த்துக்கொள்ளப்பட்ட பேராசிரியரொருவர் இக்காலத்திற்கு மேலாக மார்ச் 2012 வரை வேலையில் அமர்த்தப்பட்டிருந்ததுடன் ரூ.1,430,215/= முகாமைத்துவ சேவைகள் சபையினதோ அமைச்சரவை அமைச்சர்களினதோ அனுமதியின்றிக் கொடுப்பனவாக வழங்கப்பட்டிருந்தது.	அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததாகத் தெரிவித்தார்.
	மாற்றுத்திறனாளிகளுக்கான தேசியச் செயலகம் **சமூக சேவைகள் அமைச்சு**	**2014 ஆகஸ்ட் 20**
1.	கௌரவ அமைச்சருடன் கலந்துரையாடவும் சட்டமா அதிபருக்குச் செயலகத்தால் சமர்ப்பிக்கப்பட்ட அங்கவீனர் உரிமைச் சட்டத்தின் வரைபு தொடர்பாக ஐக்கிய நாடுகள் கட்டளைச் சட்டத்திற்கமைவான பொருத்தமான நடவடிக்கை எடுக்குமாறும் கட்டளையிடப்பட்டிருந்தது.	சபை உறுப்பினர்கள் கணக்காய்வாளர் நாயகத்தால் அனுமதிக்கப்பட்ட வரைபை இற்றைப்படுத்தத் தீர்மானித்திருந்ததால் இந்நோக்கத்திற்காக நியமிக்கப்பட்டிருந்த குழு சர்வதேசக் கட்டளைச் சட்டத்திற்கமைவாக வரைபை இற்றைப்படுத்தியிருந்ததோடு அதனை ஏற்கனவே கௌரவ அமைச்சரின் அனுமதியைப் பெறுவதற்காகச் சமர்ப்பித்திருந்ததாக CAO/AO தெரிவித்தார்.
2.	வீட்டு உபகரணங்கள், சுயதொழில் உபகரணங்கள், மருத்துவ மற்றும் கல்வி உபகரணங்கள் போன்றவற்றுக்காக முழுமையாக ரூ.22 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் இச்செலவினங்களை உறுதி செய்வதற்காகச் செயலாற்றுகை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லையெ	தமது தரப்பில் குறைபாடொன்று இருந்ததென்பதையும் பின்னாய்வு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதையும் CAO/AO ஒப்புக்கொண்டு தற்போது இதனைச் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததெனத் தெரிவித்தார். மானியங்கள் பிரதேச சபைகளின் மூலம்

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	னக் குழு அவதானித்தது.	விடுவிக்கப்பட்டிருந்ததால் எல்லாப் பிரதேசசபைகளுக்கும் இதன் வளர்ச்சி தொடர்பாக அறிக்கையிடுமாறு ஒரு சுற்றுநிருபத்தை அனுப்புமாறு குழு பணித்தது.
3.	வவுச்சரில் பெயர் குறிப்பிடப்பட்டவரின் சட்டபூர்வமான முகவரல்லாத ஒருவருக்கு வரவு செலவுக் குறிப்பேட்டில் பதியப்படாமல் ரூ.651,900/= செலுத்தப்பட்டிருந்தது அவதானிக்கப்பட்டது. (பார்க்க – கணக்காய்வுப் பந்தி 1.2.3 – 2011)	CAO/AO வின் பதிலில் குழு திருப்தியடையாததோடு அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவிற்கும் கணக்காய்விற்கும் இவ்விடயம் தொடர்பான விளக்கமான அறிக்கையொன்றை அனுப்பிவைக்குமாறு பணித்தது.
4.	கொள்வனவுக் குழுவின் அனுமதியின்றி ரூ.2,56,648/= பெறுமதியான மூக்குக்கண்ணாடிகள் ஏன் கொள்வனவு செய்யப்பட்டிருந்தனவெனக் குழு விசாரித்தது. (பார்க்க – கணக்காய்வுப் பந்தி 3.2(a) – 2012)	10,000 மூக்குக் கண்ணாடிகளுக்கான விலைகள் கோரப்பட்ட விளம்பரம் பத்திரிகையொன்றில் பிரசுரிக்கப்பட்டுப் பின்னர் மூக்குக்கண்ணாடிகளுக்கான வேறு பல கோரிக்கைகளும் இடைக்கிடை சேர்த்துக்கொள்ளப்பட்டு 2012ஆம் ஆண்டிலிருந்து வரவு செலவுத்திட்ட ஒதுக்கீட்டின் வரையறைகளுக்கு உட்பட்ட கொள்வனவு முறையினைப் பின்பற்றுவதன் மூலம் இது திருத்தப்பட்டே இம்மூக்குக் கண்ணாடிகள் கொள்வனவு செய்யப்பட்டதாக CAO/AO தெரிவித்தார்.
5.	2010, 2011 மற்றும் 2012ஆம் ஆண்டுகளின் நிதி ஒதுக்கீட்டில் பெருமளவு மூக்குக்கண்ணாடி விநியோகத்திற்கெனச்	இம்மூக்குக்கண்ணாடிகள் நடமாடும் செயலகத்தில் கையளிக்கப்பட்டதாகவும், அவ்வேளையில் கடமையிலிருந்த

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	செலவிடப்பட்டிருந்தது. உதாரணமாக 2012இல் 95,392 மூக்குக்கண்ணாடிகளுக்காக ரூ.13 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. ஆயினும் மூக்குக்கண்ணாடிகள் பெறுநருக்குக் கிரமமாகக் கையளிக்கப்பட்டனவா? என்னும் விடயம் தொடர்பில் முன்னேற்ற அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லையெனக் குழு அவதானித்தது.	அதிகாரிகள் பெறுநர்களின் பட்டியலொன்லைப் பேணி வந்திருந்ததாகவும் 2012ஆம் ஆண்டின் பின்னர் ஒரு தனியான அதிகாரி இந்நோக்கத்திற்காக நடமாடும் செயலகத்தில் பங்குபெறுவதற்கு நியமிக்கப்பட்டிருந்ததாகவும் CAO/AO தெரிவித்தார். முழுமையான செயன்முறை அடங்கலான முன்னேற்ற அறிக்கையொன்றை அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவிற்கும் (COPE) கணக்காய்விற்கும் அனுப்புமாறு குழு பணித்தது.
	***கொழும்பு கொமர்ஷல் உரக்கம்பனி* கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சு**	**2014 ஆகஸ்ட் 20**
1.	அனுராதபுரத்தைச் சேர்ந்த பங்கு விநியோகத்தர் ஒருவரே அப்பிரதேசத்திலுள்ள விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டிருக்கவேண்டிய ரூ.388 மில்லியன் பெறமதியாக 5000 மெற்றிக் தொன் உரமானியங்கள் தவறவிடப்பட்டமைக்குப் பொறுப்புடையவராக இருந்தாலும், 06 வருடங்கள் கடந்த பின்பும் எவரும் குற்றம் சாட்டப்படவில்லை.	இம்மோசடி குறித்து விரிவான அறிக்கையொன்றை அனுப்புமாறு குழு CAO/AO வைப் பணித்தது.
2.	பாரிய கடன் தொகையொன்று அவதானிக்கப்பட்டது. அவற்றுள் சில 30 வருடங்களுக்கு மேற்பட்ட பழமையானவையாகக் காணப்பட்டன. மானிய உரத்தைக் கடன் அடிப்படையில் விற்பனை	CAO இன் பிரகாரம் கமநல சேவைகள் நிலையங்கள் கமக்காரர்களிடமிருந்து பெற்ற தொகைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்காதிருந்தமையினால் அத்தகைய பாரிய கடனாளி நிலுவையொன்று திரண்டிருந்தது.

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	செய்யக்கூடாதெனினும், 2014.03.31ஆம் திகதியில் ரூபா.7,426,920/= கடனாளி நிலுவையொன்று அவதானிக்கப்பட்டது. இம்மொத்தத்தில் ரூபா. 7,426,920/= தொகையொன்று 5 வருடங்களுக்கு மேலாக நிலுவையில் இருந்துள்ளது.	இவ்விடயம் பற்றிய விசாரணையை மேற்கொண்டு, தகுந்த நடவடிக்கையை எடுத்ததன் பின்னர் குழுவிற்கு அறிக்கையிடுமாறு CAO/AOவைக் குழு கேட்டுக்கொண்டது.
	பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு நிதி, திட்டமிடல் அமைச்சு	**2014 ஆகஸ்ட் 20**
1.	உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டிருந்தும் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் நிறைவேற்றப்படாதிருந்தன எனவும் ரூபா.2,470,000/=, ரூபா.6,908,568/= மற்றும் ரூபா.6,013,767/= செலவினம் முறையே 2011, 2012 மற்றும் 2013ஆம் வருடங்களில் செலுத்தப்படவேண்டிய செலவினமாகக் கணக்கிற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன என்பதைக் குழு சுட்டிக்காட்டியது.	CAO/AO பதிலளித்த விதத்தில் திருப்தியடையாத குழுவானது அவ்வாறான விடயங்கள் எதிர்காலத்தில் இடம்பெறாதிருக்கும் வகையில் நடவடிக்கை எடுக்குமாறு பணித்தது.
2.	ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களின் உழைக்கும் போதே செலுத்தும் வரியானது (உ.பொ.செ.வ) அவ்வுத்தியோகத்தர்களே செலுத்தவேண்டியிருந்தும் 2011ஆம் ஆண்டில் ரூபா.456,676/= ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது என்பதைக் குழு அவதானித்ததுடன் ரூபா.665,579/=, ரூபா.843,153/= மற்றும் ரூபா.751,606/= உ.போ.செ. வரியானது உத்தியோகத்தர்களின் அடிப்படைச் சம்பளத்தின் பிரகாரம் முறையே 2012, 2013 மற்றும்	உ.போ.செ. வரியை உத்தியோகத்தர்களின் முழுமையான சம்பளத்தின் பிரகாரம் கணக்கிட்டுக் கழிப்பதற்கு CAO/AO இணங்கினார்.

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	2014ஆம் ஆண்டுகளில் ஆணைக்குழுவினால் செலுத்தப்பட்டிருந்தது என்பதையும் அவதானித்தது.	
	***இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழு* தொழில்நுட்ப, ஆராய்ச்சி அமைச்சு**	**2014 ஆகஸ்ட் 22**
1.	தேசியமட்டத்தில் இனங்காணப்பட்ட 500 புத்தாக்குநர்களில் 08 புத்தாக்குநர்களுக்கு மட்டும் ரூபா.2,041,629/= நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டிருந்ததை அவதானித்த குழு அந்த 08 புத்தாக்குநர்களின் தற்போதைய நிலை குறித்து விசாரித்தது.	அந்த 08 புத்தாக்குநர்களில் ஒருவர் பாடசாலை மட்டத்திலும் ஏனையோர் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட நிதி உதவியின் மூலமும் அவர்களின் கண்டுபிடிப்புகளையும் விருத்தி செய்திருந்தனர் எனவும் ஒவ்வொரு புத்தாக்குநரையும் கண்காணிக்க ஒரு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருந்தார் எனவும் CAO/AO கூறியவேளையில் அந்த 08 புத்தாக்குநர்கள் பற்றிய முன்னேற்ற அறிக்கையொன்றைக் கணக்காய்வுக்கு அனுப்புமாறு குழு பணித்தது.
2.	மோட்டார் வாகனங்களை அகற்றும் நடவடிக்கை மூலம் கிடைக்கப்பெற்ற ரூபா.1,036,000/= வருமானத்தை 2004 ஆகஸ்ட் 31ஆம் திகதிய 353ஆம் இலக்க அரசாங்க சுற்றறிக்கையின் பிரகாரம் திரண்ட நிதியத்தில் வரவு வைக்கவேண்டியிருந்தும் அத்தொகையானது ஆணைக்குழுவின் நிதியத்தில் வரவு வைக்கப்பட்டிருந்ததைக் குழு அவதானித்தது.	விஷேட அங்கீகாரம் ஏதும் பெற்றிருக்கவில்லையென்பதுடன் ஆணைக்குழு அவ்வேளையில் சம்பளங்களைச் செலுத்துவதற்குரிய போதிய நிதி ஒதுக்கீடுகளைக் கொண்டிராததால் 2011இல் அந்தப்பணம் உபயோகிக்கப்பட்டதாகவும், அந்நிலைமை தொடர்பில் அமைச்சுக்கும் அறிக்கையிடப்பட்டதாகவும் CAO/AO கூறினார்.
3.	கீழே குறிப்பிட்டுள்ள இரண்டு நிதிகள் 2007ஆம் ஆண்டு முதல் பயன்படுத்தப்படாமல் உள்ளமை ஏன் எனக் குழு வினவியது.	2013ஆம் ஆண்டில் அவர்கள் ரூபா.3.5 மில்லியன் பெற்றிருந்தனர் எனவும் அதில் ரூபா.2.5 மில்லியன்

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
	i. புத்தாக்குநர்களின் நிதியம். ii. பொலநறுவை மாவட்ட நிதியம்.	வெளிப்படைத் தன்மையுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய புத்தாக்குநர்களுக்கு வழங்கப்பட்டதாகவும், 2013ஆம் ஆண்டில் அவர்கள் ரூபா.3.5 மில்லியன் பெற்றிருந்தனர் எனவும் அதில் ரூபா.2.5 மில்லியன் வெளிப்படைத்தன்மையுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய புத்தாக்குநர்களுக்கு வழங்கப்பட்டதாகவும் தற்சமயம் இரண்டு நிதியங்களும் ஒன்றிணைக்கப்பட்டு நிதியுதவிகள் வழங்குவதற்கான வெளிப்படைத் தன்மையான ஒழுங்குமுறையொன்று மேற்கொள்ள முன்னேற்றம் பற்றிய தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் அந்நோக்கத்திற்கான பணிப்பாளர் சபையின் அங்கீகாரமும் பெறப்பட்டிருந்ததாகவும் கூறப்பட்டது. அத்தீர்மானத்தின் விபரங்களைக் கணக்காய்வுக்கு அனுப்புமாறு குழு பணித்தது.
	ஒத்திசைவு மதிப்பீட்டுக்கான இலங்கை ஏற்றங்கீகார சபை **தொழில்நுட்ப, ஆராய்ச்சி அமைச்சு**	**2014 ஆகஸ்ட் 22**
1.	சம்மந்தப்பட்ட ஏனைய நிறுவனங்களான ஆய்வுகூடங்கள், வைத்தியசாலைகள் போன்றவை இந்நிறுவனத்திடமிருந்து ஏற்றங்கீகாரத்தைப் பெறவேண்டிய கட்டாயத் தேவையில்லை.	இந்நிறுவனமானது ஏற்றங்கீகாரமளிக்கப்பட்ட நிறுவனங்களின் பட்டியல் ஒன்றையாவது ஆண்டு தோறும் பொதுமக்களின் விழிப்புணர்வுக்காக வெளியிடவேண்டும். இந்நிறுவனம் இதன் நோக்கு எல்லையை விரிவு படுத்தும் வகையில் சுகாதார அமைச்சு போன்ற நிறுவனத்துடன்

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
		ஒருங்கிணைந்து பணியாற்றவேண்டும்.
2.	திருப்தியான உள்ளகக் கணக்காய்வொன்று காணப்படவில்லை.	வெற்றிடத்தை நிரப்பவும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவைப் பலப்படுத்தவும் CAO/AO இணங்கினார்.
3.	2012.05.02ஆம் திகதியில் ரூபா.300,000/= மாத வாடகைக்கு அமர்த்தப்பட்ட கட்டடமொன்றில் அமைந்திருந்த அலுவலக வளாகத்தின் மதிப்பீட்டு அறிக்கையொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	CAO தவறை ஏற்றுக்கொண்டதுடன் அவர்கள் அவர்களுக்குரித்தான புதிய இடமொன்றுக்குச் செல்வதற்கு விரும்புவதாகவும் இந்நோக்கத்திற்காக மாலெவ்வையில் காணித்துண்டொன்றை வழங்குவதற்கு IT இணங்கியிருந்ததாகவும் தெரிவித்தார்.
	கடல் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை **சுற்றாடல் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு**	**2014 ஆகஸ்ட் 22**
1.	ஏனைய ஆசிய நாடுகளுடன் ஒப்பீட்டளவில் கடல் சுற்றாடல் மாசு மற்றும் இலங்கையின் தரம் தொடர்பில் கணிப்பீடு செய்வதற்கான சுட்டி ஏதும் இருந்ததாவெனக் குழு விசாரித்தது.	நாட்டின் ஒட்டுமொத்தக் கடல் மாசைக் கணிப்பிடுவதற்கான அத்தகைய துல்லியமான சுட்டி இருக்கவில்லையெனவும் ஆனால் ஷெனன் வைநர் டைவர்சிடி இன்டெக்ஸ் (Shanon wiener diversity Index) COD மற்றும் BOD போன்ற பல்வேறு மட்டங்களிலான நீர்மாசு கணிப்பிடும் சில சுட்டிகள் காணப்படடதாகவும் CAO/AO கூறினார். அவ்விடயம் பற்றிய விபரமான அறிக்கையொன்றை ஒருமாத காலத்திற்குள் சமர்ப்பிக்குமாறு CAO/AO வைக் குழு பணித்தது.

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
2.	"தேர்மோபைல்" (Thermophile) எனப்பெயரிடப்பட்ட கப்பல் மூழ்கியதன் காரணமாக ஏற்பட்ட சுற்றாடல் மாசடைதலைத் தடுப்பதற்குத் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாமல் இருந்தமை ஏன் எனக்குழு விசாரித்தது. (மேற்கோள் -செயலாற்றுகை - 2012)	அவர்கள் அவ்விடயம் தொடர்பாக மொரட்டுவ பொலிஸ் நிலையத்தில் புகார் செய்திருந்ததாகவும், ஆயினும் விசாரணைக் குறிப்புக்களைச் சட்டத்துறைத் தலைமை அதிபதி திணைக்களத்திற்குப் பெற்றுக்கொள்வதில் தாமதமொன்று காணப்பட்டதாகவும் CAO/AO கூறினார். பொலிஸ் விசாரணைக் குறிப்புக்களை 2014 யூன் 23ஆம் திகதி கையளித்ததாகவும் குற்றச்சாட்டுப்பத்திரம் விரைவில் தயாராகிவிடும் எனவும் அவர் மேலும் கூறினார். சட்டத்துறைத் தலைமை அதிபதியிடம் கதைத்து நீதிமன்ற வழக்குத் தொடர்பாக அவசியமான நடவடிக்கை எடுக்குமாறு CAO/AO வைக் குழு பணித்தது.
3.	கிடைக்கப்பெற்ற நிதிகள் முறையாகப் பயன்படுத்தப்படாதிருந்தமையால், அதிகாரசபையானது செற்றிட்ட நடவடிக்கைகளை நிறைவேற்றுவதில் பிரச்சினைகளை எதிர்கொண்டிருந்தது என்ற அபிப்பிராயத்தைக் குழு கொண்டிருந்தது.	2013ஆம் ஆண்டுக்கான மதிப்பீடு ரூபா.45 மில்லியன் ஆயினும் ரூபா.32 மில்லியன் மட்டுமே செலவிடப்பட்டிருந்ததெனவும், கேள்விப்பத்திர செயற்பாட்டில் எழுந்த பிரச்சினையொன்றின் காரணமாக ரூபா.14 மில்லியன் பயன்படுத்தப்பட முடியாமல் போனதெனவும் CAO/AO கூறினார். 34 கருத்திட்டங்கள் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டிருந்ததுடன் அவற்றுள் ஒன்றுமே அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை எனவும் அதன் விளைவாக நடவடிக்கைகளைச் செயற்றிட்டத்திற்கமைய

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
		நிறைவேற்ற முடியாது போயுள்ளதெனவும் CAO மேலும் கூறினார்.
	இரத்தினக்கல், ஆபரண ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவகம் **சுற்றாடல் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு**	**2014 ஆகஸ்ட் 22**
1.	நிறுவனத்தின் குறிக்கோள்கள் பற்றிக் கலந்துரையாடிய குழு இரத்தினக்கல் கனிப்பொருள்கள் அகழ்வாய்வு மற்றும் ஏனைய நோக்கங்கள் எந்த அளவுக்கு அடையப்பட்டுள்ளன என விசாரித்தது.	2007ஆம் ஆண்டுமுதல் நாட்டின் வடமாகாணத்தைத் தவிர்ந்த 08 மாகாணங்களில் இரத்தினக்கல் சுரங்கங்களை அகழ்வாய்வு செய்வதற்கான கருத்திட்டங்கள் தாபிக்கப்பட்டிருந்தும் 2012ஆம் ஆண்டு வரையில் ஆராய்ச்சி உத்தியோகத்தர்களையும் புவிச்சரிதவியல் ஆய்வாளர்களையும் ஆட்சேர்ப்பதற்கான அங்கீகாரம் திறைசேரியிடமிருந்து கிடைக்காமையால் இக்கருத்திட்ட நோக்கங்களை அடைய முடியாமல் போனது என AO கூறினார். இருப்பினும், சாத்தியமான 03 மாவட்டங்களில் 02 ஆராய்ச்சி உத்தியோகத்தர்களுடன் மட்டும் அகழ்வாய்வுகள் செய்து முடிக்கப்பட்டிருந்தன.
2.	இரத்தினக்கல் அகழ்வாய்வின் மூலம் ஈட்டப்பட்ட வருமானம் பற்றிய கலந்துரையாடலொன்றைக் குழு மேற்கொண்டிருந்தது.	தரவுகள் நிறுவகத்தில் கிடைக்கக்கூடியதாக இருக்கவில்லையென வெளிப்படுத்தப்பட்டது. வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள் தயாரித்துத் திறைசேரியிடமிருந்து நிதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு நிறுவகம் தகவல்களைக் கொண்டிருக்கவேண்டுமென்ற அபிப்பிராயத்தைக் குழு கொண்டிருந்தது. இரத்தினக்கல்

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
		ஆபரணத்துறை சார்ந்த நாட்டின் நோக்கங்களை அடைவதற்குப் புவிச்சரிதவியல் அளவைச் சுரங்கங்கள் பணியகத்துடன் ஒருங்கிணைந்து தகவல்களைப் பெற்று, இணைந்து பணியாற்றுமாறு CAO/AO பணிக்கப்பட்டார்.
3.	இரத்தினக்கல் கைத்தொழிற்றுறையில் முழுமையாக ஈடுபட்டுள்ள பல்கலைக்கழகம் அல்லது ஆராய்ச்சி நிறுவகமொன்றைச் சேர்ந்த நபர் ஒருவர் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாகச் சபைக்கு நியமனம் செய்யப்படல் வேண்டும் என்ற நிலைப்பாடிருந்தும் அவ்வாறான நபரொருவர் நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை.	இவ்விடயத்தைச் சீர்படுத்தும் வகையில் கௌரவ அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருமாறு CAO பணிக்கப்பட்டார்.
4.	தங்கம் மற்றும் வெள்ளி கையிருப்பு துஷ்பிரயோகம் தொடர்பான ரூபா.1,495,745/= நிலுவைத்தொகை மற்றும் வாகனக்கடன் தொகையான ரூபா.56,250/= ஆகியவற்றைச் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து அறவிடுவதற்கு 2013ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	ஜனாதிபதி விசாரணைப் பிரிவால் விசாரணையொன்று முன்னெடுக்கப்பட்டதுடன், பொறுப்புக் கூறவேண்டிய உத்தியோகத்தர் குற்றத்தை ஏற்றுக்கொண்டு ரூபா.900,000/= செலுத்தியிருந்தார். நிலுவைத் தொகை தீர்க்கப்படாதிருந்தமையால் இவ்விடயம் சட்டத்துறைத் தலைமை அதிபதியின் திணைக்களத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டதுடன், சட்டத்துறைத் தலைமை அதிபதியின் பணிப்புரையின் பிரகாரம் பணிக்கொடைக் கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்டிருந்தது. நிலுவையை அறவிடும் முகமாகத் தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
		வழக்கு இன்னும் விசாரணையிலிருந்தது.
5.	2008 முதல் 2001ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் இரத்தினக்கல் படிமங்களை அகழ்வாய்வு செய்வதற்காக ரூபா.36 மில்லியன் திறைசேரியால் வழங்கப்பட்டிருந்தும் அப்பணியானது ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் பற்றாக்குறையால் பூர்த்தியாக்கப்பட்டாதிருந்தது.	எதிர்காலத்தில் அத்தகைய கருத்திட்டங்களின் முன்னேற்றத்தை நுணுக்கமாகக் கண்காணிக்குமாறு CAO பணிக்கப்பட்டார்.
6.	2012ஆம் ஆண்டில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்திற்கு (SLIDA) இணங்கப்பட்ட தொகையின் 50% வழங்கப்பட்டிருந்தும், 2014ஆம் ஆண்டளவில் தாபன நடைமுறையொன்றின் தயாரிப்பு முற்றுப்பெற்றிருக்கவில்லை.	2013 ஏப்பிரல் மாதத்திலேயே புதிய தலைவர் நியமனம் செய்யப்பட்டதாகவும் கணக்கீட்டு மற்றும் நிர்வாகப் பிரிவுகளைச் சேர்ந்த பிரதம உத்தியோகத்தர்களும் நிறுவகத்திலிருந்து இராஜினாமா செய்திருந்ததாகவும், அதன் விளைவாகவே தாமதங்கள் ஏற்பட்டிருந்தன எனவும் AO கூறினார்.
7.	நிறுவகத்தின் நோக்கங்களை அடைதல்.	நிறுவகமானது சம்பந்தப்பட்ட சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள நோக்கங்களை அடைவதற்கான முயற்சியில் ஈடுபட்டு, அதற்கிணங்க முன்னேற்றத்தை மீளாய்வு செய்கின்றதென்பதை உறுதிசெய்யுமாறு CAO/AO வைக் குழுவின் தவிசாளர் பணித்தார்.
8.	ரூபா 10 மில்லியன் பெறுமதிவாய்ந்த உயர் தொழில்நுட்ப சூட்டடுப்பின் தற்போதைய நிலைமை தொடர்பாக விசாரிக்கப்பட்டது.	AO விற்கிணங்க, அந்தச் சூட்டடுப்பானது ஆராய்ச்சி நோக்கங்களுக்காகவே 2013 டிசம்பரில் கொண்டுவரப்பட்டு, ஆரம்பத்தில் கொழும்பிழல்

	அடையாளங்காணப்பட்ட பிரதானவிடயங்களும் பிரச்சினைகளும்	COPE இன் பரிந்துரைகளும் பணிப்புரைகளும்
		தாபிக்கப்பட்டுமிருந்துள்ளது. பின்னர் முன்னாள் தலைவரின் தனிப்பட்ட விருப்பத்துக்கிணங்க இரத்தினபுரிக்குக் கொண்டுசெல்லப்பட்டிருந்தது. சூட்டடுப்பு இரத்தினபுரியிலிருந்த வேளையில் ஆராய்ச்சி உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்குக் கடினமாக இருந்ததாலும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடனான சிறந்த ஒருங்கிணைப்புக்காகவும் ஆய்வுகூடமானது கொழும்புக்கு மாற்றப்பட்டிருந்தது. ஆயினும் அவர்களால் பல்வேறு தலையீடுகள்ட காரணமாகச் சூட்டடுப்பைக் கொழும்புக்குக் கொண்டுவர இயலாதிருந்தது. ஆராய்ச்சியாளர்கள் கொழும்பிலிருக்கும் வேளையில் அவ்வியந்திரத்தை வெறுமனே இரத்தினபுரியில் வைத்திருப்பது பொதுமக்களின் பணத்தை வீண் விரயம் செய்வதாகும் என்பதால் கௌரவ அமைச்சருடன் கலந்துரையாடியதன் பின்னர் இயந்திரத்தைக் கொழும்புக்குக் கொண்டுவரத் துரித நடவடிக்கை மேற்கொள்ளுமாமறு CAO/AO பணிக்கப்பட்டார்.